# புதிய ஜனநாயகம்

ஜூலை 2014
ரூ.10.00




# காவி கல்லுளிமங்கன்!

# “அனைத்து தனியார் பள்ளிகளையும் அரசுடமையாக்கு! அனைவருக்கும் தாய்மொழியில் கல்வி வழங்கு!!”

### – மனித உரிமைப் பாதுகாப்பு மையமும் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும் இணைந்து நடத்திய கல்வி தனியார்மய ஒழிப்பு மாநாடு – பொதுக்கூட்டம்

**கோ**டை என்றால் கத்தரி வெயில் கட்டாயம் என்பதைப் போல, ஜூன் மாதம் தொடங்கிவிட்டாலே தனியார் பள்ளி மா.ஃபியாக்களின் வரைமுறை யற்ற கட்டணக் கொள்ளையும் இவற்றுக் கெதிரானப் போராட்டங்கள் நடை பெறுவதும் வாடிக்கையாகிவிட்டது.

இத்தகையச் சூழலில், ‘‘பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்த்து பள்ளிகளின் தரம் உயர்த்தப் போராடாமல் கட்டணக் கொள்ளையடிக்கும் தனியார் ஆங்கில வழி பள்ளிகளில் சேர்த்து விட்டு கட்டணச் சுமையை வாழ்நாள் முழுவதும் தங்கள் தோளில் சுமப்பது முட்டாள்தனமாது’’ என இடித்துரைக்கும் விதமாகவும்; அரசி யலமைப்புச் சட்டம் அடிப்படை உரிமையாக அறிவித்துள்ளபடி அனைவருக்கும் இலவசக் கல்வியை வழங்கக் கோரியும்; அனைத்துத் தனியார் பள்ளிகளையும் அரசுடமையாக்கக் கோரியும் மனித உரிமைப் பாதுகாப்பு மையமும் மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும் இணைந்து கடந்த ஜூன்-7 அன்று விருத்தாச்சலத்தில் கல்வி தனியார்மய ஒழிப்பு மாநாட்டை நடத்தின.

மேல்நிலை வகுப்பில் ஆயிரத்திற்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்ற போதிலும் குடும்ப வறுமை காரணமாக கல்லூரியில் சேர முடியாத விரக்தியில் தற்கொலை செய்து கொண்ட கம்மாபுரம் அரசுப்பள்ளி மாணவிகள் கிருத்திகா, சரண்யா நினைவாக அமைக்கப்பட்ட அரங்கில், கட்டணக் கொள்ளையால் உயிர்நீத்த




மாணவர்கள், பெற்றோர்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தி மாநாட்டு நிகழ்வுகள் தொடங்கப்பட்டன.

முற்பகலில் நடைபெற்ற அமர்வில், ‘‘அரசுப் பள்ளிகளோடு தனியார் பள்ளிகளை ஒப்பிட முடியாது!’’ என்ற தலைப்பில் உரையாற்றிய நாமக்கல் கந்தசாமிகண்டர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் ந.சி.சந்திர சேகரன் அவர்கள், ‘‘தனியார் பள்ளிகளில் 10-வது பாடத்தை 9-ஆவதிலும், 12-ஆம் வகுப்புப் பாடத்தை 11-ஆவதிலும் நடத்தி முறைகேடாகவும் உருப்போடுதல் முறையிலும் மாணவர்களைத் தயாரித்து அதிக மதிப் பெண் எடுக்க வைக்கிறார்கள்’’ என்பதைச் சுட்டிக்காட்டி, ‘‘சராசரி மாண வனை நன்றாகப் படிக்க வைப்பதுதான் கல்வியின் சாதனை, ஆசிரியரின் திறமை. இதனைத்தான் அரசுப்பள்ளி ஆசிரியர்கள் செய்து வருகிறார்கள்’’ என்றும் ஒப்பிட்டுப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து, ‘‘இலவசக் கல்வியின் கழுத்து நெறிக்கும் தீர்ப்புகள்!’’ என்ற தலைப்பில் ம.உ.பா.மையம் சென்னைக் கிளையைச் சேர்ந்த வழக்குரைஞர் ச.மீனாட்சி அவர்களும்; ‘‘கல்விக் கொள்ளையர் களாக அதிகாரிகளும், அரசியல்வாதிகளும்!’’ என்ற தலைப்பில் பு.மா.இ.மு.வின் மாநில அமைப்பாளர் தோழர் த.கணேசன் அவர்களும் உரையாற்றினர்.

மதிய அமர்வில், ‘‘பள்ளிக் கூடங்களுக்காக மாணவர்களா? மாணவர் களுக்காகப் பள்ளிக் கூடங்களா?’’ என்ற தலைப்பில் அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற விவாத அரங்கம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, விருத்தாசலத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பில் சிறந்த தேர்ச்சி கொடுத்த ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி கவுர விக்கப்பட்டனர். மேலும், மாணவர்களுக்குப் போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்பட்டது.



அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 30 மாண வர்களுக்கு ஒரு ஆசிரியர், போதுமான வகுப் பறை, சுகாதாரமான குடிநீர், கழிப்பறை வசதி, விளையாட்டு மைதானம், ஆய்வுக் கூடம், நூலகம், சுற்றுச்சுவர், போதிய ஊழியர்கள் ஆகிய

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 29 இதழ்: 9**

**ஜூலை 2014**

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

## இந்தித் திணிப்பு:

# மீண்டும் வாலாட்டும் பார்ப்பனத் திமிர்!

**வ**ளர்ச்சி, முன்னேற்றம் என்று கூறிக்கொண்டு ஆட்சியைப் பிடித்தவுடனேயே இந்தித் திணிப்பு உள்ளிட்டு தனது பார்ப்பன பாசிச நடவடிக்கைகளைத் தீவிரமாகத் தொடங்கிவிட்டது மோடி அரசு. வெளியுறவுத் துறையில் ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தியைத்தான் பயன்படுத்த வேண்டுமென்ற அறிவிப்பு ஏற்கெனவே வந்துள்ள நிலையில், 1963-ஆம் ஆண்டின் அலுவல் மொழிகள் சட்டம் மற்றும் ஆட்சி மொழிச் சட்டத்துக்கு எதிராக பொதுத்துறை வங்கிகள், நிறுவனங்கள், வெளியுறவுத்துறை உள்ளிட்ட அனைத்து அமைச்சகங்களின் அதிகாரிகள் மட்டுமின்றி, அலுவலர்களும் சமூக வலைத்தளங்களில் இந்தியில்தான் பதிவு செய்ய வேண்டும் என்று கடந்த மே 27 அன்று உள்துறை அமைச்சகத்திலிருந்து உத்தரவு போடப்பட்டுள்ளது. இதனைச் சரியாகப் பின்பற்றுவோருக்குப் பரிசுத்தொகையும் வழங்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் உள்ளிட்ட இந்தி பேசாத மாநிலங்களிலிருந்து இதற்கு எதிர்ப்பு கிளம்பியதும், இந்தி பேசும் மாநிலங்களுக்குத்தான் அந்த சுற்றறிக்கை என்று பார்ப்பனக் கும்பலுக்கேயுரிய இரட்டை நாக்குடன் ஒரு பித்தலாட்ட விளக்கத்தை அளித்து தற்காலிகமாகப் பின்வாங்கிக் கொண்டது மோடி அரசு. எனினும் இது தற்காலிகமானதே. இந்திதான் தேசிய மொழி என்றும் மற்றவை பிராந்திய மொழிகள் என்றும் உள்துறை இணை அமைச்சரான கிரண் ரிஜிஜு திமிர்த்தனமாகப் பேசுவதும், மைய அமைச்சர் ஸ்மிரிதி இரானி பள்ளிப் பாடத் திட்டத்தில் வேதம் - உபநிடதங்களைச் சேர்க்க வேண்டுமென்று கூறியிருப்பதும், மைய அமைச்சர்களில் நான்கு பேர் சமஸ்கிருதத்தில் பதவியேற்பு உறுதி மொழி எடுத்துக் கொண்டிருப்பதும், இசுலாமியருக்கு எதிரான பகைமையைத் தூண்ட காஷ்மீருக்கான சிறப்புரிமை ரத்து, பொது சிவில் சட்டம் போன்ற பிரச்சினைகளை பாரதிய ஜனதா கிளப்புவதும் பார்ப்பன பாசிசக் கும்பலின் உண்மை முகத்தை அம்பலமாக்கியிருக்கின்றன.

இந்தித் திணிப்புக்கு எதிராக தாளமுத்து, நடராசன், சின்னசாமி உள்ளிட்டு 60-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் உயிர் துறந்து, மக்கள் இயக்கமாக வளர்ந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழக வரலாற்றில் அழிக்க முடியாத கல்வெட்டாக நீடிக்கிறது என்ற போதிலும், தமிழ்வழிக் கல்வி அழிவுக்குத் தள்ளப்பட்டு தமிழகத்தில் ஆங்கில மோகம் தலைவிரித்தாடுகிறது. ஆங்கிலவழிக் கல்வியை அரசே ஊக்குவிக்கிறது. தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு ஒரு மொழிப்பாடமாகக் கூடத் தமிழைக் கற்பிக்க முடியாது என்று மெட்ரிக் பள்ளிக் கொள்ளையர்கள் வழக்கு போடும் அளவுக்கு மொழிப்பற்று மங்கியிருக்கிறது. பிள்ளைகளுக்கு சமஸ்கிருதப் பெயர் வைப்பது ஒரு பண்பாடாகப் பரவி வருகிறது. பார்ப்பன எதிர்ப்பு, சுயமரியாதைப் போராட்ட மரபு என்பது தமிழகத்தின் இளைய தலைமுறைக்குத் தெரியாத பழைய கதையாகிவிட்டது மட்டுமல்ல; அத்தகைய போராட்ட மரபுகள் குறித்த பெருமித உணர்வு மங்கி, சுயமரியாதையும் மொழிப்பற்றும் இல்லாத ஒரு பிழைப்புவாதம் இளம் தலைமுறையின் கலாச்சாரமாகப் பரவியிருக்கிறது.

அனைத்துக்கும் மேலாக, இனப்படுகொலைக் குற்றவாளி என்று உலகத்துக்கே தெரிந்த பாசிச மோடியை பல்லக்கிலேற்றி, பார்ப்பன பாசிசக் கும்பலுக்குத் தமிழக மக்கள் மத்தியில் அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்து அரியணையிலும் அமர்த்தியிருக்கிறார்கள் தமிழருவி, வைகோ, ராமதாசு, விஜயகாந்த் முதலான பிழைப்புவாதிகள். தேசிய இன அடையாளங்களை அழித்து இந்து தேசியப் பண்பாட்டைப் பரப்புவதைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு இத்தகைய புறச்சூழல் பெரிதும் சாதகமாக அமைந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் தமிழக மக்கள் இந்திக்கு ஆதரவாகப் போராடுவார்கள் என்று பா.ஜ.க.வின் இல.கணேசனால் தைரியமாகப் பேச முடிந்திருக்கிறது. நாம் எதிர்கொள்வது வெறும் இந்தித் திணிப்பு குறித்த பிரச்சினை அல்ல. தமிழகத்தின் பார்ப்பன எதிர்ப்பு மரபுக்கு விடப்பட்டிருக்கும் ஒரு சவால்!

# "லவுட் ஸ்பீக்கர்" மோடி காவி கல்லுளிமங்கன் ஆனார்!

**காங்கிரசு பாணியில் டீசல், பெட்ரோல் விலைகளையும், ரயில் கட்டணத்தையும் உயர்த்தியுள்ள மோடி, மன்மோகன் சிங் போலவே தனது அரசின் சர்ச்சைக்குரிய நடவடிக்கைகள் குறித்துப் பேசவும் மறுக்கிறார்.**


''நல்ல காலம் வரப் போகுது, நாட்டு மக்களுக்கு நரேந்திர மோடியால் நல்ல காலம் வரப் போகுது'' என பா.ஜ.க.வும் அக்கட்சியின் கூலிப்படையாக வேலை செய்து வரும் ஊடகங்களும் நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தே குறி சொல்லி வந்தன. பேச வாய்திறந்த பிள்ளை ''எப்பம்மா தாலியறுப்பே'' என்று கேட்ட கதையாக அதிர்ச்சியூட்டும் விதத்தில் பிறந்திருக்கிறது அந்த நல்ல காலம். டீசல் விலை உயர்வு, பெட்ரோல் விலை உயர்வு, ரயில் கட்டண உயர்வு - என அடுத்தடுத்து மக்களின் தலையில் இடியை இறக்கியிருக்கும் மோடியின் 'நல்லாட்சியை' வேறெப்படிக் கூற முடியும்?

டீசலுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தைப் படிப்படியாக வெட்டி, அதன் விலையை சர்வதேச 'தரத்திற்கு' உயர்த்துவது என்ற அடிப்படையில்தான் டீசலின் விலையை மாதமொன்றுக்கு 50 காசு உயர்த்தும் முடிவை முந்தைய காங்கிரசு கூட்டணி அரசு எடுத்தது. அதே முடிவின்படிதான் மோடி அரசும், தான் பதவியேற்ற 35 நாட்களுக்குள்ளாக டீசல் விலையை இரண்டு முறை உயர்த்தியிருக்கிறது.

இயற்கை எரிவாயுவின் விலையை இரண்டு மடங்கு - நான்கு டாலரிலிருந்து எட்டு டாலராக உயர்த்திக் கொள்ள ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கும் முடிவை முந்தைய காங்கிரசு அரசு எடுத்திருந்தது. நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்த முடிவை அமலுக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஆலோசனை கூட்டங்களை நடத்தியிருக்கிறது, மோடி அரசு.

காங்கிரசு கூட்டணி அரசு பெட்ரோல் விலையை உயர்த்தியபொழுது, ''நாட்டு மக்கள் மீது பெரிய சுமை ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற பட்ஜெட் தொடர் முடிந்த 24 மணி நேரத்தில் பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினை இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளதேயே இது காட்டுகிறது. இது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குப் பெரிய அவமதிப்பு ஆகும். மக்கள் ஒரு போதும் இதை மன்னிக்க மாட்டார்கள்'' என நாக்கைச் சுழற்றி காங்கிரசை விளாசித்தள்ளினார் நரேந்திர மோடி. இப்பொழுது மோடி அரசு அதே காங்கிரசு பாணி கயவாளித்தனத்தோடு, ரயில்வே பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னதாகவும், நாடாளுமன்றத்துக்குத் தெரியாமலும் ரயில் கட்டண உயர்வுகளை அறிவித்திருக்கிறது. மேலும், முந்தைய காங்கிரசு அரசு எடுத்த முடிவின்படிதான் ரயில் கட்டணத்தை உயர்த்தியிருப்பதாக ஒரு தன்னிலை விளக்கத்தையும் அளித்திருக்கிறது.

பெட்ரோல்-டீசல் விலை உயர்வு, ரயில் கட்டண உயர்வு ஆகியவற்றுக்கு அப்பால், வெங்காயம், உருளைக்கிழங்கு, சர்க்கரை உள்ளிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையும் தேர்தலுக்கு முந்தைய மாதங்களைக் காட்டிலும் அதிகரித்துள்ளன. சமையல் எரிவாயு உருளை மற்றும் மண்ணெண்ணெய்க்கு வழங்கப்



படும் மானியங்களையும் படிப்படியாக வெட்டி, அவற்றின் விலைகளையும் மாதந்தோறும் உயர்த்தவும் மோடி அரசு திட்டமிடுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

முந்தைய காங்கிரசு கூட்டணி அரசால் நியமிக்கப்பட்ட மாநில ஆளுநர்களை மாற்றத் துடிக்கும் மோடி அரசு, முந்தைய காங்கிரசு கூட்டணி அரசால் உருவாக்கப்பட்டிருந்த அமைச்சரவைக் குழுக்கள் அனைத்தையும் கலைத்த மோடி அரசு, அதன் மக்கள் விரோதக் கொள்கைகளை மட்டும் காங்கிரசை விடத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. முந்தைய காங்கிரசு கூட்டணி அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திய பொழுது, அதனை மக்கள் விரோதச் செயல் எனக் கண்டித்த மோடி அண்ட் கம்பெனி இப்பொழுது கட்டண உயர்வுகளை நாட்டின் நலன் கருதிக் கொடுக்கப்படும் கசப்பு மருந்தாக நியாயப்படுத்துகிறது.



ரயில் கட்டண உயர்வினைக் கண்டித்து கொல்கத்தா நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

நாட்டை மறுகாலனியாக்கிவரும் தனியார்மய-தாராளமயக் கொள்கையை மன்மோகன் சிங்கைக் காட்டிலும் தீவிரமாகவும் வெறித்தனமாகவும் மோடி அமல்படுத்துவார் என்பதை நாம் தொடர்ந்து கூறி வந்திருக்கிறோம். விவசாயிகளிடமிருந்து கார்ப்பரேட் நிறுவனங்களுக்காகப் பறிமுதல் செய்யப்படும் நிலத்திற்குச் சற்றுக் கூடுதலாக நட்டஈடு வழங்கும்படியான சட்டத்தை முந்தைய காங்கிரசு கூட்டணி அரசு கொண்டு வந்ததென்றால், கூடுதலாக நட்டஈடு வழங்கத் தேவையில்லை என நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர முயலுகிறது, மோடி அரசு. முந்தைய காங்கிரசு கூட்டணி அரசு ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குப் பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமான வரிச் சலுகைகளை வாரிக் கொடுத்தது என்றால், மோடி அரசோ கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் மேட்டுக்குடி வர்க்கத்தினர் மீது விதிக்கப்படும் வரிகளை ரத்து செய்ய முயற்சிக்கிறது. வரி ஏய்ப்பில் ஈடுபடும் கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது பின் தேதியிட்டு வரி விதிக்கும் சட்டத்தை முற்றிலுமாகக் கைவிட வேண்டும் என்றும் அறிவிக்கிறது.

மன்மோகன் சிங்கிற்கும் மோடிக்கும் இடையேயான வேறுபாடுகள் இவை போன்றவைதானேயொழிய, விலைவாசியைக் குறைக்கவும், ஊழலை ஒழிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் மோடியின் கையில் ஏதோ மந்திரக்கோல் இருப்பதைப்போல கார்ப்பரேட் ஊடகங்களும், பார்ப்பன பாசிஸ்டுகளும் பில்ட்-அப் கொடுத்தவை அனைத்தும் வடிகட்டிய பொய்கள்.

இந்த உண்மை ஓரங்கட்டப்பட்டு, ''மோடி காலையில் எட்டு மணிக்கே அலுவலகத்திற்கு வந்துவிடுகிறார். அதிகாரிகளையும் வரவைத்திருக்கிறார். கேள்வி கேட்டு வேலை வாங்குகிறார். முதல் 100 நாட்களிலேயே சாதிக்க வேண்டியவை குறித்த திட்டமொன்றை வைத்திருக்கிறார். அமைச்சர்கள் தமது குடும்ப உறுப்பினர்களை வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்லக்கூடாது என்றும் சொத்துக் கணக்குகளைக் காட்ட வேண்டுமென்றும் உத்தரவிட்டிருக்கிறார்'' என்றவாறான மோடியின் சில்லறைத்தனமான, விளம்பரம் தேடும் நடவடிக்கைகளையே முந்தைய ஆட்சியாளர்களுக்கும் மோடிக்கும் இடையிலான மாபெரும் வேறுபாடாக ஊடகங்களும் பார்ப்பன பாசிச கும்பலும் காட்டி வருகின்றன.

•••

''**வி**லைவாசியைக் குறைப்பேன்'' என்று மட்டுமா மோடி சவடால் அடித்தார்? அவர் தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தமிழகத்திற்கு வந்தபோதெல்லாம் தமிழக மீனவர்களின் இரட்சகனாகத் தன்னைக் காட்டிக் கொண்டார். மோடி பிரதமரானால் ராஜபக்சே வாலைச் சுருட்டிக் கொள்வார் எனத் தமிழக பா.ஜ.க. தலைவர்கள் அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வந்தார்கள்.

இந்தச் சவடால்கள் அனைத்தும் மோடி பிரதமரான மறுநிமிடமே பல்லிளித்துவிட்டன. கடந்த ஒன்றரை மாதத்திற்குள்ளாக ஏறத்தாழ 200 தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு, இலங்கை சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுவரை இல்லாத வகையில் 38-க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நரேந்திர மோடி தனது பதவியேற்பு வைபவத்திற்கு ராஜபக்சேயை அழைத்தபொழுது, ''நாம் இலங்கையைப் புறக்கணிப்பதாலோ ராஜபக்சேவுடன் எந்தவிதத் தொடர்பும் இல்லாமல் இருப்பதாலோ யாருக்கென்ன இலாபம்? இலங்கை மீது போர் தொடுக்கவா போகிறோம்? நமது மீனவர்களின் பிரச்சினையிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் அவர்களது உரிமையைப் பெறுவதுதான் புத்திசாலித்தனமே தவிர, அதிபர் ராஜபக்சேவைப் புறக்கணிப்பதல்ல'' எனத் தனது நோக்கத்தைத் தெளிவுபடுத்தி அறிக்கைவிட்டது பா.ஜ.க. இதைத்தானே காங்கிரசும் இத்தனை காலமாக கூறிவந்தது?

மன்மோகன் சிங் - எம்.கே.நாராயணன் - சிவசங்கர் மேனன் இருந்த இடத்தில் இப்பொழுது நரேந்திர மோடி - சுஷ்மா சுவராஜ் - அஜீத் தோவல் என்ற கூட்டணி உள்ளது. ஆட்கள் மாறினாலும் காட்சிகள் மாறவில்லை என்பது ஒருபுறமிருக்க, இப்புதிய கூட்டணி பழைய கூட்டணியைக் காட்டிலும் தனிப்பட்ட விதத்திலும் ராஜபக்சேவுக்கு நெருக்கமானது.

**“ராமர் கோவில் கட்டுவதற்கான தூண்கள், கதவுகளை வடிவமைக்கும் பணிகள் அயோத்தியில் நடந்து வந்ததை நிறுத்தி வைத்திருந்த ஆர்.எஸ்.எஸ்., மோடி பிரதமர் நாற்காலியில் உட்கார்ந்தவுடனேயே மீண்டும் அதனைத் தொடங்கிவிட்டது. “கோவில் கட்டுவதைவிட கக்கூஸ் கட்டுவதுதான் முக்கியமானது” எனச் சவடால் அடித்துவந்த மோடி அயோத்தியில் கக்கூசைத்தான் கட்டப் போகிறாரா?”**

உண்மை இவ்வாறிருக்க, பொங்கும் கண்ணீரோடு, கும்பிட்ட கரங்களோடு டெல்லிக்குக் காவடி எடுக்கும் நாடகத்தை நடத்தினார் வைகோ. மோடியின் இயற்கையான கூட்டாளியான ஜெயா, ராஜபக்சே அழைக்கப்பட்டதற்கு காரணம் தவறான ஆலோசனைதான் என்று அறிக்கைவிட்டார்.

அரசு அதிகாரிகள் சமூக வலைத்தளங்களில் இந்தியை முதன்மையாகப் பயன்படுத்த வேண்டும் என்ற அறிவிக்கையை வெளியிட்டுவிட்டு, முந்தைய காங்கிரசு அரசுதான் முதலில் வெளியிட்டதாகக் கைகாட்டி வெட்கங்கெட்ட முறையில் தப்பித்துக் கொள்ள முனைகிறது, பா.ஜ.க. காவிரி மற்றும் முல்லைப் பெரியாறு விவகாரங்களிலோ காங்கிரசைப் போலவே பா.ஜ.க.வும் கபட வேடதாரி என்பது ஏற்கெனவே அம்பலமான உண்மை. இருந்தபோதிலும், மோடி வந்து விட்டால் அவர் கர்நாடக, கேரள அரசுகளைப் பணிய வைத்து விடுவார் என்பது போலச் சவடால் அடித்தார்களே, இந்த முழு மூடர்களுக்கு தங்களை ஒரு கட்சித் தலைவன் என்று அழைத்துக் கொள்ளும் தகுதி இருக்கிறதா?

தமிழகத்தில் நரேந்திர மோடியைச் சொக்கத் தங்கமாக அறிமுகப்படுத்தியவர்களுள் முதன்மையானவர் தமிழருவி மணியன். ‘‘இந்தியர் என்றுதான் மோடி பேசி வருகிறார். இந்து என்று அவர் பேசினால் நாங்கள் அவரது பக்கத்தில் இருக்க மாட்டோம்’’ எனச் சூளுரைத்து வந்தார், அவர். ஆனால், பா.ஜ.க.வோ தனது தேர்தல் அறிக்கையிலேயே, அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தில் ராமர் கோவிலைக் கட்டுவதையும்; காஷ்மீருக்கு சிறப்பு உரிமைகளை அளிக்கும் அரசியல் சாசனப் பிரிவு 370-ஐ நீக்குவதையும்; பொது சிவில் சட்டம் கொண்டுவருவதையும் தனது திட்டங்களாக அறிவித்து, அவரின் மூக்கை மட்டுமில்லாமல், மோடியை வளர்ச்சியின் நாயகனாக நம்பிக் கொண்டிருந்தவர்களின் மூக்கையும் சேர்த்து உடைத்தது.

ராமர் கோவில் கட்டுவதற்கான தூண்கள், கதவுகளை வடிவமைக்கும் பணிகள் அயோத்தியில் நடந்துவந்ததை நிறுத்தி வைத்திருந்த ஆர்.எஸ்.எஸ்., மோடி பிரதமர் நாற்காலியில் உட்கார்ந்தவுடனேயே மீண்டும் அதனைத் தொடங்கிவிட்டது. ‘‘கோவில் கட்டுவதைவிட கக்கூஸ் கட்டுவதுதான் முக்கியமானது’’ எனச் சவடால் அடித்து வந்த மோடி அயோத்தியில் கக்கூசைத்தான் கட்டப் போகிறாரா? ‘‘அரசியல் சாசனப் பிரிவு 370 குறித்தும், பொது சிவில் சட்டம் குறித்தும் பொது விவாதத்திற்கு வரத் தயாரா?’’ எனக் கேட்டு முண்டா தட்டுகிறார்கள் மோடியின் அமைச்சர்கள்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தீவிரமடைந்து வருவதைக் கண்டித்து ராமேசுவரம் பகுதி மீனவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.



பாபர் மசூதி வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதனாலோ, பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவரும் அளவிற்கு நாடாளுமன்ற பலம் பா.ஜ.க.விற்கு இல்லை என்பதனாலோ பார்ப்பன பாசிச அபாயங்களைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தமது இந்துத்துவா திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள மோடி கும்பல் எந்த எல்லைக்கும் செல்லக்கூடும் என்பதற்கு இப்பொழுதே சில அறிகுறிகள் கிடைத்துள்ளன.

உச்ச நீதிமன்ற மூத்த வழக்குரைஞரும், முந்தைய காங்கிரசு கூட்டணி அரசின் வழக்குரைஞராக இருந்தவருமான கோபால் சுப்பிரமணியம் உள்ளிட்ட நால்வரை உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிப்பதற்கான பரிந்துரையை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய குழு மோடி

அரசிடம் அளித்திருந்தது. இந்தப் பரிந்துரையில் கோபால் சுப்பிரமணியத்தைத் தவிர, மற்ற மூவரை உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிப்பதற்கு ஒப்புதல் அளித் திருக்கிறது, மோடி அரசு. குஜராத்தில் நடந்த சோரா புதீன், பிரஜாபதி போலி மோதல் கொலை வழக்குகளில் உச்சநீதிமன்ற நண்பனாக நியமிக்கப்பட்டிருந்த கோபால் சுப்பிரமணியம், இப்போலி மோதல் படுகொலையில் குஜராத் அரசு மற்றும் அதன் துணை உள்துறை அமைச் சராக இருந்த அமித் ஷாவின் பங்கைப் பல்வேறு ஆதாரங் களோடு அம்பலப்படுத்தி, அவ்வழக்கில் அமித் ஷாவைக் குற்றவாளியாகச் சேர்ப்பதில் முக்கியப் பங் காற்றினார். இதற்குப் பழிதீர்த்துக் கொள்ளும் முகமாவே கோபால் சுப்பிரமணியத்தை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கும் பரிந்துரையை நிராகரித்திருக்கிறது, மோடி அரசு.

அதே சமயம், தனது நோக்கத்தை மூடிமறைத்துக் கொள்வதற்காக, 2ஜி ஊழல் வழக்கில் அரசு சார்பில் வழக் காடி வந்த கோபால் சுப்பிரமணியம், சி.பி.ஐ. அதிகாரி களைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வழக் குரைஞர்கள் சந்திக்க ஏற்பாடு செய்து கொடுத்ததாக ஒரு வதந்தியை உளவுத்துறை மூலம் திட்டமிட்டே கசிய விட்டிருக்கிறது, மோடி அரசு. இதற்கு சி.பி.ஐ. மற்றும் உளவுத்துறையைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டது. இந்த அவதூறைத் திட்டவட்டமாக மறுத் துள்ள கோபால் சுப்பிரமணியம், தனது பெயரை நீதிபதி பதவிக்குப் பரிந்துரைக்க வேண்டாம் என உச்சநீதிமன்றத் திடம் தெரிவித்திருக்கிறார். உச்ச நீதிமன்றம் இப்பிரச் சினையில் மோடி அரசின் கயமைத்தனத்தை எதிர்த்து நிற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கோபால் சுப்பிரமணியத்தைப் பழிதீர்த்துக் கொண்ட மோடி-அமித் ஷா கும்பல், குஜராத்தில் நடந்த போலி மோதல் கொலை வழக்குகளில் குஜராத் அரசு சார்பாக வாதாடி வந்த முகுல் ரோத்தகியை மைய அரசின் தலைமை வழக்குரைஞராக நியமித்திருக்கிறது. முகுல் ரோத்தகி 2ஜி ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கார்ப்பரேட் நிறுவனங்களின் சார்பாகவும், இயற்கை எரி வாயுவின் விலையை உயர்த்தும் வழக்கில் ரிலையன்ஸ் சார்பாகவும், இத்தாலி நாட்டு கடற்படை வீரர்கள் இந்திய மீனவர்களைக் கொன்ற வழக்கில் இத்தாலியின் சார்பாகவும் வாதாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, சோரா புதீன், பிரஜாபதி போலி மோதல் கொலை வழக்குகளை விசாரித்துவரும் சி.பி.ஐ. நீதிமன்ற சிறப்பு நீதிபதி ஜே.டி.உத்பத், இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட் டிருக்கும் அமித் ஷா நீதிமன்றத்தில் ஆஜராகாமல் சாக்கு போக்குச் சொல்லி தப்பித்து வந்ததைக் கண்டித்ததோடு, ஜூலை 2-ஆம் தேதி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவு வெளிவந்த மறுவாரமே நீதிபதி உத்பத் மர்மமான முறை யில் பணியிட மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்.

குஜராத்தில் நடந்துள்ள பல்வேறு போலி போலி மோதல் கொலைகளில் அமித் ஷாவிற்குப் பங்குண்டு என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. மோடிக்கு நெருக்கமாக இருந்த ஒரு பெண்ணை போலீசாரைக் கொண்டு உளவு பார்த்த விவகாரத்திலும் அமித் ஷாவிற்குப் பங்குண்டு. இப்படிபட்ட கிரிமினல் பின்னணி கொண்டவரும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் மோடியின் வளர்ப்புப் பிராணியுமான அமித் ஷா-வை பா.ஜ.க.வின் தேசியத் தலைவராக்க முடிவெடுக்கப் பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.



சோராபுதீன் போலி மோதல்கொலையில் குஜராத் அரசிற்கு உள்ள பங்கை அம்பலப்படுத்தியதால் பழிவாங்கப்பட்டுள்ள கோபால் சுப்பிரமணியன் (இடது); குஜராத் அரசு நடத்திய பல்வேறு போலி மோதல்கொலை வழக்குகளில் அதன் சார்பாக வாதாடிய முகுல் ரோத்தகி அரசு தலைமை வழக்குரைஞராக நியமிக்கப்பட்டுள்ளார் .

இவற்றையெல்லாம் மோடி-ஆர்.எஸ்.எஸ். கூட்டணி மேலெழுந்தவாரியாகச் செய்யவில்லை. இவை ஆர்.எஸ்.எஸ். கும்பலின் பார்ப்பன பாசிசத் திட்டங்கள். மோடி அரசு அளிக்கும் கசப்பு மருந்துகளால் ஆத்திரம் கொள்ளும் மக்களின் வெறுப்பை, இந்து-முசுலீம் மோதலாக மடை மாற்றி விடுவதற்கும் இது பயன்படும்.

தேர்தலுக்கு முன்பாக மழைக்காலத் தவளையைப் போல நிறுத்தாமல் கத்திக் கொணடிருந்த மோடி, இப் பொழுது தனது அரசின் சர்ச்சைக்குரிய எந்த நடவடிக்கை குறித்தும் பேசமறுக்கிறார். மற்றவர்களும் பேசக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறார். மன்மோகன் சிங்கை மவுன மோகன் சிங் என்று முன்னர் கேலி செய்த மோடி, மன் மோகனை விஞ்சும் விதத்தில் அதேபாணியில் காவி கல்லுளிமங்கனாக வலம் வருகிறார்.

மோடி பிரதமரானால், அவரது தலைமையின் கீழ் அமையும் அரசு மன்மோகன் சிங்கைவிடத் தீவிரமான ஏகாதிபத்தியங்களின் எடுபிடியாக, ராஜபக்சேயைப் பாது காப்பதில் காங்கிரசின் மறுஅவதாரமாக, ஆர்.எஸ்.எஸ். - இன் இந்துத்துவா திட்டங்களைப் பையப்பைய நகர்த்திச் செல்லும் தொண்டனாகத்தான் நடந்து கொள்ளும் என்பது எதிர்பாராத ஒன்றல்ல. இது எதிர் பாராதது என்று கூறுபவர்கள், அடிமுட்டாளாக இருக்க வேண்டும்; அல்லது தேர்ந்த பிழைப்புவாதிகளாக இருக்க வேண்டும்.

● குப்பன்

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு:

# மோடி பாணி வளர்ச்சியின் முதல் பலிகிடா!

பாரதிய ஜனதா கட்சி, தனது தேர்தல் அறிக்கையில் தரகு முதலாளிகளுக்குத் தெளிவானதொரு வாக்குறுதியை வழங்கியிருந்தது. குழப்பங்களுக்கு இடமில்லாத வகையிலும், திட்டங்களுக்கான அனுமதியை விரைந்து வழங்கும் வகையிலும் சுற்றுச்சூழல் சட்டங்கள் வடிவமைக்கப்படும் என்று அறிவித்திருந்தது. சுற்றுச் சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், ''எனது அமைச்சகம் முட்டுக்கட்டை போடும் வேலையைச் செய்யாது'' என்று இதனை மேலும் தெளிவுபடுத்தினார்.

ஜூலை ஒன்றாம் தேதியிலிருந்து சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அனுமதி கோரி யாரும் நேரில் வரத்தேவையில்லை என்றும், பெருந்திட்டங்களுக்கான அனுமதிக்கு ''ஆன்லைன்'' மூலம் விண்ணப்பித்தால் போதுமானது என்றும் அறிவித்தார் ஜவடேகர்.

''பொருளாதார வளர்ச்சிக்கான தடைகளை அகற்ற வேண்டும்'' என்பது மோடியின் பத்துக் கட்டளைகளில் ஒன்றல்லவா? இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடும் தடைகளில் முக்கியமானது சுற்றுச்சூழல் அமைச்சகம் என்பது மோடியின் கருத்து.

மன்மோகன் சிங்கின் ஆட்சிக் காலத்தில் சுற்றுச்சூழல் அமைச்சகம் அப்படி முட்டுக்கட்டை ஏதும் போட்டுவிடவில்லை. மாறாக, கார்ப்பரேட்டுகளின் கொள்ளைக்காக, அரசே நிலப்பறிப்பில் இறங்கி விவசாயிகள், பழங்குடியினரை விரட்டியடித்தது. ஒவ்வொரு 'வளர்ச்சி'த் திட்டத்தாலும் அழிவை நோக்கித் தள்ளப்பட்ட மக்கள் போராடினர். மக்களுடைய எதிர்ப்பின் காரணமாகத் தான், சில திட்டங்களுக்கு அனுமதி மறுக்கவேண்டிய கட்டாயமும், பிரிட்டிஷ் ஆட்சி இயற்றிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை திருத்த வேண்டிய கட்டாயமும் மன்மோகன் அரசுக்கு ஏற்பட்டது.

இத்தனை போராட்டங்களுக்கு இடையிலும், காங்கிரசு ஆட்சியின் கீழ் 6 இலட்சம் ஹெக்டேர் காடுகள் சுரங்கங்களுக்காகவும், பிற தொழில்களுக்காகவும் அழிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 7,90,000 ஹெக்டேர் விளைநிலங்கள் ரியல் எஸ்டேட்டுகளாகவும் தொழிற்சாலைகளாகவும் மாறியிருக்கின்றன. சுற்றுச்சூழல் விதிகளைக் காட்டித் தாமதமாக்குகிறார் என்று தரகு முதலாளிகளால் குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர் ஜெயந்தி நடராஜன் உடனே அகற்றப்பட்டு, வீரப்ப மொய்லி நியமிக்கப்பட்டார். அவர் பதவிக்கு வந்த சில நாட்களுக்குள்ளேயே ரூ.75ஆயிரம் கோடி போஸ்கோ திட்டம் உள்ளிட்ட ரூ.2.4 இலட்சம் கோடி பெறுமான முள்ள திட்டங்களுக்கு விதிகளைப் புறக்கணித்து அனுமதி தந்தார். மன்மோகன் சிங்கோ, ரூ.500 கோடி வரையிலான திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதியே தேவையில்லை என்றும் ரூ.1000 கோடி வரையிலான திட்டங்களுக்கு மாநில அரசுகளே அனுமதியளிக்கலாம் என்றும், கட்டிடங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்ற வற்றுக்கு சுற்றுச்சூழல் அனுமதியே தேவையில்லை என்றும் அடுக்கடுக்கான உத்தரவுகளை 2012-13 ஆம் ஆண்டுகளில் பிறப்பித்தார்.

இவையும் போதாதென்று கருதிய தரகு முதலாளிகள் மன்மோகன் அரசு செயலின்மையில் விழுந்து விட்டதாகச் சாடினர். தாங்கள் விரும்பிய வளங்களை விரும்பிய வண்ணம் சூறையாடுவதற்கு எந்த விதமான சட்டத்தடையும் இருக்கக் கூடாது என்பதுதான் அவர்களது கோரிக்கை. முதலாளி வர்க்கத்தின் இந்தக் கோரிக்கையைத்தான் பாரதிய ஜனதா தன்னுடைய தேர்தல் அறிக்கையிலேயே வழிமொழிந்திருந்தது.

தென்கொரியாவைச் சேர்ந்த ஏகபோக நிறுவனமான போஸ்கோவின் இரும்பாலைத் திட்டத்திற்கு எதிராக ஒரிசாவின் பாரதீப் துறைமுக நகரில் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



சுற்றுச்சூழல் சட்டங்கள், மத்திய, மாநில அமைச்சகங்கள், இவ்வழக்குகளை விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றத்தில் இதற்கெனதனி ஆயம் ஆகியவையெல்லாம் இருக்கின்ற சூழலிலேயே, உலகின் மிகவும் மாசடைந்த 20 நகரங்களில் 13 இந்தியாவில்தான் இருக்கின்றன. 150 ஆறுகளில் 76 ஆறுகள் கழிவு நீர்க் கால்வாய்களாகியிருக்கின்றன. நீர்வளம் அற்றுப்போனதால், 60 பேருக்கு ஒன்று என்ற கணக்கில் நாடு முழுவதும் 2.1 கோடி ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் அழிவின் பொருளாதார மதிப்பு இந்தியாவின் நிகர உள்நாட்டு உற்பத்தியில் 5.7% என்று மதிப்பிடுகிறது உலக வங்கி. மோடி அரசு சாதிக்க விரும்பும் வளர்ச்சி வீதத்தைக் காட்டிலும் இந்த அழிவின் வீதம்தான் அதிகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

உலகின் மிக முக்கியமான பல்லுயிர்ச்சூழல் பகுதியும், 58 ஆறுகள் உற்பத்தியாகும் இடமும், இந்தியாவின் நுரையீரல் என்று கூறத்தக்க 1,64,280 சதுர கி.மீ. வனப்பகுதியுமான மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளில் 75% கடந்த 20 ஆண்டுகளில் அழிக்கப்பட்டிருக்கிறது. மழைப்பொழிவின்மை, தண்ணீர்ப் பஞ்சம் உள்ளிட்ட மிகப்பெரும் பேரழிவை இது தோற்றுவித்திருப்பதால், இந்த வனப்பகுதியை பாதுகாப்பது குறித்து ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட காட்கில் குழு, 64% வனப்பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டுமென சிபாரிசு செய்தது. அதற்குப் பின்னர் அமைக்கப்பட்ட கஸ்தூரிரங்கன் குழு குறைந்த பட்சம் 37% வனப்பகுதியையாவது அவ்வாறு அறிவிக்க வேண்டுமெனக் கூறியது. ஆனால், கஸ்தூரிரங்கன் குழு அறிக்கையே தொழில் வளர்ச்சிக்கு எதிரானது என்றும், பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தவுடன் அதனை ரத்து செய்து, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் சுரங்கத் தொழிலுக்கு அனுமதி வழங்கப்படும் என்றும் கோவா முதல்வர் மனோகர் பரிக்கர் அறிவித்தார்.

நிலக்கரி, இரும்பு, பாக்சைட் சுரங்க நிறுவனங்கள், சாலைகள் மற்றும் துறைமுகக் கட்டுமானப் பணி நிறுவனங்கள், தனியார் மின் நிலையங்கள் போன்றவற்றின் உரிமையாளர்களான தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு முதலாளிகளுக்கும் சுற்றுச்சூழல் என்ற சொல்லே வேப்பங்காயாக கசக்கிறது. சூழல் விதிகளை மீறுவதற்கான கள்ளச்சாவியை மன்மோகன்சிங் முதலாளிகளின் கையில் கொடுத்தார் என்ற போதிலும் அவர்கள் திருப்தி அடைந்திடவில்லை. 'கதவையும் பிடுங்கி எறிய வேண்டும்' என்பதே அவர்கள் கோரிக்கை.

இதனை குஜராத்தில் செய்து காட்டிய மோடி, தனது உத்தியை இந்தியா முழுமைக்கும் விரிவுபடுத்துகிறார். வனங்கள் என்பதற்கான வரையறை தங்களுடைய ஆக்கிரமிப்புக்கு இடைஞ்சலாக உள்ளதென தரகு முதலாளிகள் கருதுவதால் காடுகளுக்கான வரையறையையே திருத்துகிறது மோடி அரசு. காடுகளை மதிப்பிடுவதற்கு 6 அளவுகோல்களைத் தற்போது சுற்றுச்சூழல் அமைச்சகம் பயன்படுத்துகிறது. காட்டின் தன்மை, அதன் உயிரியல் வளம், வன விலங்குகள், காட்டின் அடர்த்தி, நிலத்தின் தன்மை, அதன் நீர்வள மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில்தான், வனப்பகுதியில் சுரங்கத் தொழிலை அனுமதிப்பது அல்லது மறுப்பது என்பதை அரசு செய்கிறது. இந்த 6 அளவுகோல்களிலிருந்து காட்டின் அடர்த்தி மற்றும் அதன் உயிரியல் வளம் என்ற இரு அளவுகோல்களையும் நீக்கி விட்டு, மீதமுள்ள நான்கு அளவுகோல்கள் அடிப்படையில் வனப்பகுதியை வரையறுப்பதற்கான விதிகளை மோடி அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி, காட்டின் மொத்தப் பரப்பையும் கணக்கிடாமல், நாடு முழுவதையும் ஒரு சதுர கி.மீ கொண்ட சதுரங்களாகப் பிரித்து, அவை ஒவ்வொன்றையும் காடா இல்லையா என்று மதிப்பிடலாம் என புதிய வரையறை உருவாக்கப்படுகிறது. இதன்படி காடுகளில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளான புல்வெளி போன்ற நிலப்பரப்புகளை 'காடு அல்ல' என வகைப்படுத்தி, அதனை 'வளர்ச்சி'த் திட்டத்துக்கு வழங்கிவிட முடியும்.

வேதாந்தா நிறுவனத்தின் பாக்சைட் சுரங்கத் திட்டத்துக்கு எதிராக ஒரிசாவின் நியாம்கிரி பகுதியில் வாழ்ந்துவரும் பழங்குடியின மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)




ஒருபுறம் சுற்றுச்சூழல் விதிகளின் மீது மோடி அரசு தாக்குதல் தொடுக்க, இன்னொருபுறம் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 'வளர்ச்சி'க்கு இடையூறாக உள்ள போராடும் பழங்குடி மக்களையும் மாவோயிஸ்டுகளையும் ஒடுக்க ஒருங்கிணைந்த தாக்குதலைத் தொடுக்கவுள்ளதாகக் கூறுகிறார். ஜனநாயகத்தை வழங்குகிறோம் என்ற பெயரில், இராக்கின் எண்ணெய் வளத்தைச் சூறையாடுவதற்காகப் படையெடுத்த அமெரிக்காவுக்கும், வளர்ச்சியை வழங்குகிறோம் என்று கூறிக்கொண்டு இயற்கை வளங்களைச் சூறையாடுவதற்காக உள்நாட்டு மக்கள் மீது போர் தொடுக்கும் மோடி அரசுக்கும் என்ன வேறுபாடு?

● அன்பு

## என்.ஜி.ஓ.க்கள் பற்றிய உளவுத்துறை அறிக்கை:

# சுரங்க முதலாளிகளின் கூலிப்படையாக மோடி அரசு!

**அரசுசாரா நிறுவனங்கள் பற்றிய உளவுத்துறை அறிக்கையை மோடி அரசு கசியவிட்டிருப்பதன் நோக்கம், 'வளர்ச்சி'த் திட்டங்களுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதுதான்.**

அம்பானி, அதானி, டாடா, பிர்லா போன்ற தரகு முதலாளிகளின் தயவில் பதவியைப் பிடித்திருக்கும் மோடி அரசு, கொலைக்கு முன்பணம் வாங்கிய கூலிப் படைக்கே உரிய மூர்க்கத்தனத்துடன் செயலில் இறங்கியிருக்கிறது. மக்கள் போராட்டங்களின் காரணமாக மன்மோகன் சிங் அரசால் அமல்படுத்தவியலாத தனியார்மய- தாராளமய பகற்கொள்ளை நடவடிக்கைகளை நாற்காலியில் அமர்ந்த மறுகணமே துவக்கி விட்டார் மோடி.

உளவுத்துறையிடமிருந்து (Intelligence Bureau) பிரதமருக்கு மிகவும் இரகசியமாக அனுப்பப்பட்டதாக கூறப்படும் 21 பக்க அறிக்கையொன்று ஜூன் 12-ஆம் தேதி யன்று திட்டமிட்டே ஊடகங்களுக்கு கசிய விடப்பட்டிருக்கிறது. அணு மின்நிலையத் திட்டங்கள், யுரேனியம் சுரங்கங்கள், அனல் மின்நிலையத் திட்டங்கள், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள், போஸ்கோ, வேதாந்தா முதலிய நிறுவனங்களின் சுரங்கத் திட்டங்கள் போன்ற பல வளர்ச்சித் திட்டங்களுக்கு எதிராகத் திட்டமிட்டே தூண்டி விடப்படும் போராட்டங்களினால், 2011-13-க்கு இடைப்பட்ட இரண்டு ஆண்டுகளில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 முதல் 3 சதவீதம் (அதாவது சுமார் 3 இலட்சம் கோடி ரூபாய்) இழப்பு ஏற்பட்டிருப்பதாக உளவுத்துறையின் அந்த அறிக்கை கூறுகிறது.

இத்தகைய நடவடிக்கையில் அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, நெதர்லாந்து, நார்வே, சுவீடன் போன்ற நாடுகளிலிருந்து நிதி பெறும் என்.ஜி.ஓ.க்கள் முக்கியப் பாத்திரம் வகிப்பதாகக் கூறும் அந்த அறிக்கை, கிரீன் பீஸ், ஆக்சன் எய்டு, அம்னஸ்டி இன்டர்நேசனல், என்.ஏ.பி.எம்., நவதான்யா, பி.யூ.சி.எல். போன்ற அமைப்புகளையும் பிரபுல் பித்வாய், அசின் வினைக், வந்தனா சிவா, மேதா பட்கர் போன்ற நபர்களையும் தனது அறிக்கையில் குறிப்பிடுகிறது.

''இரகசியம்'' என்று கூறத்தக்க எதுவும் இந்த அறிக்கையில் இல்லை. மேற்கூறிய அனைவரும் அணுசக்தி எதிர்ப்பு, மரபணு மாற்றுப் பயிர் எதிர்ப்பு, நர்மதா அணைக்கட்டு எதிர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் ஏற்கெனவே பிரபலமானவர்கள். 23-ஆம் புலிகேசியின் உளவுத்துறையைப் போல மோடியின் உளவுத் துறை இவர்களைத் திடீரென்று ''கண்டுபிடிப்பதற்கான'' பின்னணி என்ன என்பதைத்தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

உளவுத்துறையின் இந்த அறிக்கை வெளியிடப்பட்டதற்கு அடுத்த நாளே, சர்தார் சரோவர் அணைக்கட்டின் உயரத்தை 122 மீட்டரிலிருந்து 138 மீட்டராக உயர்த்தும் முடிவை அறிவித்தது மோடி அரசு. ஏற்கெனவே அணையில் மூழ்கிப்போன கிராமங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இதுவரை மறுவாழ்வு அளிக்கப்

மகாராஷ்டிராவின் ஜெய்தாபூர் பகுதியில் அமையவுள்ள அணுஉலைத் திட்டத்தை எதிர்த்து அப்பகுதிவாழ் மக்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம் (இடது); கூடங்குளம் அணுஉலையை மூடக்கோரி இடிந்தகரையில் ஈராண்டுகளாக நடந்துவரும் போராட்டம். (கோப்புப் படங்கள்)







மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் புகுத்தப்படுவதை எதிர்த்தும், அமெரிக்க ஏகபோக நிறுவனமான மான்சாண்டோவை இந்தியாவிலிருந்து வெளியேற்றக் கோரியும் ''கிரீன் பீஸ்'' நிறுவனத்தின் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

படவில்லை. குஜராத் விவசாயிகளின் பெயரால் நியாயப்படுத்தப்பட்ட இந்த அணைக்கட்டின் நீரை, அவர்கள் பயன் படுத்திக் கொள்வதற்கான கால்வாய்களில் கால் பகுதியைக் கூட மோடி அரசு அங்கே வெட்டவில்லை. இந்நிலையில் குஜராத் தரகு முதலாளிகளின் தொழிற்சாலைத் தேவைகளுக்காக அணையின் உயரத்தை மேலும் கூட்டுகிறார் மோடி. இதனால் அகதிகளாக்கப்பட இருப்பவர்கள் மத்தியப் பிரதேசத்தின் நூற்றுக் கணக்கான கிராமங்களைச் சேர்ந்த இரண்டரை இலட்சம் பழங்குடி மக்கள்.

இந்த முடிவு உடனே எதிர்ப்பை தோற்றுவிக்கும் என்பதால், அத்தகைய போராட்டங்களைத் தலையெடுக்கவிடாமல் தடுப்பதற்காகவும், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் என்.ஜி.ஓ.க்களை முன்கூட்டியே அச்சுறுத்திப் பணிய வைப்பதற்காகவும்தான் இந்த ''உளவுத்துறையின் ரகசியம்'' திட்டமிட்டே முந்தைய நாளில் வெளியிடப் பட்டிருக்கிறது.

உளவுத்துறை அறிக்கையின் இரண்டாவது முக்கிய இலக்கு சுற்றுச் சூழல் சார்ந்த என்.ஜி.ஓ.க்கள். இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறைமுகமான முந்த்ரா துறைமுகம் அதானிக்குச் சொந்தமானது. பாதுகாக்கப் பட்ட வனப்பகுதியென அறிவிக்கப்பட்ட அலையாற்றிக் காடுகளை அழித்து அமைக்கப்பட்டிருக்கிறது இந்த துறைமுகம். அதானி கட்டவிழ்த்து விட்டிருக்கும் சுற்றுச்சூழல் பேரழிவு மற்றும் மீனவர்களின் வாழ்வாதார அழிப்பு ஆகியவை குறித்து சி.எஸ்.இ. என்ற என்.ஜி.ஓ.வின் (கோகோ கோலாவில் பூச்சி மருந்து இருப்பதை அம்பலப்படுத்திய அமைப்பு) நிறுவனரான சுனிதா நாராயண் அளித்த அறிக்கையின் அடிப் படையில், அதானி நிறுவனத்துக்கு 200 கோடி ரூபாய் அபராதம் விதித்தது காங்கிரசு அரசு. (ஜெயந்தி நடராசனுக்கு எதிரான மோடியின் கோபத்துக்கு இது முக்கியமான காரணம்)

அடுத்து கிரீன் பீஸ் என்ற சர்வதேச சுற்றுச்சூழல் என்.ஜி.ஓ., மார்ச் 2014 -இல் வெளியிட்டுள்ள அறிக் கையில், அதானி நிறுவனம் முந்த்ரா துறைமுகக் கட்டு மானத்தில் அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து சாதித்துக் கொண்ட முறைகேடுகள், சட்டவிரோதக் கட்டு மானங்கள், அரசு நில ஆக்கிரமிப்பு, வரி ஏய்ப்பு, இந்நிறு வனத்துக்கு எதிரான வழக்குகள், நீதிமன்றத்தின் கண்டனங்கள் ஆகியவற்றை அம்பலப்படுத்தியிருக் கிறது.

மகாராஷ்டிர மாநிலம் லோகராவில் அதானிக்கு ஒதுக் கப்பட்ட நிலக்கரி வயல் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி யில் இருப்பதையும், ம.பி.யில் சிந்த்வாரா என்ற இடத்தில் அதானி அமைக்கும் அனல் மின் நிலையத் திற்குப் பாசன நீரைத் திருப்பி விடுவதற்கு எதிராக விவசாயிகளும் பழங்குடி மக்களும் போராடிக் கொண் டிருக்கும்போதே, அதானி நிறுவனம் சட்டவிரோதமாகக் கால்வாய் வெட்டியிருப்பதையும் கிரீன்பீஸ் அறிக்கை அம்பலப்படுத்தியிருக்கிறது.

ஒரிசாவில் அதானி உள்ளிட்ட நிறுவனங்கள் செய்த இறக்குமதி வரி ஏய்ப்புக்காக உச்சநீதிமன்றம் 175 கோடி டாலரை அரசுக்குக் கட்டச் சொல்லியிருப்பதையும், பெல்லாரி இரும்பு வயல்களிலிருந்து திருட்டுத்தனமாக கனிமத்தை அதானி நிறுவனம் ஏற்றுமதி செய் துள்ளதையும், 2500 கோடி டாலர் நிலக்கரி இறக்குமதி செய்ததில், வரி ஏய்ப்பு செய்திருப்பதையும், கருப்பை வெள்ளையாக்கும் மோசடி பரிவர்த்தனையில் அதானி ஈடுபட்டதால், சென்னை மற்றும் விசாகப்பட்டினத்தில் துறைமுகம் அமைக்கும் அனுமதி மறுக்கப்பட்டிருப் பதையும் கிரீன்பீஸ் தனது அறிக்கையில் அம்பலப்படுத் தியிருக்கிறது.

மோடி, மிகவும் அவசரமாகவும் ஆத்திரமாகவும் இந்த என்.ஜி.ஓ.க்களுக்கு எதிராக உளவுத்துறையை ஏவியிருப் பதன் பின்புலம் இதுதான்.

அடுத்து, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்களை எதிர்க்கின்ற வந்தனா சிவா உள்ளிட்ட என்.ஜி.ஓ.க்களுக்கு எதிராக உளவுத்துறை அறிக்கை கூறும் கருத்துக்கள், மோடியின் அரசு ஒரு அமெரிக்க கைக்கூலி அரசே என்பதை அப்பட்டமாக நிரூபிக் கின்றன.

மன்மோகன் ஆட்சியின்போது, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி.கத்தரிக்கு மக்கள் மத்தியில் எழுந்த பரவலான எதிர்ப்பின் காரணமாக, அது தொடர்பாக நிய மிக்கப்பட்ட நாடாளுமன்ற நிலைக்குழு, அதன் வணிக ரீதியான விற்பனையை நிறுத்தி வைத்ததுடன், அது தொடர்பாக ஒரு விசாரணைக்கும் உத்தரவிட்டது. ஆனால், தற்போதைய உளவுத்துறை அறிக்கையோ மான்சான்டோ மற்றும் யு.எஸ். எய்டு நிறுவனங்களின் ஆஸ்தான ஆய்வாளரான டாக்டர் ரொனால்டு

ஹெர்ரிங்கின் கூற்றை மேற்கோள் காட்டி, ''பி.டி. கத்தரி பாதுகாப்பானது'' என்று வாதிடுவதுடன், என்.ஜி.ஓ.க்கள் எம்.பி.க்களை தவறாக வழிநடத்தி விட்டதாகக் குற்றம் சாட்டுகிறது. பி.டி.கத்தரியைத் தடை செய்த மேற்படி நாடாளுமன்ற நிலைக்குழுவின் உறுப்பினர்களில் 12 பேர் தேசிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்தவர்கள் என்பதுதான் இதில் மிகப்பெரிய நகைச்சுவை.



மகேஷ்வர் அணைக்கட்டுத் திட்டத்தால் வெளியேற்றப்பட்டவர்களுக்கு உரிய நட்டஈடு வழங்கக் கோரி, நர்மதா பாதுகாப்பு இயக்கம் புதுடெல்லியில் நடத்திய காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம். (கோப்புப் படம்)

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக, ''பி.யு.சி.எல்., குஜராத் சர்வோதய மண்டல், மதச்சார்பற்ற ஜனநாயகத்துக்கான இயக்கம் போன்ற அமைப்புகள் குஜராத் மாடல் வளர்ச்சியை கேள்விக்குள்ளாக்குகின்றன'' என்று குற்றம் சாட்டுவதன் மூலம் இந்த அறிக்கையே மோடியின் அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்கான ஏற்பாடுதான் என்பதை அம்பலப்படுத்திக் கொள்கிறது உளவுத்துறை.

ஒருபுறம் ஏகாதிபத்திய எடுபிடியாக இருந்து கொண்டே, இன்னொரு புறம் வெளிநாட்டு நிதி பெறும் தன்னார்வக் குழுக்கள் பற்றிக் கூச்சல் எழுப்பும் இந்த நாடகம் நமக்குப் புதிதல்ல.

இந்தியாவில் உள்ள அந்நிய நிதி பெறும் அமைப்புகளிலேயே மிகவும் பெரியது ஆர்.எஸ்.எஸ்.தான். 1988-இல் வேத பிரகாஷ் என்ற உலக வங்கி அதிகாரியால் அமெரிக்காவில் துவக்கப்பட்ட இந்தியா டெவலப்மென்ட் ரிலீஃப் ஃபண்டு என்ற பினாமி அமைப்பு, கோடிக்கணக்கான டாலர்களைத் திரட்டி ஆர்.எஸ்.எஸ் இன் மதவெறி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியிருப்பது 2002 இலேயே அம்பலமானது.

காங்கிரசும் பாரதிய ஜனதாவும் சட்டவிரோதமாக அந்நிய நிதியைப் பெற்றிருக்கின்றன என்று குற்றம் சாட்டி டெல்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில், பிரிட்டிஷ் பன்னாட்டு நிறுவனமான ஸ்டெரிலைட்டிமிருந்து இரு கட்சிகளும் சட்டவிரோதமான முறையில் பணம் பெற்றிருப்பதை நீதிமன்றத் தீர்ப்பு சென்ற மார்ச் மாதம் உறுதி செய்திருக்கிறது.

மறுகாலனியாக்கத்தின் கீழ் இக்கட்சிகள் மட்டுமின்றி, மத்திய-மாநில அரசுகளும், உள்ளூராட்சிகளும் கூட அந்நிய நிதி நிறுவனங்களால்தான் கட்டுப்படுத்தி இயக்கப்படுகின்றன என்பது ஊரறிந்த ரகசியம். இதனை எல்லா ஓட்டுக் கட்சித்தலைவர்களும் வெட்கமின்றி ஒப்புக்கொண்டுமிருக்கின்றனர். இருந்தபோதிலும், மறுகாலனியாக்கக் கொள்கைகளை அமல்படுத்துவதற்கு சில என்.ஜி.ஓ.க்களின் செயல்பாடுகள் வரம்பு மீறி இடையூறு ஏற்படுத்தும்போது, அந்நிய நிதி என்ற இந்தக் கூச்சல் எழுப்பப் படுகிறது.

கூடங்குளம் அணு உலை மற்றும் பி.டி.கத்தரிக்கு எதிர்ப்பு ஆகிய பிரச்சினைகளில் ஏற்கெனவே மன்மோகன்சிங் இதைத்தான் செய்தார். பொதுநலனுக்கு குந்தகம் விளைவிப்பவை என்று கூறி 4000 என்.ஜி.ஓ.க்கள் வெளிநாட்டிலிருந்து நிதி பெறுவதற்கான அனுமதியை 2013-இல் ரத்து செய்தார். மறுகாலனியாக்க நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்யும் என்.ஜி.ஓ.க்கள் மீது மன்மோகன் சிங் ஆத்திரம் கொண்டிருந்த போதிலும், ''மனித முகம் கொண்ட மறுகாலனியாக்கத்தை'' அமல்படுத்த உதவும் பொருட்டு, சோனியாவின் தேசிய ஆலோசனைக் கவுன்சிலில் என்.ஜி.ஓ.க்கள் அங்கம் வகிக்கவே செய்தனர்.

**அந்நிய நிதி பெறும் என்.ஜி.ஓ.க்களுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். கும்பலும் மோடி அரசும் என்னதான் சவடால் அடித்தாலும் அவர்களைத் தடை செயவோ முற்றிலுமாக அகற்றவோ முடியாது. ஏனென்றால், அவர்கள் மோடியின் எசமானர்களான ஏகாதிபத்தியங்களின் வளர்ப்புப் பிள்ளைகள். வெவ்வேறு நோக்கங்களுக்காக வேறுபட்ட கோணங்களில் என்.ஜி.ஓ.க்களை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்துகின்றன.**

ஆனால், மோடியின் என்.ஜி.ஓ. எதிர்ப்பு வேறு வகையைச் சேர்ந்தது. என்.ஜி.ஓ.க்களில் பலர் இந்து மதவெறியை எதிர்ப்பதுடன், குஜராத் இனப்படுகொலையைத் தொடர்ச்சியாக அம்பலப்படுத்துபவர்களாகவும் இருப்பதால், ''இந்து எதிரிகள்'' என்ற கோணத்திலும் மோடி அவர்கள் மீது ஆத்திரம் கொண்டிருக்கிறார்.

சென்னையைச் சேர்ந்த விஜில் என்ற ஆர்.எஸ்.எஸ். சார்பு அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட ''என்.ஜி.ஓக்கள் - களப்பணியாளர்கள் மற்றும் அந்நிய நிதி: ஒரு தேசவிரோதத் தொழில்'' என்ற நூலிலிருந்து ''அந்நிய'' என்ற சொல்லுக்கான விளக்கத்தை நாம் தெரிந்து கொள்ளலாம். ''கிறித்தவர்கள், முஸ்லீம்கள், காஷ்மீர், வடகிழக்கிந்திய தேசிய இன போராட்டங்கள், மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள், என்.ஜி.ஓ.க்கள், காங்கிரசு'' ஆகிய அனைவரையுமே இந்து விரோதிகளாகவும், ''அந்நியக் கைக்கூலி''களாகவும் சித்தரிக்கிறது அந்நூல். 2006-ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற இந்நூலின் வெளியீட்டு விழாவில் என்.ஜி.ஓ.க்களைப் பற்றி மோடி பேசிய வரிகள், அச்சு பிசகாமல் அப்படியே தற்போதைய உளவுத்துறை அறிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன.

மோடி முன்வைக்கும் வளர்ச்சிப் பாதை, சீனாவைப் போல இந்தியாவையும் ஒரு வல்லரசாக்கி விடும் என்று மேற்குலகம் அஞ்சுவதாகவும், அதனால்தான் சுரங்கங்கள், அணைக்கட்டுகள், அணு மின் நிலையங்கள் போன்ற வளர்ச்சித் திட்டங்களைத் தடுப்பதற்கு என்.ஜி.ஓ.க்கள் மூலம் முட்டுக்கட்டை போடுவதாகவும் ஆர்.எஸ்.எஸ்.சார்பு அறிவுத்துறையினர் பிரச்சாரம் செய்கின்றனர். தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் தமது கொள்ளைக்கான திட்டங்களாக முன்வைத்தவற்றைத்தான் மன்மோகன் சிங்கும் மோடியும் தமது சொந்த திட்டம் போல முன்வைக்கின்றனர்.

மத்திய இந்தியாவில் தொடங்கி நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் எதிர்ப்பின் காரணமாக இவற்றை அமல்படுத்த முடியாததால், இந்த எதிர்ப்பை நசுக்குவதற்கும், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் என்.ஜி.ஓ.க்களை மிரட்டுவதற்கும்தான் இந்த இரகசிய அறிக்கைகள்.

அந்நிய நிதி பெறும் என்.ஜி.ஓ.க்களுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். கும்பலும் மோடி அரசும் என்னதான் சவடால் அடித்தாலும் அவர்களைத் தடை செய்யவோ முற்றிலுமாக அகற்றவோ முடியாது. ஏனென்றால், அவர்கள் மோடியின் எசமானர்களான ஏகாதிபத்தியங்களின் வளர்ப்புப் பிள்ளைகள்.

வெவ்வேறு நோக்கங்களுக்காக வேறுபட்ட கோணங்களில் என்.ஜி.ஓ.க்களை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்துகின்றன.

மறுகாலனியாக்கக் கொள்கைகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்களை ஏகாதிபத்திய எதிர்ப்பு-கம்யூனிச அரசியல் இல்லாத சுற்றுச்சூழல் பிரச்சினையாகவோ, பழங்குடி மக்கள் பிரச்சினையாகவோ அல்லது மனித உரிமைப் பிரச்சினையாகவோ மாற்றுவது, அடையாள அரசியலின் வரம்புக்குள் நிறுத்துவது என்பது ''போராளி'' என்.ஜி.ஓ.க்களின் வேலைத்திட்டம். இவர்கள் மீதுதான் இப்போது மோடி அரசு பாய்கிறது.

இவர்களன்றி, நேரடியாக அரசு அதிகாரத்தில் பங்கேற்கும் என்.ஜி.ஓ.க்கள் உள்ளனர். மக்களின் நம்பிக்கையை இழந்து விட்ட அதிகார வர்க்க அமைப்பின் மூலம் மறுகாலனியாக்கக் கொள்கைகளை அமல்படுத்த முடியாது என்பதால், அதிகாரப் பரவலாக்கல், வேர்மட்ட ஜனநாயகம், பயனீட்டாளர் பங்கு பெறுதல் என்ற பெயர்களில் தனியார்மயக் கொள்கைகளை அமல்படுத்தும் முகவர்களாகவும், நலத் திட்டங்களை செயல்படுத்தும் அரசின் பங்குதாரர்களாகவும் அரசு அதிகாரத்தின் அங்கமாகவே என்.ஜி.ஓ.க்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இது உலக வங்கி உள்ளிட்ட ஏகாதிபத்திய நிறுவனங்களின் உத்தரவு. என்.ஜி.ஓ.க்களுக்கு ஆண்டுதோறும் சுமார் 1000 கோடி ரூபாய்க்கும் மேலாக இந்திய அரசே நிதி உதவி செய்கிறது.



''இம்சை அரசன்'' மோடியின் உளவுத்துறையால் இந்தியாவின் வளர்ச்சிக்கு எதிரானவர்களாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள அணுஉலை திட்ட எதிர்ப்பாளரும் சமூக அரசியல் விமர்சகருமான பிரபுல் பித்வாய் (இடது) மற்றும் நர்மதா பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் மேதா பட்கர்.

சில நேரங்களில் அதிகார உறுப்புகளாகவும், சில நேரங்களில் போராட்ட அமைப்புகளாகவும் செயல்படும் என்.ஜி.ஓக்கள் மீது மோடி அரசு தற்போது காட்டும் ஆத்திரத்தின் உண்மையான இலக்கு போராடுகின்ற மக்களாவர்.

நிலக்கரி, இரும்பு, பாக்சைட் சுரங்கங்களையும், காடுகளையும், கடற்கரையையும் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் உடைமையாக்கித் தருகின்ற கூலிப்படையான மோடியின் அரசு, மன்மோகன் சிங் கடந்த 5 ஆண்டுகளில் திணிக்க முடியாத தனியார்மயக் கொள்கைகளை நூறே நாட்களில் திணிக்க முயற்சிக்கிறது.

இம்முயற்சிக்கு எதிராக எழும் மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதற்குப் படைகளை ஏவுவதற்கு முன்னர், இப்போராட்டங்களை அனைத்தையும் அந்நிய சதி என்று முத்திரை குத்திக் கொச்சைப்படுத்தும் முயற்சியே தற்போதைய உளவுத்துறை அறிக்கை. அந்த வகையில் புறத்தோற்றத்தில் இது என்.ஜி.ஓ.க்களுக்கு எதிரான நடவடிக்கை போலச் சித்தரிக்கப்பட்டாலும், மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதே இதன் உண்மையான குறியிலக்கு என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

● அஜித்

# காவி கிரிமினல்களின் புதுத்திமிர்

**பூனேயில் இந்து ராஷ்டிரா சேனாவும், தமிழகத்தில் இந்து முன்னணியும் நடத்தியிருக்கும் காலித்தனங்கள், ஆட்சியதிகாரம் இந்து மதவெறி கும்பலுக்குப் புதுத்தெம்பை அளித்திருப்பதை காட்டுகிறது.**

**மோ**டி ஆட்சியில் அமர்ந்ததைத் தொடர்ந்து நாடெங்கும் ஆங்காங்கே இந்து மதவெறியர்களின் தாக்குதல்கள் புது வேகத்துடனும் வெறியுடனும் தொடங்கியிருக்கின்றன. தேர்தல் பிரச்சாரத்தின் போது, வளர்ச்சி, நல்லாட்சி என்ற முகமூடிகள் மூலம் தனது இந்து மதவெறி முகத்தை மறைத்துக் கொண்ட இந்தக் கும்பல், தற்போது குஜராத் மாடல் இந்துத்துவ பாசிசத்தை நாடு முழுவதும் நிலைநாட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது.

ஃபேஸ் புக்கில் நிகால் கான் என்ற முஸ்லிம், மராத்திய மன்னன் சிவாஜியையும், பால் தாக்கரேவையும் இழிவுபடுத்திவிட்டதாகவும், சிவாஜி சிலையை யாரோ சேதப்படுத்திவிட்டதாகவும், இந்துப் பெண்ணை மாற்று மதத்தினர் பாலியல் பலாத்காரம் செய்துவிட்டதாகவும் பலவிதமான வதந்திகள் இந்து வெறி அமைப்புகளால் புனே நகரில் திட்டமிட்டுப் பரப்பப்பட்டன.

இதனைத் தொடர்ந்து புனே மற்றும் அவுரங்காபாத் நகரங்களில் உள்ள முஸ்லிம் குடியிருப்புகள், கடைகள், நடைபாதைகள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தியது இந்து ராஷ்டிர சேனா என்ற இந்து வெறி அமைப்பு. புனே நகரில் பல மசூதிகளுக்குள் புகுந்து குர்ஆனை எரித்து, முஸ்லிம்களின் கல்லறைகளைச் சேதப்படுத்தி, இந்துக்களும் முஸ்லிம்களும் வழிபடுகின்ற பிரபல தர்காவான ஹஸ்ரத் ஜலாலுதீன் குவாத்ரி தர்காவைச் சூறையாடி வெறியாட்டம் நடத்தியதோடு, நெடுஞ்சாலைகளை மறித்து வாகனங்களின் கண்ணாடிகளை உடைப்பது போன்ற காலித்தனங்களிலும் ஈடுபட்டிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாகத்தான், தொழுகைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த மோசின் சாதிக் ஷேக் என்ற 24 வயது முஸ்லிம் இளைஞர் தடிகளாலும், ஹாக்கி மட்டைகளாலும் நடுவீதியில் வைத்து, துடிக்கத் துடிக்க அடித்துக் கொல்லப்பட்டார். அவர் செய்த ஒரே தவறு, தன்னை முஸ்லீமாக அடையாளம் காணும் விதத்தில் தாடி வைத்து, தலையில் குல்லா அணிந்து, பதானி குர்தா அணிந்திருந்ததுதான். அவர் ஒருபாவமும் அறியாத அப்பாவி என்று தெரிந்தேதான் அவரைக் குரூரமாகக் கொலை செய்திருக்கிறார்கள் இந்து வெறியர்கள். ஒரு அப்பாவியைக் கொன்றது மட்டுமின்றி, இக்கொலையைக் கொண்டாடும் விதத்தில், ‘‘முதல் விக்கெட் விழுந்துவிட்டது’’ என்று குறுஞ்செய்தி அனுப்பி மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்து மதவெறி பயங்கரவாதிகளால் நடுரோட்டில் அடித்தே கொல்லப்பட்ட மோசின் சாதிக் ஷேக்.



மகாராஷ்டிர மாநிலத்தில் இயங்கிவரும் இந்த அமைப்பின் தலைவன் தனஞ்செய் தேசாய், ரியல் எஸ்டேட், கட்டப்பஞ்சாயத்து, ஆள்கடத்தல் உள்ளிட்ட கிரிமினல் குற்றங்களைத் தொழிலாகக் கொண்டவன். இந்து ராஷ்டிர சேனா என்பது இந்த கிரிமினலின் அரசியல் முகம். கடந்த 5 ஆண்டுகளில் இவன் மீது 23 கிரிமினல் வழக்குகள் இருந்த போதிலும், மாநிலத்தை ஆளும் காங்கிரசு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விளைவு, மாநிலம் முழுவதும் உதிரி வர்க்க இளைஞர்கள் சுமார் 4000 பேரை ரவுடிக் கும்பலாக இவனால் திரட்ட முடிந்திருக்கிறது. மோசின் ஷேக் கொலையும்கூடத் திடீரென்று நடந்து விடவில்லை. அதற்கு முந்தைய நாட்களில், மசூதிகளையும் வாகனங்களையும் தாக்கி பீதியைப் பரப்பிய போதிலும், போலீசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் துணை நின்றதன் தொடர்ச்சியாகத்தான் அந்தக் கொலை நடந்திருக்கிறது.

இந்தக் கொலை உள்ளிட்ட கலவரங்கள் அனைத்துக்கும் காரணமாக சித்தரிக்கப்பட்ட ஃபேஸ்புக் பக்கம் குறித்த உண்மை என்ன? ஒரு ஆண்டுக்கு முன்னரே உருவாக்கப்பட்ட அந்த பக்கம் நிகில் திகோனே என்ற இந்து இளைஞருடையது என்று இப்போது கூறுகிறது மகாராஷ்டிர போலீசு.

●●●

கடந்த மாதம் சென்னையில் திருவள்ளூர் மாவட்ட இந்து முன்னணி தலைவர் சுரேஷ்குமார் அடையாளம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டார்.



இந்து ராஷ்டிரா சேனா என்ற இந்து மதவெறி பயங்கரவாத அமைப்பின் தலைவன் தனஞ்செய் தேசாய்.

கட்டப்பஞ்சாயத்து, சொந்தப் பகை, தொழில் போட்டி, பெண் விவகாரம் போன்ற காரணங்களுக்காக அவ்வப்போது கொல்லப்படும் ஓட்டுப் பொறுக்கி கட்சிக்காரர்களுக்கும் இவர்களுக்கும் எந்த வேறுபாடும் இல்லையென்ற போதிலும், கொல்லப்பட்டவர்கள் அனைவருமே இந்து சமூகத்துக்காக தொண்டாற்றிய புனிதர்கள் போலவும், அதனால்தான் முஸ்லீம் தீவிரவாதிகள் அவர்களைக் கொன்று விட்டதைப் போலவும் ஒரு திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தை செய்து வருகின்றன இந்துவெறி அமைப்புகள். செத்த மறுகணமே, சுரேஷ்குமாரின் குடும்பத்துக்கு பத்து லட்சம் ரூபாய் நிவாரணம் தரவேண்டும், மனைவிக்கு அரசு வேலை கொடுக்க வேண்டும் என்று அறிக்கை விடுகிறார் இராம.கோபாலன்.

கொலையாளிகள் குறித்து போலீசு விசாரணையைத் துவக்கும் முன்பே முஸ்லீம் பயங்கரவாதிகள்தான் இந்தக் கொலையைச் செய்ததாகக் குற்றம் சாட்டிய இந்து முன்னணி, சுரேஷ்குமாரின் பிணத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்ற வழிநெடுக சிறுபான்மையினரைத் தூற்றிக் கோஷமிட்டதுடன், பொதுமக்கள் மீதும், கடைகள் மீதும், பேருந்துகள் மீதும் கல்வீசித் தாக்கியுள்ளனர். ஒரு கிறித்தவ தேவாலயத்தின் மீதும் கல்வீசித் தாக்கியிருக்கின்றனர்.

நாகர்கோயிலில் நடந்த திருவள்ளூர் மாவட்ட இந்து முன்னணி தலைவர் சுரேஷ்குமாரின் இறுதி ஊர்வலத்தின் பொழுது, ரவுடித்தனத்தில் இறங்கிய இந்து முன்னணி காலிகளைக் கலைக்கும் தமிழகப் போலீசு. (உள்படம்) சுரேஷ்குமார்.



சுரேஷ்குமாரின் சொந்த ஊரான நாகர்கோயிலுக்கு அவரது பிணத்தைக் கொண்டு சென்று அங்கும் ஊர்வலம் என்கிற பெயரில் கலவரம் செய்துள்ளனர். சென்னையில் செய்ததைப் போலவே கடைகளையும், வாகனங்களையும், அரசுப் பேருந்தையும் உடைத்ததுடன், வேலைக்குச் சென்று கொண்டிருந்த ஃபைசல் என்ற அப்பாவி இஸ்லாமியர் ஒருவரைக் கொலைவெறியுடன் தாக்கியுள்ளனர். சென்னையில் கலவரம் செய்தது தெரிந்தும், நாகர்கோயிலில் ஊர்வலத்துக்கு அனுமதி அளித்து, இந்து வெறியர்களின் வெறியாட்டத்தை வேடிக்கை பார்த்திருக்கிறது தமிழகப் போலீசு.

இந்தக் கலவரங்கள் குறித்து நடைபெற்ற தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்ற இந்து முன்னணி பிரமுகர் ''இது சும்மா உணர்ச்சிவசப்பட்டவர்கள் செய்தது, நாங்கள் திட்டமிட்டு நடத்தினால் வேறு மாதிரி இருக்கும்'' என நேரடியாக மிரட்டுகிறார். ''ஒரேயொரு கொலை நடந்திருக்கிறது. அதற்கு மோடி என்ன செய்ய முடியும்? ஏன் சும்மா கூச்சல் போடுகிறீர்கள்?'' என்று புனே கொலையைப் பற்றி பேசியிருக்கிறார் சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே.

கலிபோர்னியாவில் உள்ள சன்னிவாலி நகரில் இசை நிகழ்ச்சி நடத்தச் சென்ற பிரபல இசைக் கலைஞர் சுபா முட்கல், நாடாளுமன்றத் தேர்தலின் போது மோடியைக் கண்டித்து எழுதப்பட்ட கடிதத்தில் கையொப்பமிட்ட காரணத்துக்காக அங்கே மிரட்டப் பட்டிருக்கிறார். கோவா, மகாராஷ்டிரா, கேரளா போன்ற மாநிலங்களில் மோடியை விமரிசித்து இணையத்தில் எழுதியவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறை வைக்கப்படுகின்றனர். மோசின் ஷேக் படுகொலையைத் தொடர்ந்து அந்நகரில் இஸ்லாமியர்கள் பலர் தங்களது தாடிகளை மழித்துக் கொண்டதுடன், குல்லா, குர்தா அணிவதையும் கைவிட்டுவிட்டதாகக் கூறுகின்றன பத்திரிகை செய்திகள்.

இப்படி சிறுபான்மை மக்களைத் தாக்குவதன் மூலம், தாம் இரண்டாந்தர குடிமக்கள்தான் என்ற மனநிலைக்கு அவர்களைத் தள்ளுவதும், மதச்சார்பற்ற ஜனநாயகவாதிகளை அச்சுறுத்தி வாயடைக்க வைப்பதும்தான் இந்து மதவெறியர்களின் நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு எத்தகைய பாதகத்தையும் செய்வார்கள் என்பதே அவர்களுடைய வரலாறு.

மோடியின் ஆட்சி அவர்களுக்குப் புதிய திமிரைக் கொடுத்திருக்கலாம். மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் இந்தத் திமிருக்குப் பணியக் கூடாது. இம்மியளவும் விட்டுக் கொடுக்கக் கூடாது. இவை ஒவ்வொன்றையும் எதிர்த்து நாம் போராட வேண்டும்.

• அழகு

# கொலைகாரர்களுக்குப் பாதுகாப்பு!
# நீதிக்காகப் போராடினால் பொய்வழக்கு!!

குஜராத்தில் கடந்த 2002-ஆம் ஆண்டில் நடந்த இந்துவெறி பயங்கரவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்காக இந்திய நீதிமன்றங்களில் தொடர்ந்து போராடிவரும் மனித உரிமை ஆர்வலரான தீஸ்தா சேதல்வாதைப் பழி வாங்க அவர்மீது பொய்வழக்கு போட்டு, அவரைக் கைது செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது குஜராத் அரசு.

குஜராத்தில் நடந்த இந்துவெறி பயங்கரவாதப் படுகொலைகளைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்குச் சட்ட உதவிகள் செய்வதை நோக்கமாகக் கொண்டு ''நீதி மற்றும் அமைதிக்கான குடிமக்கள் அமைப்பு'' என்ற தன்னார்வ அறக்கட்டளையை தீஸ்தாவும் அவரது கணவர் ஜாவீத் ஆனந்த் உள்ளிட்ட மனித உரிமை ஆர்வலர்களும் இணைந்து நடத்தி வருகின்றனர். ஏற்கெனவே, மும்பை இந்துவெறி பயங்கரவாதத்துக்குப் பின்னர் ''சப்ரங்'' என்ற தன்னார்வ அமைப்பை 1993-இல் இவர்கள் ஏற்படுத்தியிருந்தனர்.

குஜராத் படுகொலையின் போது, குல்பர்க் சொசைட்டி எனும் முஸ்லிம் குடியிருப்புப் பகுதியில் கொடூரமான முறையில் 69 பேரைக் கொன்று இந்துவெறியர்கள் நடத்திய பாசிச வெறியாட்டத்தின் வரலாற்று சாட்சியமாக அந்த இடத்தையே ஒரு நினைவகமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். குல்பர்க் நினைவகத்துக்காக இவர்கள் திரட்டிய தொகை ரூ. 4.5 இலட்சத்தில் ரூ.50 ஆயிரம் மட்டுமே வெளிநாடுகளிலுள்ள தீஸ்தாவின் நண்பர்கள் வழங்கிய நன்கொடை. இதற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இருப்பினும், குல்பர்க் குடியிருப்பைச் சேர்ந்த சிலரை மிரட்டி, தீஸ்தாவுக்கெதிராக நிதி மோசடிக் குற்றம் சாட்டி பொய்ப்புகார் ஒன்றை எழுதி வாங்கியிருக்கிறது குஜராத் போலீசு. பொய்வழக்குப் போட்டு சிறை வைக்க முயன்றது. அவர்களது வங்கிக் கணக்குகளையும் முடக்கியிருக்கிறது.



குஜராத் அரசால் பொய்வழக்கு போடப்பட்டு பழிவாங்கப்படும் தீஸ்தா சேதல்வாத். (கோப்புப் படம்)

எனினும், உயர்நீதிமன்றம் இவர்களுக்கு முன்ஜாமீன் வழங்கியிருக்கிறது.

குல்பர்க் சொசைட்டி படுகொலை வழக்கில் மோடி உள்ளிட்டு குஜராத் அரசின் உயரதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதை தீஸ்தாவும் குல்பர்க் சொசைட்டியில் கொல்லப்பட்ட முன்னாள் காங்கிரசு எம்.பி.யான இஷான் ஜாப்ரியின் துணைவியார் ஜாகியா ஜாப்ரியும் உச்ச நீதிமன்றத்தில் 2006-ஆம் ஆண்டில் ஆதாரங்களுடன் அறிக்கையாகச் சமர்ப்பித்தனர். இந்த வழக்கின் கடைசி முனை மோடியை நெருங்கியதால், அன்று முதலே தீஸ்தாவுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடங்கி விட்டன. இந்த அறிக்கையைப் பரிசீலித்த உச்ச நீதிமன்றம், சி.பி.ஐ. இயக்குனர் ராகவன் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழுவை ஏற்படுத்தி விசாரணை நடத்த உத்தரவிட்டது. மோடியின் நேரடிப் பார்வையில்தான் குஜராத் இனப்படுகொலை நடத்தப்பட்டது என்பதைச் சட்ட ரீதியாகவே நிலைநாட்டுவதற்கு வலுவான சாட்சியங்கள் இருந்தபோதிலும், சிறப்புப் புலனாய்வுக் குழு படுகொலைக்கு அவரைப் பொறுப்பாக்குவதற்கான சாட்சியங்கள் இல்லை எனக்கூறி 2012-இல் மோடியை விடுவித்தது.

இதனை எதிர்த்து ஜாகியா ஜாப்ரி உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டார். சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கையை மீளாய்வு செய்யுமாறு மூத்த வழக்குரைஞர் ராஜு ராமச்சந்திரனை நியமித்தது உச்சநீதிமன்றம். சிறப்புப் புலனாய்வுக் குழு திரட்டியுள்ள சாட்சியங்களின்படியே மோடியின் மீது குற்றம் சாட்ட முடியும் என்று அவரது அறிக்கை கூறியது. மோடியைக் குற்றவாளிகள் பட்டியலில் சேர்ப்பதா என்பதை முடிவு செய்து கொள்ளுமாறு விசாரணை நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது உச்சநீதிமன்றம். விசாரணை நீதிமன்றம் மோடியைக் குற்றவாளிகளின் பட்டியலில் சேர்க்கவில்லை. விசாரணை நீதிமன்றத்தின் இந்த முடிவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்திருக்கிறார் ஜாகியா ஜாப்ரி.

கார்ப்பரேட் முதலாளிகளின் அதிகார பலம், பண பலம், சட்ட வல்லுநர்கள் படை, அரசு அதிகாரம் ஆகிய அனைத்து வலிமைகளும் பொருந்திய ஒரு பாசிஸ்டுக்கு எதிராக, நீதிமன்றத்தில் இத்தகைய விடாப்பிடியானதொரு சட்டப்போராட்டம் நடத்துவதென்பது சாதாரண விசயமல்ல. தன் உயிரைப் பணயம் வைத்துத்தான் இத்தகைய நடவடிக்கையில் யாரும் இறங்க முடியும்.

இதுவரை 5 பொய்வழக்குகள் தீஸ்தாவின் மீது போடப்பட்டிருக்கின்றன. பெஸ்ட் பேக்கரி வழக்கின் முக்கிய சாட்சியான ஜாகிரா ஷேக் என்ற பெண்ணை மிரட்டியும் பணம் கொடுத்தும் தீஸ்தாவுக்கு எதிராகப் புகார் கொடுக்க வைத்தது பாரதிய ஜனதா கும்பல். அதனையெல்லாம் சட்டரீதியாக முறியடித்தது மட்டுமல்ல, இந்து பாசிசம் கோலோச்சும் அந்த மாநிலத்தில், தம் குடும்ப உறுப்பினர்களைப் பறிகொடுத்தவர்களான சாட்சிகளுக்குத் தைரியம் கொடுத்து, அவர்களைச் சாட்சி சொல்ல வைத்து குற்றவாளிகளுக்கு எதிராகத் தீர்ப்பும் பெற்றிருக்கிறார் தீஸ்தா.

ரதயாத்திரை, மும்பை படுகொலை உள்ளிட்டு நாடு முழுவதும் நடந்துள்ள நூற்றுக்கணக்கான முஸ்லிம் எதிர்ப்புக் கலவரங்கள் எதிலும் இதுநாள்வரை இந்து வெறியர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டதில்லை. குஜராத்தில் இதுவரை 117 இந்துவெறியர்கள் குற்றவாளிகள் என்று நீதித்துறையால் தண்டிக்கப்பட்டுள்ளதிலும், நரோடாபாட்டியா படுகொலை வழக்கில் மோடி ஆட்சியில் அமைச்சராக இருந்த மாயா கோத்னானிக்கு 28 ஆண்டு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டதிலும் தீஸ்தாவின் உழைப்பும் பங்கும் முக்கியமானவை.

தீஸ்தா, ஜாகியா ஜாப்ரி மற்றும் பிற மனித உரிமை ஆர்வலர்களின் போராட்டத்தை ஆதரித்து தோள் கொடுப்பதன் மூலம்தான், இந்து வெறி பாசிசத்துக்கு எதிராகப் போராடுவதற்கான உந்துதலையும் துணிவையும் அனைவருக்கும் ஏற்படுத்த முடியும்.

● கதிர்

### கத்ரா, பாக்னா பாலியல் வன்கொடுமைகள்:

# சமூக நீதி அரசியல் சமூக அநீதியானது!

**சாதி-தீண்டாமையும் ஒழியவில்லை; வன்கொடுமைக் குற்றங்களைப் புரியும் ஆதிக்க சாதிவெறியர்களும் கடுமையாகத் தண்டிக்கப்படுவதில்லை என்பது இந்திய 'ஜனநாயக' அமைப்பு முறையின் நயவஞ்சகத்தையும் தோல்வியையும் எடுத்துக்காட்டுகிறது.**

உத்திரப்பிரதேச மாநிலத்தின் பதாவுன் மாவட்டத்திலுள்ள கத்ரா சதாத்கஞ்ச் கிராமத்தைச் சேர்ந்த 15 மற்றும் 14 வயதுடைய ஒன்றுவிட்ட சகோதரிகள் இருவர் கடந்த மே 27 அன்று இரவில் யாதவ் சாதிவெறியர்களால் கடத்திச் செல்லப்பட்டு, கும்பல் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு, பின்னர் உயிரோடு தூக்கில் தொங்கவிடப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இந்திய ஜனநாயகத்தின் போலித்தனத்தை உள்நாட்டில் மட்டுமின்றி, எல்லை தாண்டியும் அம்பலப்படுத்திவிட்டது. அவ்விரண்டு சிறுமிகளும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என முதலில் கூறப்பட்டாலும், அவர்கள் இருவரும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஷாக்கியா சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது தற்பொழுது தெரிய வந்திருக்கிறது.

கத்ரா கிராமத்தில் யாதவ் சாதியினர் சிறுபான்மையினராக இருந்தாலும், அவர்கள் வசதிமிக்க புதுப் பணக்கார விவசாயிகளாகவும் அரசியல் செல்வாக்குமிக்கவர்களாகவும் உள்ளனர். இதுவன்றி, பதாவுன் மாவட்டம் முழுவதுமே யாதவ் சாதி வெறியர்களும் மற்றும் அவர்கள் கட்சியான சமாஜ்வாதிக் கட்சியின் குண்டர்களும் வைத்ததுதான் சட்டமாக இருந்து வருகிறது. இந்தப் பின்னணிதான் சாதியப் படிநிலை அடுக்கில் யாதவ் சாதியினருக்குச் சேவை செய்யும் நிலையில் வைக்கப்பட்டுள்ள ஷாக்கியா சாதியைச் சேர்ந்த அச்சிறுமிகளுக்கு எதிரான மிகக் கொடூரமான குற்றத்தைச் செய்யும் துணிவைக் குற்றவாளிகளுக்குத் தந்திருக்கிறது. அச்சிறுமிகளின் வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் உள்ள ஒரு மாமரத்தில் அவர்களை உயிரோடு தூக்கில் தொங்கவிட்டுக் கொன்றிருப்பதை யாதவ்களின் சமூக, பொருளாதார, அரசியல் ஆதிக்கத்தின் குறியீடாக, தங்களை யாரும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது எனச் சவால்விடும் யாதவ் சாதிவெறி பயங்கரவாதத்தின் குறியீடாக மட்டுமே காண முடியும்.

அச்சிறுமிகள் கடந்த மே 27 அன்று இரவில் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்காக தமது வீட்டுக்கு அருகேயுள்ள வயல்வெளிக்கு வந்த சமயத்தில், உள்ளூரைச் சேர்ந்த உடன்பிறந்த சகோதரர்களான பப்பு யாதவ், அவதேஷ் யாதவ், உர்வேஷ் யாதவ் உள்ளிட்டு ஒரு நான்கு பேரால் கடத்திச் செல்லப்பட்டனர். இதற்கு சத்ரபால் யாதவ், சர்வேஷ் யாதவ் என்ற இரண்டு உள்ளூர் போலீசார் உடந்தையாக இருந்துள்ளனர். அச்சமயத்தில் சிறுமிகள் கூக்குரல் எழுப்பியதைக் கேட்டு ஓடிவந்த அவர்களது மாமா ராம்பாபுவை அக்கும்பல் துப்பாக்கியைக் காட்டி மிரட்டித் துரத்தியடித்திருக்கிறது.

சிறுமிகள் யாதவ் சாதியைச் சேர்ந்த கும்பலால் கடத்தப்படுவதைக் கண்ணால் கண்ட நேரடி சாட்சியான ராம்பாபு, அச்சிறுமிகளின் பெற்றோர்களை அழைத்துக்கொண்டு ஊரில் உள்ள புறக்காவல் நிலையத்தில் புகார் கொடுக்க முயன்றபொழுது, அங்கிருந்த உதவி ஆய்வாளர் ராம்விலாஸ் யாதவ், ''ராம்பாபு குறிப்பிடும் நபர்கள் கௌரவமானவர்கள்'' எனக் குற்றவாளிகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசியதோடு, அச்சிறுமிகளுள் ஒருவரின் தந்தையான சோஹன்லாலின் கன்னத்தில் அறைந்து துரத்தியடித்து



யாதவ் சாதிவெறியர்களால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு, தூக்கில் தொங்கவிடப்பட்டுக் கொல்லப்பட்ட சகோதரிகளின் சடலங்களை கீழே இறக்க மறுத்து, நீதி கேட்டு நடந்த ஆர்ப்பாட்டம்.

விட்டார். இதன்பின் அவர்கள் கிராமத்திலிருந்து 12 கி.மீ. தூரத்திலுள்ள மற்றொரு போலீசு நிலையத்தில் புகார் கொடுக்கச் செல்ல முயன்றதை போலீசு கான்ஸ்டபிள் சர்வேஷ் யாதவ்தான் தடுத்து நிறுத்தியிருக்கிறான்; சர்வேஷ் யாதவ்தான் பப்பு யாதவிடம் அச்சிறுமிகளைக் கொன்றுவிடுமாறு ஆலோசனை கூறியதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. சிறுமிகளைக் கடத்தியது, பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கியது, உயிரோடு தூக்கிலிட்டுக் கொன்றது வரையிலும் உள்ளூரைச் சேர்ந்த இரண்டு போலீசாருக்குத் தொடர்பிருந்தாலும், கத்ரா போலீசு தொடங்கி அம்மாநில போலீசு இயக்குநர் வரையிலுமான ஒட்டுமொத்த போலீசு துறையும் குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்துகொண்டதற்கு அதனின் சொந்த (யாதவ்) சாதிப்பற்றும் ஆதிக்க சாதி வெறியும்தான் முதன்மையான காரணமாகும்.

அம்மாநில டி.ஜி.பி.யாக உள்ள ஏ.எல்.பானர்ஜி விசாரணை தொடங்கிய நிலையிலேயே, அதனைத் திசைதிருப்பிவிடும் உள்நோக்கத்தோடு, ''இக்கொலைகள் சொத்துக்காக நடந்திருக்கக்கூடும்; இறந்துபோன பெண்களின் நெருங்கிய உறவினர்களே இக்கொலைகளைச் செய்திருக்கலாம்; குற்றம் சுமத்தப்பட்டிருப்பவர்கள் அப்பாவிகள்; கொல்லப்பட்ட சிறுமிகளுள் ஒருவர் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது நிரூபணமாகவில்லை'' என்றெல்லாம் வெளிப்படையாகவே குற்றவாளிகளுக்கு ஆதரவாகப் பேசி வந்தார்.

இக்குற்றத்தை மறைத்துவிடவும், நீர்த்துப்போகச் செய்யவும் உ.பி. போலீசு எடுத்த முயற்சிகள் அனைத்தும் கேவலமான முறையில் அம்பலமாகித் தோல்வியடைந்த பிறகுதான் உ.பி.யை ஆளும் சமாஜ்வாதி கட்சி தன்னை நியாயவானாகக் காட்டிக் கொள்ளும் அடிப்படையில் வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்து, ஐந்து இலட்ச ரூபாயை நட்ட ஈடாகத் தரவும் முன்வந்தது. எனினும், உ.பி. அரசின் இந்தத் திடீர்க் கரிசனமெல்லாம் அதற்கு எந்தவொரு மரியாதையையும் பெற்றுத்தரவில்லை. அச்சிறுமிகளின் பெற்றோர் உ.பி. அரசு வழங்கிய ஐந்து இலட்ச ரூபாய் இழப்பீடு தொகையை ஏற்றுக் கொள்ள மறுத்ததோடு, உ.பி. முதல்வர் அகிலேஷ் யாதவின் முகத்தில் அறைந்தாற்போல, ''எங்களுக்கு நீதிதான் வேண்டுமே தவிர, நட்ட ஈடல்ல'' எனத் தெரிவித்தனர்.

இவ்வழக்கு விசாரணை சி.பி.ஐ.-க்கு மாற்றப்பட்டு, சத்ரபால் யாதவ், சர்வேஷ் யாதவ் என்ற இரண்டு உள்ளூர் போலீசுக்காரன்கள் மற்றும் பப்பு யாதவ் சகோதரர்கள் உள்ளிட்டு ஏழு பேர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு, ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருந்தாலும் வழக்கைத் திசை திருப்பும் முயற்சிகளும் தொடருகின்றன. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் உண்மை கண்டறியும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதைத்தான் இது வரை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இவ்வழக்கிலோ இதுவரை கேட்டிராத அதிசயமாக, வழக்கின் முக்கிய சாட்சிகளான கொல்லப்பட்ட சிறுமிகளின் பெற்றோரையும், மாமாவையும் உண்மை அறியும் சோதனைக்கு உட்படுத்துவதற்கான அனுமதியை நீதிமன்றத்தின் மூலம் பெற்றிருக்கிறது சி.பி.ஐ. ''தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த சாட்சியங்கள் பொய் சொல்லக் கூடியவர்கள்'' எனப் பல்வேறு வன்கொடுமை வழக்குகளில் நீதிமன்றங்கள் கருத்துத் தெரிவித்திருப்பதால், இந்த அனுமதிக்குப் பின்னுள்ள நோக்கத்தைச் சந்தேகிக்காமல் இருக்கமுடியாது. நீதிமன்றம், போலீசு, சி.பி.ஐ., என அதிகாரத் தாழ்வாரங்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆதிக்க சாதி கண்ணோட்டத்தின் நீட்சியாகவே இப்பரிசோதனைக்கு அளிக்கப்பட்ட அனுமதியைக் காண முடியும்.

•••

இச்சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டமெல்லாம் நடத்திய பா.ஜ.க., உ.பி. அரசைக் கலைத்துவிடுவோம் என மிரட்டவும் செய்தது. ராகுல் காந்தி, மாயாவதி, ராம் விலாஸ் பஸ்வான் ஆகியோர் பாதிக்கப்பட்ட குடும்பங்

அரியானாவின் பாக்னா கிராமத்தைச் சேர்ந்த நான்கு தாழ்த்தப்பட்ட மாணவிகளைப் பாலியல் பலாத்காரப்படுத்திய ஜாட் சாதிவெறியர்களைக் கைது செய்யக் கோரி டெல்லி - ஜந்தர் மந்தர் பகுதியில் நடந்த தொடர் ஆர்ப்பாட்டம்.



களைச் சந்தித்து ஆறுதல் கூறும் நாடகத்தை நடத்தி விட்டுப் போனார்கள். எனினும், இவர்கள் அனைவரும் இச்சம்பவத்தைச் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையாகவும், உ.பி. அரசைக் குண்டர்களின் அரசாகக் காட்டுவதற்கும் தான் பயன்படுத்திக் கொண்டார்களே தவிர, இதற்குப் பின்னுள்ள யாதவ் சாதிவெறியைக் கண்டித்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

ஒரு சில முதலாளித்துவ அறிவுத்துறையினர் அச்சிறுமிகளின் வீட்டில் கழிப்பறை இல்லாததால்தான் இந்தக் கொடிய சம்பவம் நடந்துவிட்டதெனப் புலனாய்வு செய்து, கழிப்பறை கட்டுவதுதான் இதற்குத் தீர்வு என முன்மொழிந்தனர். இந்த வாதத்தைக் கப்பெனப் பிடித்துக் கொண்ட உ.பி. அரசு, ''கத்ராவில் ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறைகள் கட்ட இருக்கிறோம். இதனால் பெண்கள் வீட்டிலிருந்து வெளியே வர வேண்டிய அவசியம் இருக்காது'' என அறிவித்தது. இதன் பின்னுள்ள முட்டாள்தனம் நிறைந்த வக்கிரம் ஒரு புறமிருக்க, கத்ராவில் கழிப்பறைகள் கட்டுவதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை தொடங்கப்பட வில்லை. அதேசமயம், ஓட்டுக்கட்சிகளின் தலைவர்கள் வந்து செல்வதற்கு வசதியாக ஒரு ஹெலிகாப்டர் இறங்கு தளம் அக்கிராமத்தில் அமைக்கப்பட்டுவிட்டது.

சமூக நீதி பேசும் ஓட்டுக்கட்சிகளின் வக்கிரமும் ஆணாதிக்க கொழுப்பும் சந்தர்ப்பவாதமும் இதோடு நின்றுவிடவில்லை. கத்ரா சம்பவம் பற்றிக் கேள்வி எழுப்பிய ஒரு பெண் நிருபரிடம், ''நீங்கள் எந்த அபாயத்தையும் சந்திக்கவில்லைதானே ? '' எனக் குதர்க்கமாக எதிர்க்கேள்வி எழுப்பினார் உ.பி. முதல்வர் அகிலேஷ் யாதவ். ஒருபுறம் கத்ராசம்பவத்தையும் சமாஜ்வாதி அரசையும் கண்டிப்பதாக சவுண்டு விட்டுக் கொண்டிருந்த பா.ஜ.க. இன்னொருபுறம் அகிலேஷுக்கு ஆதரவாகவும் நடந்துகொண்டது. ''எந்தவொரு அரசும் பெண்களைப் பாலியல் வன்புணர்ச்சியிலிருந்து காப்பாற்றிவிட முடியாது; சில வன்புணர்ச்சிக் குற்றங்கள் சரியானவை; சில தவறானவை'' என அகிலேஷுக்காகப் பரிந்து பேசினார், பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேச மாநில உள்துறை அமைச்சர் பாபுலால் கௌர்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறையை கௌர் நியாயப்படுத்திய அதேவேளையில்தான் மத்தியப் பிரதேசமாநிலத்தில் ஒரு பழங்குடியினப் பெண், கும்பல் பாலியல் வன்புணர்ச்சிக்குப் பலியான சம்பவம் நடந்தது. மேலும், மோடி அரசில் இரசாயனம் மற்றும் உரத்துறையின் துணை அமைச்சராக இருக்கும் நிகல் சந்த் மேக்வால் மீது கும்பல் பாலியல் வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டு நிலுவையில் இருப்பதும், நீதிமன்ற விசாரணைக்கு அவர் அழைக்கப்பட்டிருப்பதும் அம்பலமானது. ''இது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு'' எனப் பதில் அளித்து குற்றம் சாட்டப்பட்டுள்ள நிகல்சந்துக்கு வெளிப்படையாக வக்காலத்து வாங்கியது, பா.ஜ.க.

கடந்த மார்ச் மாதம் காங்கிரசு ஆளும் அரியானா மாநிலத்திலுள்ள பாக்னா எனும் கிராமத்தைச் சேர்ந்த பதின்வயதுடைய நான்கு தாழ்த்தப்பட்ட பெண்கள் - அதிலொரு பெண் பதின்மூன்றே வயதான சிறுமி - மாலை நேரத்தில் சிறுநீர் கழிப்பதற்காகத் தமது வீட்டுக்கு அருகிலுள்ள வயல் வெளிக்குச் சென்றிருந்த சமயத்தில் அவர்கள் ஐந்து பேர் கொண்ட ஜாட் சாதிவெறியர்களால் கடத்திச் செல்லப்பட்டு, மயக்க மருந்து கொடுக்கப்பட்டு, கும்பல் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு, மயங்கிய நிலையிலேயே வயல்வெளியில் தூக்கியெறியப்பட்டனர். இந்த வன்கொடுமையைக் கண்டித்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திய பிறகுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, ஐந்து குற்றவாளிகள் மட்டும் கைது செய்யப்பட்டனர்.


தமிழகத்தின் குளித்தலை கோட்டப் பகுதியில் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட இளம்பெண் வினிதா.
(நன்றி: ஜூ.வி.)

உ.பி.யின் கத்ரா கிராமத்திற்கு வந்து உங்களுக்கு நியாயம் கிடைக்கப் போராடுவேன் என ஜம்பம் அடித்து விட்டுச் சென்ற ராகுல் காந்தி, பாக்னாவில் நடந்த வன்கொடுமை குற்றம் பற்றி வாய் திறக்க மறுக்கிறார். தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் தன்னைப் பிற்படுத்தப்பட்டவனாக அடையாளப்படுத்திக்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி கத்ரா சம்பவம் பற்றிப் பேச மறுக்கிறார். இந்த ''ஒற்றுமை'' குறித்து மட்டுமல்ல, டெல்லியில் நடந்த பாலியல் வன்புணர்ச்சியைக் கண்டித்து நடுத்தெருவுக்கு வந்த நகர்ப்புற நடுத்தர வர்க்கமும் கத்ரா, பக்னா சம்பவங்கள் பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருப்பது குறித்தும் தாழ்த்தப்பட்ட மற்றும் அடித்தட்டு மக்கள் கேள்வி எழுப்ப வேண்டிய தருணமிது.

கத்ராவிலும் பாக்னாவிலும் நடந்துள்ள இப்பாலியல் வன்கொடுமைகள் ஒரு பெரும் போராட்டத்திற்குப் பிறகுதான் வெளியே தெரிந்து, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படியான போராட்டங்கள் எதுவுமே நடைபெறாததால், தமிழகத்தில் குளித்தலை கோட்டப் பகுதியில் ஆறு தாழ்த்தப்பட்ட மாணவிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவங்கள் - கடந்த ஆறு மாதத்திற்குள் நடந்தவை இவை - சுவடே தெரியாமல் மறைக்கப்பட்டுவிட்டன. அதேபொழுதில் வழக்கு பதிவு செய்யப்பட்டாலே நீதி கிடைத்துவிடும் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. இந்த நிலைமைகள் அனைத்தும் நீதி வேண்டுமா, இறுதி வரை எதிர்த்துப் போராடு என்ற உண்மையைத்தான் உரத்துச் சொல்கின்றன.

● குப்பன்

# அரசு வங்கிகளை விழுங்கவரும் கார்ப்பரேட் வல்லூறுகள்!

**அரசு வங்கிகளில் வாராக்கடன்கள் அதிகரித்திருப்பதைக் காட்டி, அவ்வங்கிகளைத் தனியார்மயமாக்கும் சதிவலை பின்னப்படுகிறது.**

கடந்த பத்தாண்டு கால காங்கிரசு ஆட்சியில் அலைக்கற்றை, நிலக்கரி, இரும்பு, பாக்சைட், கச்சா எண்ணெய் வயல்கள் உள்ளிட்ட நாட்டின் பொதுச் சொத்துக்களை ஒன்றன் பின் ஒன்றாக விழுங்கிய இந்தியத் தரகு முதலாளிகளும் அந்நிய ஏகபோக முதலாளிகளும் அப் பகற்கொள்ளையின் தொடர்ச்சியாக பொதுத்துறை வங்கிகள் நிதி நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருப்பதாகக் கூறி, அவற்றை வளைத்துவிடச் சதித்தனமாக முயலுகிறார்கள். இதற்கான பரிந்துரைகளைக் கொண்ட பி.ஜே.நாயக் கமிட்டியின் அறிக்கை மோடி அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது.

பொதுத்துறை வங்கிகள் நிதி நெருக்கடி அபாயத்தில் சிக்கும் நிலையில் இருப்பதற்கு மற்றைய காரணங்களைவிட வாராக் கடன்கள்தான் முதன்மையானதாகும். அனைத்திந்திய வங்கி ஊழியர் சங்கம் மே மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''கடந்த 2008 மார்ச்-இல் 39,000 கோடி ரூபாயாக இருந்த பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் 2013-ஆம் ஆண்டு இறுதியில் 5,50,000 கோடி ரூபாயாக அச்சமூட்டக்கூடிய வகையில் அதிகரித்திருப்பதாக''க் குறிப்பிட்டுள்ளது. 2008-13 க்கு இடையிலான 5 ஆண்டுகளில் அரசுடைமை வங்கிகளின் இலாபத்திலிருந்து 1.41 இலட்சம் கோடி ரூபாய் வாராக் கடனுக்காக ஒதுக்கப்பட்டு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் ஊழியர் சங்கம் கூறுகிறது.

''பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் தற்பொழுதுள்ள நிலையைவிட இன்னும் ஒரு மடங்கு அதிகரிக்குமானால், அது வங்கிகளின் தற்போதைய மூலதனத்தில் நாற்பது சதவீதத்தைக் கபளீகரம் செய்துவிடும்'' என இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்று கூறுகிறது. வாராக் கடன்கள் தான் பொதுத்துறை வங்கிகளின் முதல் வில்லன் என்ற உண்மை அம்பலமாகியிருக்கும் வேளையில் வெளிவந்துள்ள பி.ஜே.நாயக் கமிட்டி அறிக்கையோ இந்த வாராக் கடன்களை வசூலித்து வங்கிகளின் நிதி நிலைமையைச் சீராக்கும் ஆலோசனைகள் எதையும் முன் வைக்கவில்லை. மாறாக, ''பொதுத்துறை வங்கிகளின் நிதி நிலைமை கவலைக்கிடமாக இருப்பதற்கு நிர்வாகத் திறமையின்மையும் அரசின் தலையீடும்தான் காரணமென்று'' கண்டு பிடித்து, இதற்குத் தீர்வாகத் தனியார்மயத்தைப் பரிந்துரைத்திருக்கிறது.

''வங்கிகளைத் தேசியமயமாக்கும் சட்டம், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா சட்டம் ஆகிய இரண்டையும் அறவே நீக்கி, பொதுத்துறை வங்கிகள் அனைத்தையும் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். மைய அரசு பொதுத்துறை வங்கிகளில் உள்ள தனது பங்கு மூலதனத்தை 50 சதவீதமாகக் குறைத்துக் கொள்வதோடு, வங்கி முதலீட்டு கம்பெனி என்ற புதிய நிறுவனத்தைத் தொடங்கி அதனிடம் இப்பங்கு மூலதனத்தையும் வங்கிகளை நிர்வகிக்கும் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டும்.

கந்துவட்டிக் கடனிலிருந்து மீள வழியின்றித் தற்கொலை செய்து கொண்ட ஆந்திராவைச் சேர்ந்த 26 வயது விவசாயி கொண்டம் சீனிவாஸ். (கோப்புப் படம்)



எதிர்காலத்தில் இவ்வங்கி முதலீட்டு கம்பெனி தனது பங்கு மூலதனத்தை 50 சதவீதத்திற்கும் கீழாகக் குறைத்துக் கொள்வதோடு, வங்கிகளை நிர்வகிக்கும் பொறுப்பு முழுவதையும் சம்பந்தப்பட்ட வங்கி நிர்வாகக் குழுவிடம் ஒப்படைத்துவிட வேண்டும். இவ்வங்கி நிர்வாகக் குழுவிற்கான நிபுணர்கள்/அதிகாரிகளை நியமிப்பதிலும், அவர்களுக்குச் சம்பளம் மற்றும் போனஸ் வழங்குவதிலும் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இருக்கக் கூடாது. மேலும், மைய ஊழல் கண்காணிப்புத் துறை, தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகியவற்றின் வரம்பிலிருந்தும் வங்கிகளின் நிர்வாகக் குழுக்களை விடுவிக்க வேண்டும்'' எனப் பரிந்துரைத்திருக்கிறது நாயக் கமிட்டி.



பொதுத்துறை வங்கிகளிலிருந்து 7500 கோடி ரூபாய் வரை கடன் பெற்று ஏப்பம் விட்டுள்ள கிரிமினல் பேர்வழி கிங்ஃபிஷர் சாராய ஆலை அதிபர் விஜய் மல்லையா. (கோப்புப் படம்)

பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் இந்த அளவிற்கு ஊதிப்போயிருப்பதற்கு நடுத்தர மற்றும் பெரும் தொழில் நிறுவனங்கள்தான் காரணமென்று ரிசர்வ் வங்கி குறிப்பிட்டிருக்கிறது. பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் விவகாரத்தை விசாரித்து வரும் சி.பி.ஐ., ''இந்த மொத்த வாராக் கடனில் பெரும் பகுதி ஒரு முப்பது நிறுவனங்களிடம் தேங்கியிருக்கிறது'' என கடந்த ஆண்டு செப்டம்பரில் அறிவித்தது. அரசியல் செல்வாக்குமிக்க விஜய் மல்லையாவின் கிங் ஃபிஷர் நிறுவனம் உள்ளிட்ட 406 நிறுவனங்கள் பொதுத்துறை வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை 70,300 கோடி ரூபாயாகும் என அம்பலப்படுத்தியிருக்கிறது, அனைத்திந்திய வங்கி ஊழியர் சங்கம். அதாவது கடனைக் கட்டாமல் வங்கிகளைத் திவாலாக்கும் கயவர்கள் கார்ப்பரேட் முதலாளிகளேயன்றி, கஞ்சிக்கில்லாத விவசாயிகளோ, சிறு தொழில் முனைவோரோ அல்ல என்ற உண்மை இன்னொரு முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கல்விக் கடனைக் கட்ட முடியாத மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களின் புகைப்படங்களை ஃபிளக்ஸ் பேனரில் போட்டு அவமானப்படுத்திய போடி நகர ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா நிர்வாகத்தின் திமிர்த்தனம். (கோப்புப் படம்)




வங்கிகள் முறைப்படுத்தும் சட்டம் 1969-இன்படி குறிப்பிட்ட கால இடைவெளியில் பொதுத்துறை வங்கிகள் தமது தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை ரிசர்வ் வங்கிக்கு அளிக்கவில்லை என்றும், இது கடனைக் கட்டாமல் ஏமாற்றும் கார்ப்பரேட் கிரிமினல்களைக் காப்பாற்றுவதற்காக, பொதுத்துறை வங்கி மற்றும் ரிசர்வ் வங்கி அதிகாரிகள் கூட்டு சேர்ந்து நடத்தியிருக்கும் சதி என்றும் குற்றம் சாட்டி, வாராக்கடன்கள் என்று கூறப்படுபவை அனைத்தின் மீதும் சி.பி.ஐ. விசாரணை கோரி மும்பை உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கிறார் கேதன் திரோட்கர் என்ற பத்திரிகையாளர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விவரம் பெற்று தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும் இது.

வாராக்கடன்கள் தொடர்பாக, சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்தாலும், சம்பந்தப்பட்ட வங்கிகளின் உயர் அதிகாரிகளை விசாரிப்பதற்கான அனுமதியை அரசு சி.பி.ஐ.க்கு வழங்குவதில்லை. உயிரி எரிபொருள் தயாரிப்பு நிறுவனம் என்ற பெயரில் மோடி அரசிடமிருந்து 300 கோடி ஏக்கரைப் பெற்றிருக்கும் பயோதார் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் அரசுடைமை வங்கிகளிடம் 1100 கோடி ரூபாயை வாராக்கடனாக ஏமாற்றியுள்ளது. 2011-இல் பதிவு செய்யப்பட்ட இவ்வழக்கில் ஐ.டி.பி.ஐ. வங்கியின் உயர் அதிகாரியை விசாரிப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. அதேபோல, 2700 கோடி ரூபாய் ஏமாற்றிய மாகுவா மீடியா என்ற தொலைக்காட்சி சானல் மீதான வழக்கில், கடன் கொடுத்த பஞ்சாப் நேசனல் வங்கி அதிகாரிகளை விசாரிப்பதற்கு சி.பி.ஐ.க்கு அரசு இன்ன மும் அனுமதி வழங்கவில்லை. இவை சில எடுத்துக் காட்டுகள் மட்டுமே.

இப்படிபட்ட நிலையில் மைய ஊழல் கண்காணிப்புத் துறை மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வரம்புகளிலிருந்து பொதுத்துறை வங்கிகளை விடுவிக்க வேண்டும் என நாயக் கமிட்டி பரிந்துரைத்திருப்பதன் பொருள், பொதுமக்களின் சேமிப்பை ஏப்பம் விடும் கிரிமினல் குற்றத்தை வங்கி நிர்வாகிகளும் முதலாளித்துவக் கும்பலும் கூட்டுச் சேர்ந்து கொண்டு நடத்துவதற்கு எவ்விதத் தடையும் இருக்கக் கூடாது என்பது மட்டுமல்ல, அது மக்களுக்குத் தெரியவும் கூடாது என்பதுதான்.

நாயக் கமிட்டி பரிந்துரைத்துள்ளது போல, திறமை வாய்ந்த பொருளாதார நிபுணர்களை வங்கிகளின் இயக்குநர்களாக நியமித்து, அவர்களுக்குக் கைநிறைய சம்பளமும் போனசும் கொடுத்து, அவர்கள் சர்வ சுதந்திரமாக இயங்குவதற்கு உரிமைகளும் கொடுத்திருந்த அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில், இத்தகைய நிபுணர்கள்தான் வீட்டுமனை சூதாட்டம் நடத்தி 2008-இல் பல வங்கிகளைத் திவாலாக்கினார்கள். இந்திய பொதுத்துறை வங்கிகள் தனியார்மயமாக்கப்படாத காரணத்தினாலும், குறிப்பிட்ட அளவிற்கு அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்ததனாலும்தான் திவாலாகாமல் தப்பின. பத்தாண்டுகளுக்கு முன்பு இந்தியாவைச் சேர்ந்த குளோபல் டிரஸ்டு வங்கி என்ற தனியார் வங்கி திவாலானபோது, அரசு அவ்வங்கியை ஓரியண்டல் வர்த்தக வங்கி என்ற பொதுத்துறை வங்கியோடு இணைத்ததன் மூலம்தான் மக்களின் சேமிப்பைக் காப்பாற்றியது.

உண்மை இவ்வாறிருக்க, வல்லுறவு செய்த கிரிமினலுக்கே பெண்ணைத் திருமணம் செய்து வைக்குமாறு தீர்ப்பளிக்கிறார் நாயக். இந்த பி.ஜே. நாயக் யார் தெரியுமா? இவர் ஆக்ஸிஸ் வங்கியின் முன்னாள் தலைவர்; சப் பிரைம் மோசடியில் குற்றம் சாட்டப்பட்ட ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களில் ஒன்றான மார்கன் ஸ்டான்லியின் முன்னாள் தலைமை அதிகாரி.

அரசுடைமை வங்கிகளைத் தனியார்மயமாக்குவது என்பது மறுகாலனியாக்க கொள்கையின் ஒரு அங்கம். குறிப்பாக, கடந்த நான்காண்டுகளாக நிலவி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ள சில்லறை வர்த்தகம், இராணுவ உற்பத்தி, தொழிலாளர் ஓய்வூதிய நிதியம், ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் பொதுத்துறை வங்கிகள் உள்ளிட்ட நிதித்துறையின் அனைத்து அரங்குகளையும் தனியாருக்குத் திறந்துவிட வேண்டும் என ஏகாதிபத்தியங்கள் கொடுத்து வரும் நிர்ப்பந்தம்தான் நாயக் கமிட்டியின் பின்புலம்.

## கடனுக்குப் பதிலாக காகிதத்தை வரவு வைக்கும் கிரிமினல் திட்டம்!

**வ**ங்கி இயக்குநர்களுடன் இணைந்து கார்ப்பரேட் முதலாளிகள் நடத்தி வரும் இந்தக் கொள்ளையை மறைப்பதற்கும், வங்கியின் வரவு - செலவு அறிக்கையில், வாராக்கடனை இருட்டடிப்பு செய்வதற்கும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதிய தந்திரத்தின் பெயர், சொத்து மறுகட்டுமானம். சமீபத்தில் இவ்வாறு 15 சொத்து மறுகட்டுமான கம்பெனிகள் இந்தியாவில் உருவாகியிருக்கின்றன. இவற்றைக் கடன் வசூல் செய்யும் அடியாள் கம்பெனிகள் என்று அழைப்பது பொருத்தம். அரசுடைமை வங்கிகளுக்கு வரவேண்டிய வாராக்கடன் 100 கோடி ரூபாய் என்று வைத்துக்கொண்டால், பேரம் பேசி அதனை 50 கோடிக்கு இந்த நிறுவனங்கள் வாங்குகின்றன. பணத்திற்குப் பதிலாக 50 கோடிக்கு காகிதப் பத்திரத்தைத் தருகின்றன. இந்தப் பத்திரம் கைக்கு வந்தவுடனேயே, இதனை வரவுக் கணக்கில் காட்டுவதன் மூலம், தங்களது வரவு - செலவு அறிக்கையில் வாராக்கடன் தொகையைக் குறைத்துக் காட்டுகின்றன வங்கிகள்.

மேற்படி கடன் வசூல் கம்பெனிகள் 5 முதல் 8 ஆண்டுகளுக்குள் கடனாளியிடமிருந்து பணத்தை வசூலிக்கும் பட்சத்தில் செலவு போக மீதித் தொகையை, வசூல் கம்பெனியும் வங்கியும் தாங்கள் போட்டுக் கொண்ட ஒப்பந்தப்படி பிரித்துக் கொள்வர். வசூல் ஆகாத பட்சத்தில் 8 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் வாராக்கடனாக அது வங்கியின் தலையில்தான் விடியும். வராத பணத்தை வரவு வைத்து கணக்கு காட்டும் இந்த மோசடி முறையை தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம், வாராக்கடன் தொகையை வங்கிகள் குறைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார் நிதியமைச்சர் அருண் ஜேட்லி. 2013-14 இல் மட்டும் அரசுடைமை வங்கிகள், இந்த முறையைப் பின்பற்றி 50,000 கோடி வாராக்கடனை விற்று, காகிதப் பத்திரத்தை வரவு வைத்திருக்கின்றன. இப்படி வாராக்கடன்களை அரசுடைமை வங்கிகளிடமிருந்து வாங்கியிருக்கும் அடியாள் கம்பெனிகளில் முக்கியமானது ரிலையன்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

•••

**த**னியார்மயத்திற்கு முன்பும், 1990-களிலும் இந்திய வங்கிகள் வழங்கிய கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதமாக இருந்தது, 2000-12 காலக்கட்டத்தில் 51.4 சதவீதமாக வீங்கியது எனக் குறிப்பிடுகிறார், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பொருளாதார பேராசிரியர் சி.பி. சந்திரசேகர். அதாவது அரசுடைமை வங்கிகளின் கடனை வைத்துத்தான் இந்தியப் பொருளாதாரம் எட்டு சதவீத வளர்ச்சியை எட்டிப்பிடித்தது.

குறிப்பாக, அரசு தன்னிடம் மூலதனம் இல்லை என்ற பொய்க்காரணத்தை

பொதுத்துறை வங்கிகளிலிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய்களைக் கடனாகப் பெற்று உலகக் கோடீசுவரர்களாக வளர்ந்துள்ள இந்தியத் தரகு முதலாளிகள் (இடமிருந்து) அனில் அம்பானி, கௌதம் அதானி மற்றும் எஸ்ஸார் குழுமத் தலைவர் பிரசாந்த் ரூயா.



## வங்கிக் கொள்ளையை ஊழியர் சங்கங்கள் வேடிக்கை பார்ப்பதேன்?

**வா**ராக்கடன் வைத்திருக்கும் கார்ப்பரேட் முதலாளிகள் யார் என்பதை வங்கி ஊழியர் சங்கம் வெளியிட்ட பின்னர்தான் இது குறித்து பரவலாக பொதுமக்களுக்குத் தெரிய வந்திருக்கிறது என்பது உண்மையே. ஆனால் பட்டியலை வெளியிடுவதற்கு மேல் இத்தனை ஆண்டுக்காலமாக இப்பிரச்சினைக்காக வங்கி ஊழியர் சங்கங்கள் செய்தது என்ன?

ஐந்து லட்சம் கோடிக்கு மேல் வாராக்கடன் என்ற பெயரில் மோசடி நடந்திருப்பதாக சி.பி.ஐ. கூறுவதற்கு முன் வங்கி ஊழியர் சங்கங்கள் இதனை கூறியிருக்க முடியாதா? கடன் வாங்கி விட்டு மோசடி செய்யும் கார்ப்பரேட் முதலாளிகளின் சொத்துக்களை வங்கி நிர்வாகம் உடனே கையகப்படுத்த வேண்டும் என்று கோரி ஊழியர் சங்கங்கள் ஏன் போராடுவதில்லை? அரசுடைமை வங்கிகளில் ஊழியர்கள் சார்பில் இயக்குநர்களாக (workman director) இருப்பவர்களுக்குத் தெரியாமல் கடன் தள்ளுபடிகளும், மறு சீரமைப்புகளும் நடந்திருக்குமா?

பொதுமக்களின் சேமிப்பு கொள்ளையடிக்கப் படுவதை எதிர்த்து வேலைநிறுத்தம் நடத்துவது வங்கி ஊழியர் சங்கங்களின் கடமையில்லையா? தற்போது ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. ஊழியர் சங்கம் கோரும் ஊதிய உயர்வைக் கொடுக்க மறுப்பதற்கு அரசு கூறும் முக்கியமான காரணம், வங்கிகளின் வாராக்கடன் (NPA). மறுசீரமைப்பு, (restructuring) சொத்து மறு கட்டுமானம் (asset reconstruction) என்ற கணக்குப் பித்தலாட்டங்கள் மூலம் வாராக்கடனைக் குறைத்துக் காட்டினால்தான் ஊதிய உயர்வு தரமுடியும் என்று ஊழியர் சங்கங்களிடம் வங்கி நிர்வாகம் கூறும். ஊழியர் சங்கங்கள் இதனை எதிர்த்துப் போராடுமா, அல்லது ஊதிய உயர்வுக் கோரிக்கைக்காக இந்த மோசடிக்கு உடன்பட்டுப் போகுமா?

---

சொல்லி, 2000-ஆண்டுக்குப் பிறகு விமான நிலையங்கள், விமானச் சேவைகள், தொலைத்தொடர்பு, கனிமச் சுரங்கங்கள், மின்சார உற்பத்தி, சாலைகள் உள்ளிட்ட அடிக்கட்டுமானத் துறையைத் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் திறந்துவிட்டது. சலுகை கொடுத்தால்தான் முதலாளிகள் மூலதனம் போடுவார்கள் என்று சொல்லி நிலம், நீர், மின்சாரம் உள்ளிட்ட அனைத்தையும் அவர்களுக்கு அடிமாட்டு விலைக்கு அள்ளித் தந்தது. ஆனால் எந்த முதலாளியும் தன் கைமுதலைப் போடவில்லை. இந்த காலகட்டத்தில்தான் நீண்டகாலத் திட்டங்களுக்கு கடன் கொடுப்பதில்லை என்ற அரசுடைமை வங்கிகளின் கொள்கையை அரசு சதித்தனமாக மாற்றியமைத்தது. தன்னிடம் மூலதனமில்லை என்று கூறிய அரசு, தன் கட்டுப்பாட்டில் இருந்த மக்களின் சேமிப்புப் பணத்தை அரசு வங்கிகளிலிருந்து எடுத்து அடிக்கட்டுமானத் தொழில்களில் முதலீடு செய்த தரகு முதலாளிகளுக்குக் கடனாக வாரிக்கொடுத்தது.

இந்திய வங்கிகள் தொழில்துறைக்கு வழங்கிய மொத்தக் கடனில் 35 சதவீதம் அடிக்கட்டுமான துறைக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், இந்த 35 சதவீத அடிக்கட்டுமானத் துறை கடனில் ஏறத்தாழ 50 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை மின்சாரத் துறைக்கு மட்டுமே வழங்கப்பட்டிருப்பதாகவும் ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இந்திய வங்கிகளின் மொத்த வாராக் கடனில் 53 சதவீதக் கடன்கள் அடிக்கட்டுமானத் துறை, இரும்பு உருக்காலை, விமானச் சேவை, சுரங்கத் தொழில், ஜவுளித் தொழில் ஆகிய ஐந்து துறைகளுக்கு வழங்கப்பட்டவையாகும் எனக் குறிப்பிடுகிறது, இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கை. இதிலும் குறிப்பாக 36 தனியார் அனல் மின்சார உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட 2,09,000 கோடி ரூபாய் கடன் வசூலிக்க இயலாத சிக்கலில் இருப்பதாக கிரெடிட் சுயிஸ் என்ற பன்னாட்டு தர மதிப்பீட்டு நிறுவனம் தெரிவிக்கிறது.

இந்த வாராக் கடன்கள் ஒருபுறமிருக்க, கடனைக் கட்டாமல் ஏய்த்துவரும் தரகு முதலாளிகள் வாங்கிய கடனுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்து, கடன் தொகையிலும் ஒரு பகுதியை தள்ளுபடி செய்து, திருப்பிக் கட்டுவதற்கான தவணை முறைகளை நீட்டிப்புச் செய்து தரும் அயோக்கியத்தனத்தை, கடன் மறுசீரமைப்பு என்று அழைக்கின்றன வங்கி நிர்வாகங்கள். இவ்வாறு மறுசீரமைக்கப்பட்ட கடன்களின் (Restructured loans) பட்டியலை எடுத்துக் கொண்டால், அது இன்னொரு கொள்ளையாக விரிகிறது. இந்த மோசடிக்கு நாடெங்கும் தெரிந்த உதாரணமாக விளங்குகிறது விஜய் மல்லையாவின் கிங் ஃபிஷர் நிறுவனம்.

அரசியல் செல்வாக்குமிக்க மிகப்பெரும் தரகு முதலாளியான விஜய் மல்லையா நடத்திவந்த கிங் ஃபிஷர் விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்குப் பொதுத் துறை வங்கிகள் 7,500 கோடி ரூபாய்க்கு மேல் கடன்

> தரகு முதலாளிகள் பொதுத்துறை வங்கிகளிலிருந்து பெற்ற கடன்கள், அவ்வங்கிகள் மறுசீரமைத்துள்ள கடன்கள், அவ்வங்கிகளின் வாராக் கடன்கள், அவ்வங்கிகள் உத்தரவாதமளித்துள்ள வெளிநாட்டுக் கடன்கள் – இவைதான் டாடா, அம்பானி உள்ளிட்டு பல இந்தியத் தரகு முதலாளிகளின் சொத்து மதிப்பை எகிறச் செய்து, அவர்களை உலகக் கோடீசுவரர்களின் பட்டியலில் இடம்பெறச் செய்திருக்கிறது.

கொடுத்திருந்தன. இந் நிறுவனம் சற்று தள்ளாடத் தொடங்கியவுடனேயே, கடன் கொடுத்திருந்த வங்கிகள் கிங் ஃபிஷர் உடனடியாகத் திருப்பிச் செலுத்த வேண்டிய 1,600 கோடி ரூபாயைப் பண மாகப் பெற்றுக் கொள்ளாமல், அந்நிறு வனத்தின் பங்குகளாகப் பெற்றுக் கொண்டன. அதுவும் அப்பங்குகளின் சந்தை விலையைவிட 62 சதவீதம் அதிகமாக விலை வைத்து, ஒரு பங்கை 60 ரூபாய்க்குப் பெற்றுக் கொண்டன. இதுவன்றி, அந் நிறுவனத்தின் மிச்சமிருக்கும் கடனும் சீரமைக்கப் பட்டது.

> **அரசு வங்கிகள் தனியார்மயமாக்கப்பட்டலோ அல்லது அவ்வங்கிகளில் தரகு முதலாளிகளின் பங்கை அதிகரித்தாலோ, அதன் பின்னர் விவசாயிகள், சிறுதொழில் முனைவோர், மாணவர்கள் உள்ளிட்ட சாதாரண மக்கள் யாரும் வங்கிகளில் கடன் பெறுவதை எண்ணிப் பார்க்கவும் முடியாது. மக்களின் சேமிப்புகள் அம்பானி, அதானி போன்ற தரகு முதலாளிகளுக்கு மட்டுமே பயன்படும்.**

கடந்த ஐந்தாண்டுகளில் இப்படிப் பல்வேறு தகிடு தத்தங்களின் மூலம் வாராக் கடன் பட்டியலுக்குள் கொண்டு வராமல் தந்திரமாக மறுசீரமைக்கப்பட்ட கடன் தொகை ஐந்து இலட்சம் கோடி ரூபாயாகும் எனக் குற்றஞ்சாட்டியிருக்கிறது, சி.பி.ஐ. 2009-12 ஆம் ஆண்டுகளில் மட்டும் பொதுத்துறை வங்கிகள் வழங்கிய கடன்களில் 47.9 சதவீதக் கடன்கள் மறுசீர மைக்கப்பட்டிருப்பதாகவும் இதில் அடிக்கட்டுமானத் துறைக்கு வழங்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட கடன்க ளின் பங்கு மட்டுமே 17.4 சதவீதம் என்று புள்ளிவிவ ரங்கள் தெரிவிக்கின்றன.

தரகு முதலாளிகளுக்கு பொதுத்துறை வங்கிகள் செய்துவரும் சேவை இதோடு மட்டும் நின்றுவிட வில்லை. அவர்கள் வாங்கிக் குவித்து வைத்துள்ள வெளிநாட்டுக் கடன்களுக்கும் - ஏறத்தாழ 6,28,800 கோடி ரூபாய் - பொதுத்துறை வங்கிகள் உத்தரவாதம் அளித்து சாட்சி கையெழுத்துப் போட்டுக் கொடுத் துள்ளன. அவர்கள் அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்தாதபொழுது, அதை அடைக்க வேண்டிய பொறுப்பு முழுவதும் இந்திய அரசு வங்கிகள் மீது சுமத்தப்படும்.

தரகு முதலாளிகள் பொதுத்துறை வங்கிகளிலி ருந்து பெற்ற கடன்கள், அவ்வங்கிகள் மறுசீரமைத் துள்ள கடன்கள், அவ்வங்கிகளின் வாராக் கடன்கள், அவ்வங்கிகள் உத்தரவாதமளித்துள்ள வெளிநாட்டுக் கடன்கள் - இவைதான் டாடா, அம்பானி உள்ளிட்டு பல இந்தியத் தரகு முதலாளிகளின் சொத்து மதிப்பை எகிறச் செய்து, அவர்களை உலகக் கோடீசுவரர்களின் பட்டியலில் இடம்பெறச் செய்திருக்கிறது. பொதுத் துறை வங்கிகள் தொழிற்துறைக்கு வழங்கிய மொத்தக் கடனில் ஏறத்தாழ 13 சதவீதக் கடன்கள் அதானி, எஸ்ஸார், அனில் திருபாய் அம்பானி குழுமம், வேதாந்தா, லான்கோ உள்ளிட்ட ஒரு பத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடு கிறது கிரெடிட் சுயிஸ். அதாவது, பொதுத்துறை வங்கிகளில் உள்ள மக்களின் சேமிப்பை, வாராக்கடன் என்ற பெயரில் விழுங்கி, தங்கள் சொத்து மதிப்பை உயர்த்திக் கொண்டிருக்கும் இந்தத் தரகு முதலாளிகள் கும்பல், வாராக்கடனால் வங்கிகள் நொடித்துவிட் டதால், அவற்றைத் தனியார்மயமாக்கி தங்களிடம் ஒப்படைக்குமாறு கோருகிறார்கள்.

அவ்வாறு தனியார்மயமாக்கப்பட்டலோ அல்லது அரசுடைமை வங்கிகளில் தரகுமுதலாளிகளின் பங்கை அதிகரித்தாலோ, அதன் பின்னர் விவசாயிகள், சிறுதொழில் முனைவோர், மாணவர்கள் உள்ளிட்ட சாதாரண மக்கள் யாரும் வங்கிகளில் கடன் பெறு வதை எண்ணிப் பார்க்கவும் முடியாது. மக்களின் சேமிப்புகள் அம்பானி, அதானி போன்ற தரகு முத லாளிகளுக்கு மட்டுமே பயன்படும். இதுதான் நாயக் கமிட்டி பரிந்துரையின் நோக்கம். வங்கிகளைத் தனி யார்மயமாக்கும் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக் கிறது மோடி அரசு. திருடர்கள் கையில் சாவியை ஒப் படைப்பதை நாம் அனுமதிக்கப் போகிறோமா என்பதே கேள்வி.

● செல்வம்

## அறிவிப்பு!

கடந்த ஜூன் இதழில் வெளியாகியிருந்த "அ.தி.மு.க.வின் வெற்றி... தேர்தல் ஆணையத்துக்கு நன்றி! என்ற கட்டுரையின் முதல் பத்தியில் அ.தி.மு.க. தமிழகத்தில் 39 இடங்களைப் பெற்றதாகத் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை 37 இடங்கள் எனத் திருத்தி வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், அக்கட்டுரையின் இறுதிப் பத்தியில் பா.ஜ.க. பத்து சதவீத வாக்குகளைத் தமிழகத்தில் பெற்றிருப் பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதும் தவறாகும். இதனை 5.5 சதவீத வாக்குகள் எனத் திருத்தி வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். எமது கவனக்குறைவினால் நேர்ந்த இப்பாரிய தவறுகள் இனி ஏற்படாதவாறு இதழைக் கொண்டுவருவோம் என வாசகர்களுக்கு உறுதியளிக்கிறோம்.

– ஆசிரியர் குழு.

# 15 ஆண்டுகளாக வராத குடிநீரைக் கொண்டுவந்த வி.வி.மு.வின் போராட்டம்!

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் உள்ள கள்ளிபுரம், அண்ணா நகர், திருவள்ளுவர் நகர் முதலான பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக குடிநீருக்காக அலைந்து திரிய வேண்டிய அவல நிலையை சந்தித்து வருகின்றனர். குடி தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க பல அதிகாரிகளைச் சந்தித்து மனு கொடுத்தும், சாலை மறியல் உள்ளிட்ட பல போராட்டங்களைச் செய்தும் அரசு இப்பிரச்சினையை தீர்க்கவில்லை.




பக்கத்திலேயே ஒகேனக்கல்லில் காவிரி பாய்ந்தோடினாலும் இப்பகுதிக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான எவ்வித முயற்சியையும் மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளவில்லை. இந்நிலையில் ஜப்பான் நிதிஉதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தை தாங்கள்தான் கொண்டுவந்ததாக ஜெயாவும் - கருணாநிதியும் தம்பட்டம் அடித்துக் கொள்வதற்கும் அதன்மூலம் அரசியல் ஆதாயம் தேடுவதற்கும் பயன்பட்டதேயொழிய, இதனால் இப்பகுதி மக்களுக்குப் பயனேதும் இல்லை.

இந்நிலையில், இப்பகுதியில் இயங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணி இப்பிரச்சினையில் தலையிட்டு இப்பகுதி மக்களிடையே விரிவானப் பிரச்சாரத்தை நடத்தியதோடு தடையின்றி தண்ணீர் வழங்கக் கோரி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக கடந்த ஜூன்-6 அன்று, கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. ஆர்ப்பாட்டத்தில், காலி குடங்களுடன் சாரை சாரையாக திரண்ட 500-க்கும் மேற்பட்ட மக்களைக் கண்டதும் கலக்கம் அடைந்தது, போலீசு. வட்டாட்சியர் அலுவலகம் முன்பு உள்ள சிறு சாலையில் அதிக எண்ணிக்கையில் மக்கள் திரண்டு வந்ததால் ஆர்ப்பாட்டமானது மறியல் போல ஆனது.

வட்டாட்சியர் பணியிலிருப்பதால், ஒலிபெருக்கியில் ஒலி அளவைக் குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்டு போலீசின் பல்வேறு கெடுபிடிகளை எதிர்கொண்டு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். மேலும், 15 ஆண்டுகாலமாகத் தீர்க்கப்படாமல் நீடிக்கும் இப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வை வலியுறுத்தியும், அதுவரையில் தற்காலிக ஏற்பாடாக லாரிமூலம் தண்ணீர் விநியோகம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தும் விதமாகவும் வட்டாட்சியரை சந்தித்து முறையிடுவது என்ற கோரிக்கையில் வி.வி.மு.வினர் உறுதியாக நின்றனர்.

கோரிக்கைகளை கேட்ட வட்டாட்சியர் உடனே பென்னாகரம் குடிநீர் பிரிவு ஆபரேட்டரை தொலைபேசியில் தொடர்புகொண்டார். ''உயர் மின்னழுத்தத்தின் காரணமாகத்தான் தண்ணீர் ஏற்ற முடியவில்லை'' என்றார், அவர். அடுத்து மின்வாரிய இணைப்பகத்தைத் தொடர்புகொண்டார். அவர்கள், இளநிலைப் பொறியாளரை அணுகச் சொன்னார்கள். இளநிலைப் பொறியாளரோ, ''நாங்கள் இதற்கு பொறுப்பல்ல, இது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்ட கன்ட்ரோலில் வருது'' என்றார். ஒகேனக்கல் கன்ட்ரோலுக்கு போன் செய்த தாசில்தாருக்கு ''தருமபுரி கன்ட்ரோல்'' என்று பதில் கிடைத்தது. தருமபுரி கன்ட்ரோலுக்கு போன் செய்த போது ''இது கோயமுத்தூர் கன்ட்ரோல்'' என்றனர். கோயமுத்தூருக்கு போன் செயத போது ''இதற்கு சென்னைதான் தலைமை, அங்கே கேளுங்கள்'' என்று அங்கு பதில் கிடைத்ததும் எரிச்சல் அடைந்த வட்டாட்சியர், ''இதற்கு நானே ஒகேனக்கல்லிருந்து தண்ணீர் கொண்டுவந்து கொடுத்து விடுவேன்'' என்று நொந்து போய் சொன்னார். பின்னர், 10 நாட்களுக்குள் பிரச்சினையை தீர்த்து தருவதாக வாக்குறுதியளித்ததோடு, அதுவரை லாரிமூலம் தண்ணீர் விநியோகம் செய்யவேண்டுமென்ற வி.வி.மு.வின் கோரிக்கையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டத்தை முடித்து வீட்டிற்கு வருவதற்கு முன்பே மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு தண்ணீர் வந்து விட்டது. அதற்கு முன்பு ஒரு அடி, இரண்டு அடி அளவிற்கு தண்ணீர் ஏற்றுவதற்கே பல காரணங்கள் கூறிவந்த நிலையில், இப்போராட்டத்திற்கு பிறகு தொட்டி முழுவதும் நீர் நிரம்பியது. போராட்டம் தான் தண்ணீரை வரவழைத்தது என்பதை உணர்ந்த மக்கள் தற்போது வி.வி.மு தோழர்களின் பின்னால் நம்பிக்கையோடு திரண்டு வருகின்றனர்.

# உருக்குலைந்த இராக்கில் உள்நாட்டுப் போர் ஏன்?

**ஆட்சி மாற்றம், ஜனநாயகம் என்ற போர்வையில், இராக், லிபியா, சிரியா மீது அமெரிக்கா தொடுத்த மறுகாலனியாதிக்க போரின் விளைவுதான் இராக்கின் இன்றைய அவலத்திற்குக் காரணம்.**

**க**டந்த 20 ஆண்டுகளாக அமெரிக்க மேலாதிக்க வல்லரசின் ஆக்கிரமிப்புப் போரினால் நாசமாக்கப்பட்டுள்ள இராக், உள்நாட்டுப் போரினால் குருதிச் சேற்றில் புதைந்து கொண்டிருக்கிறது.

இராக்கின் வடமேற்குப் பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். எனும் புதியதொரு இஸ்லாமிய பயங்கரவாத இயக்கம் வேகமாக வளர்ந்துள்ளதோடு, இப்பயங்கரவாதிகள் இராக்கின் பொம்மை அரசுக்கு எதிராக நடத்திவரும் போர்த்தாக்குதல்களை, அடுத்து சிரியாவின் வடபகுதியிலுள்ள அலெப்போ நகரிலிருந்து இராக்கில் உள்ள தியாலா மாகாணம் வரையிலான பகுதிகளைத் தனிநாடாக்கி, ஷாரியத் சட்டப்படியான இஸ்லாமிய அரசை (கிலாஃபத்) உருவாக்கியுள்ளதாக அறிவித்துள்ளனர். அபு பக்கர் அல் பக்தாதி என்பவர் தலைமையிலான இந்த சன்னி மார்க்க ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினர், இராக்கிலுள்ள ஷியா மார்க்கத்தினர் மீதும் அவர்களது மசூதிகள் மீதும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருவதால், நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக இராக்கிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

ஷியா, சன்னி எனும் இஸ்லாமிய மதப் பிரிவினரும் குர்திஷ் இனத்தவர்களும் இதர மத, இனச் சிறுபான்மைப் பழங்குடிப் பிரிவினரும் கொண்ட நாடுதான் இராக். இராக்கில் சதாம் ஆட்சி அமெரிக்காவால் தூக்கியெறியப்பட்ட பின்னர், இராக்கின் தெற்கே பஸ்ராவில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அமெரிக்காவுக்கு எதிராக ஆயுதமேந்திய தாக்குதல்களை நடத்தி வந்தனர். மறுபுறம், இராக்கின் வடமேற்குப் பகுதியில் இராக்கிய அல்கய்தா என்ற ஒரு சன்னி மார்க்க ஆயுதக்குழு அமெரிக்காவுக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்திவந்தது. இதன் தலைவர்களுள் ஒருவரான அல் பாக்தாதி பின்னர் அமெரிக்காவின் விசுவாசக் கைக்கூலியாக மாறினார். இராக்கின் அண்டை நாடான சிரியாவின் ஆசாத் அரசைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு அல் பாக்தாதியின் கூலிப்படையை ஆதரித்து வளர்த்த அமெரிக்கா, இவர்களை விடுதலைப் போராளிகளாகச் சித்தரித்து ஜோர்டானில் ராணுவப் பயிற்சி அளித்தது. இக்கூலிப்படைக்கு சவூதி அரேபியா, கட்டார் ஆகிய நாடுகளிலிருந்து தாராளமாக நிதியும், அமெரிக்காவிடமிருந்து அதிநவீன ஆயுதங்களும் வாரிவழங்கப்பட்டன.

அப்போது சிரியாவில் இயங்கியவந்த இன்னுமொரு இஸ்லாமிய அடிப்படைவாத அல் நுஸ்ரா என்ற அமெரிக்கக் கூலிப்படையுடன் இணைந்து அல் பாக்தாதி தலைமையில் உருவானதுதான் இஸ்லாமிக் ஸ்டேட் ஆஃப் இராக் அண்டு சிரியா (ஐ.எஸ்.ஐ.எஸ். ) அல்லது இஸ்லாமிக் ஸ்டேட் ஆஃப் இராக் அண்டு லெவண்ட் (ஐ.எஸ்.ஐ.எல்.) எனப்படும் இயக்கமாகும். சிரியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவர இந்தக் கூலிப்படையை அமெரிக்கா பயன்படுத்திக் கொண்ட போதிலும், அந்தக் குழுவோ வாய்ப்பைச் சாதகமாக்கிக் கொண்டு வங்கிக் கொள்ளைகளிலும், ஆயுதப் பறிப்பிலும் ஈடுபட்டுப் புதியதொரு பயங்கரவாத இயக்கமாக வளர்ந்துவிட்டது. இராக் மீதான இத்தீவிரவாதிகளின் தாக்குதல் குறித்து கவலை

அதிநவீன ஆயுதங்களுடன் இராக்கிய அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதப் படையினரின் அணிவகுப்பு.



கொண்டுள்ளதாகக் கூறும் அமெரிக்காவின் ஒபாமா அரசுதான், நேற்றுவரை இந்த ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினரை சிரியாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான சுதந்திரத்துக்கான போராளிகள் என்று சித்தரித்தது. இப்போது அவர்கள் பயங்கரவாதிகளாகவும், இராக்கின் ஜனநாயக அரசைச் சீர்குலைப்பவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.

ஏதோ சில இஸ்லாமிய பயங்கரவாதிகளால்தான் இராக்கின் அமைதிக்கும் ஜனநாயகத்துக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதைப் போல அமெரிக்காவும் மேற்கத்திய ஊடகங்களும் சித்தரிப்பதே அயோக்கியத்தனமானது. உண்மையில் ஏகாதிபத்தியவாதிகளால்தான் இராக் மட்டுமின்றி மேற்காசியா பிராந்தியமே பேரழிவுக்கு ஆளாகி நிற்கிறது. சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பிறகு, அமெரிக்கா நடத்திவரும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பது உலக மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான போர்தானேயன்றி, அமெரிக்கா கூறுவதுபோல அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது அதன் நோக்கமல்ல. தனது மேலாதிக்கக் கட்டுப்பாட்டுக்குள் எண்ணெய் வளமிக்க மேற்காசியப் பிராந்தியம் இருக்க வேண்டும்; அதேசமயம் அப்பிராந்தியத்தில் தனது மறுகாலனிய நடவடிக்கைகளுக்கு எதிராக எழும் எதிர்ப்புகளை மடைமாற்றிவிடும் நோக்கில் மத, இனப் பிரிவுகளுக்கிடையே முறுகல் நிலையும் பதற்ற நிலையும் நீடிக்க வேண்டும் என்பதே தொடர்ந்து அமெரிக்காவின் அணுகுமுறையாக உள்ளது.




ஐ.எஸ்.ஐ.எஸ். படையினரின் போர்த்தாக்குதலாலும் அமெரிக்க பொம்மை அரசின் எதிர்த்தாக்குதலாலும் உயிருக்கு அஞ்சி அகதிகளாகத் தப்பியோடும் இராக்கிய மக்களின் அவலம்.

உலக மேலாதிக்கத்துக்காக கெடுபிடிப் போர்களில் அமெரிக்காவும் சோவியத் ஒன்றியமும் தீவிரமாக ஈடுபட்டுவந்த காலத்தில், மத்திய ஆசிய நாடுகளின் மதவாதப் பிற்போக்குக் கும்பல்களுடன் அமெரிக்கா கூடிக் குலாவி தனது செல்வாக்கின்கீழ் அந்நாடுகளைக் கொண்டுவந்தது. அன்று இரான் மன்னன் ஷா-வுடைய ஆட்சியை அமெரிக்கா ஆதரித்தது. ஷா ஆட்சியையும் அமெரிக்காவையும் எதிர்த்துப் போராடிய கொமேனி தலைமையில் இஸ்லாமிய மதவாதிகள் ஆட்சியைப் பிடித்ததும், இரானைத் தாக்க அதன் அண்டை நாடான இராக்கின் அதிபர் சதாம் உசேனைத் தூண்டிவிட்டு, விசவாயு உள்ளிட்ட ஆயுதங்களைச் சதாமுக்கு வழங்கியது, அமெரிக்கா. எட்டு ஆண்டுகள் நடைபெற்ற இரான் - இராக் போரில் பத்து லட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி இரு நாடுகளும் பேரழிவுக்குள் தள்ளப்பட்டன.

இதே காலகட்டத்தில் ஆப்கானை அன்றைய சோவியத் வல்லரசு ஆக்கிரமித்ததும், ரசியாவை வெளியேற்றுவதற்கு சன்னி வகாபி அடிப்படைவாதக் குழுக்களை அமெரிக்கா உருவாக்கியது. இதற்குப் பயிற்சியளிப்பதற்காகவே பாகிஸ்தானில் ஏராளமான மதரசாக்களை உருவாக்க சவூதி அரேபிய மன்னராட்சியும் அமெரிக்காவும் இணைந்து நிதியுதவி செய்தன. ஆப்கானின் பழங்குடி யுத்தப்பிரபுக்களுக்கும் முஜாகிதீன்களுக்கும் அமெரிக்கா ஆயுத உதவி செய்தது. இதற்கு உதவியாக பாகிஸ்தான் மாற்றப்பட்டு, அமெரிக்காவின் ஆணைக்கேற்ப இப்பணிகளை பாகிஸ்தானின் உளவுப்படை ஒருங்கிணைத்தது.

சன்னி மார்க்க ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராகவும் அமெரிக்க பொம்மை அரசுப் படைகளுக்கு ஆதரவாகவும் இராணுவச் சீருடையுடன் அணிதிரண்டுள்ள ஷியா பிரிவு முஸ்லிம்கள்.



சோவியத் வல்லரசு தனது படைகளை விலக்கிக் கொண்டு ஆப்கானிலிருந்து வெளியேறியதும், அமெரிக்காவின் ஆதரவுடன் தாலிபான்களின் ஆட்சி அங்கு நிலைநாட்டப்பட்டது. இருப்பினும், தாலிபான்களுக்கும் அமெரிக்காவுக்கும் தத்தமது நலன்களையொட்டி முரண்பாடுகள் எழுந்து பிளவுபட்டன. வளைகுடாப் போரும், இஸ்ரேலின் அடாவடித்தனங்களும் இஸ்லாமிய மக்களை ஆத்திரம் கொள்ள வைத்தன. இந்தப் பின்னணியில் தான் அமெரிக்காவின் ஆதரவுடன் தொடங்

கப்பட்ட பின்லேடனின் அல்கய்தா இயக்கம் வளரத் தொடங்கி தாலிபான்களும் அல்கய்தாவுடன் சேரத் தொடங்கினர். அமெரிக்காவுடன் அது முரண்படத் தொடங்கியதும் அல்கய்தா இயக்கம் ஆப்கான் மட்டுமின்றி, உலகையே அச்சுறுத்தும் மிகக் கொடிய பயங்கரவாத இயக்கமாக அமெரிக்காவால் சித்தரிக்கப்பட்டது. போர்த்தாக்குதல்களால் ஆப்கான் சிதைக்கப்பட்டு அமெரிக்காவின் மேலாதிக்கம் நிலைநாட்டப்பட்டது.

தனது முன்னாள் காலனிய நாடுகள் அல்லது சோவியத் ஆதரவு நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளை அரங்கேற்றுவதற்கும், தனது மேலாதிக்கத்தின் கீழ் வராத இதர நாடுகளில் ஆட்சி மாற்றங்களை நடத்துவதற்கும் ஜனநாயகம், மனித உரிமை, தேசியஇனவிடுதலை என்ற பெயரில் தலையிட்ட அமெரிக்கா, சோவியத் ஒன்றியத்தைப் பல நாடுகளாகத் துண்டாடித் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டது. பின்னர் கிழக்கு ஐரோப்பாவில் பால்கன் நாடுகள் துண்டாடப்பட்டன.



''நாடு சீர்குலைக்கப்பட்டு 10 லட்சம் பேர் கொல்லப்பட்டுள்ள ஈராக் மீது போர் தொடுக்காதே!'' எனும் முழக்கத்துடன் அமெரிக்க அதிபர் மாளிகை அருகே ஆர்ப்பாட்டம் நடத்தும் அமெரிக்க மக்கள்.

மேற்காசியாவில் இராக் மீது காட்டுமிராண்டித்தனமான ஆக்கிரமிப்புப் போரை அமெரிக்கா நடத்தியது. இந்தியாவில் இந்துக்களையும் முஸ்லிம்களையும் மத ரீதியாகப் பிளவுபடுத்தி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது காலனியாதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டதைப் போலவே, இராக்கில் இஸ்லாமியர்களின் ஷியா மற்றும் சன்னிப் பிரிவுகளுக்கிடையிலான மோதலைத் தனது தேவைக்கேற்ப அமெரிக்கா பயன்படுத்திக் கொண்டு தனது மறுகாலனியாதிக்கத்தை நிலைநாட்டியது. தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக அடுத்தடுத்து சிரியா, லிபியா என்று காய்களை நகர்த்தியது.

தனது நோக்கங்களுக்குச் சேவைசெய்யும் வகையிலான ஷியா பிரிவு முஸ்லிம்கள் தலைமையிலான ஒரு பொம்மை அரசை இராக்கில் உருவாக்கி 'ஜனநாயக'த்தையும் 'அமைதி'யையும் சாதித்துவிட்டதாகக் கூறிக் கொண்டாலும், அமெரிக்காவால் அதனை உறுதியாக நிலைநாட்டிக் கொள்ள முடியவில்லை. அந்த பொம்மை அரசு பலவீனமானதாகவும், ஷியா பிரிவு முஸ்லிம்களின் ஆதிக்கத்தைக் கொண்டதாகவும் இருந்ததால், சன்னி பிரிவு இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்கள் வளர்ந்து எதிர்த்தாக்குதல் தொடுக்கக் கிளம்பிவிட்டன. இதேபோல சிரியாவிலும் லிபியாவிலும் இஸ்லாமிய அடிப்படைவாதக் குழுக்களைக் கொண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த அமெரிக்கா முன்வைத்த இராணுவ தந்திரத்தின் விளைவாக, இன்று பல்வேறு இஸ்லாமிய ஆயுதக் குழுக்கள் அந்நாட்டு மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்து விட்டன.

ஆப்கானில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்ட பின்னர், அங்கு 'அமைதி'யை நிலைநாட்ட கர்சாய் தலைமையிலான ஒரு பொம்மை அரசை அமெரிக்கா உருவாக்கியது. ஆனாலும் தாலிபான்களை ஒடுக்க முடியாத நிலையில், 'அமைதி'யை நிலைநாட்டுவது என்ற பெயரில் இப்போது 'நல்ல', தாலிபான்களுடன் பேச்சுவார்த்தையை நடத்துகிறது. அதேபோல இராக்கிலுள்ள தனது பொம்மை அரசைப் பாதுகாக்க முடியாத நிலையில், இராக் மற்றும் சிரியாவில் புதியதொரு கூலிப்படையை உருவாக்கி அதன் மூலம் இராக்கின் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தை முடக்கிவிட முயற்சிக்கிறது. இதன் மூலம் இப்பிராந்தியத்தில் உள்நாட்டுப் போர்களையும் பயங்கரவாதத் தாக்குதல்களையும் நிரந்தரமாக்குகிறது.

இராக் உள்நாட்டுப் போரின் பின்புலம் இதுதான். இராக்கிலும் சிரியாவிலும் வளைகுடா நாடுகளிலும் நடக்கும் போர்களுக்கும் ரத்தக்களறிகளுக்கும் காரணமான பிரதான குற்றவாளி அமெரிக்க ஏகாதிபத்தியம்தான். இந்த வரலாற்று உண்மையைப் பின்னுக்குத் தள்ளி விட்டு ஐ.எஸ்.ஐ.எஸ். இடமிருந்து அமெரிக்காதான் இராக்கை காப்பாற்ற வேண்டும் என்பது போன்ற பொதுக்கருத்து உருவாக்கப்பட்டிருக்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் அமெரிக்காவின் மேலாதிக்கப் போர்த் திட்டத்தை ஆதரிக்கும் இந்தியா, அமெரிக்கா உருவாக்கியுள்ள இராக்கிய அரசுக்கு உதவுவதாகவும் மறுநிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதாகவும் கூறிக்கொண்டு அமெரிக்காவுக்கு மறைமுகமாக கைக்கூலி வேலை செய்கிறது. கட்டிடப் பணியாளர்கள் முதல் செவிலியர்கள் வரையிலானவர்களை இராக்கிற்கு அனுப்பி வைக்கிறது. தற்போது உள்நாட்டுப் போரில் சிக்கிக் கொண்டுவிட்ட செவிலியர்கள் உள்ளிட்டோரை மீட்பதற்குப் போர்க்கப்பலை அனுப்பி, தனது புஜபலத்தைக் காட்டும் நாடகத்தை நடத்திவருகிறது, மோடி அரசு. இப்படித்தான் ஆப்கானில் அமெரிக்க பொம்மையாட்சியின் கீழ் கட்டுமானப் பணிகளுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் தாலிபான்களால் கொல்லப்பட்ட போதும், தனது குற்றத்தை மறைத்துக் கொண்டு இந்திய

அரசு நீலிக்கண்ணீர் வடித்தது. இந்திய அரசு மறைமுகமாகச் செய்யும் இந்த அமெரிக்க தொண்டூழியத்தைத்தான் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் வெளிப்படையாகவே செய்து கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவின் மேலாதிக்கப் போர்களுக்கு எதிராக இசுலாமிய சர்வதேசியம் என்ற கற்பனையான தீர்வை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் முன்வைக்கின்றனர். இஸ்லாத்தின் மூலம் அரபு நாடுகளிடையே சகோதரத்துவத்தை நிலைநாட்ட முடியவில்லை. ஷியா மற்றும் சன்னி பிரிவுகளுக்கிடையிலான மோதல்கள் மென்மேலும் அதிகரிக்கின்றனவேயன்றி, குறையவில்லை. அகண்ட இஸ்லாமை நிறுவ முயற்சித்தாலும் அதன் மூலம் காலனியாதிக்கத்தையோ, மேலாதிக்கத்தையோ வீழ்த்த ஒருக்காலும் சாத்தியமில்லை.

வர்க்க உணர்வும் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஜனநாயக அரசியலும்தான் மக்களை ஒன்றிணைக்குமே தவிர, மதத்தின் மூலமாக மக்களை ஒருக்காலும் ஒன்றிணைக்கவோ, ஏகாதிபத்தியங்களின் காலனியாதிக்கத்தை வீழ்த்தவோ முடியாது; மதவெறி பயங்கரவாதத்தை முறியடிக்கவும் முடியாது. இந்த உண்மைகளை உலகுக்கு உணர்த்தியபடியே, அமெரிக்க மேலாதிக்கம் - இஸ்லாமிய பயங்கரவாதம் எனும் இரட்டை நுகத்தடியில் சிக்கிய இராக் மீண்டும் பேரழிவுக்குள் அமிழ்த்தப்படுகிறது.

● பாலன்

### பு.ஜ.தொ.மு. மாநில அமைப்புச் செயலர் வெற்றிவேல் செழியன் கைது:

# ஜேப்பியாருக்கு வாலாட்டும் போலீசு!

**சா**ராய ரவுடி ஜேப்பியாரின் சத்யபாமா பல்கலைக்கழகத்தில் பேருந்து ஓட்டுநர்களுக்காக தொழிற்சங்கம் அமைத்ததற்காக அப்பல்கலைக்கழகத்தில் பேருந்து ஓட்டுநராகப் பணிபுரிந்த வெற்றிவேல் செழியன் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

பல்கலை கழக நிர்வாகத்தின் சட்ட விரோத பணிநீக்கத்துக்கு எதிராகத் தொழிலாளர் நீதிமன்றத்தில் வெற்றிவேல் செழியன் வழக்கு தொடுத்தார். ஜேப்பியார் கைத்தடிகளின் நேரிடையான மிரட்டல்கள், நீதிமன்ற அலைக்கழிப்புகளுக்கு மத்தியில் துவண்டுவிடாமலும், வழக்கை முடித்துக் கொள்ளுமாறு நடைபெற்ற பண பேரங்களுக்கு மசியாமலும் பு.ஜ.தொ.மு.வின் வழிகாட்டுதலில் உறுதியான போராட்டத்தை தொடர்ந்தார் வெற்றிவேல் செழியன். இடைப்பட்ட பத்தாண்டுகளில், பு.ஜ.தொ.மு.வின் மாநில அமைப்புச் செயலராகவும் உயர்ந்தார்.

இந்நிலையில் வழக்கும் வெற்றி பெற்றது. விரும்பத்தகாத கசப்பான நீதிமன்றத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள்ளானது நிர்வாகம். வேறு வழியின்றி வெற்றிவேல் செழியனை வேலையில் சேர்த்துக் கொண்டாலும், முறையான ஆவணங்கள் எதுவுமற்ற ஒரு குப்பை லாரியை ஓட்டச் சொல்லி நிர்ப்பந்தித்தது உள்ளிட்டு பல்வேறு வகையில் மிகவும் கீழ்த்தரமான முறையில் அவரை நடத்தியது, பல்கலைக்கழக நிர்வாகம். இதனை எதிர்த்த வெற்றிவேல் செழியனிடம், ‘‘ஒன்னால ஜேப்பியாரோட மயிரைக்கூடப் புடுங்க முடியாதுடா’’ என்று ஆத்திரமூட்டும் வகையில் பேசியதோடு, தோழரைத் தாக்கவும் செய்திருக்கிறான் மேலாளர் கரீம். அவன் அடித்ததும் தோழரும் அவனைத் திருப்பி அடித்துள்ளார்.

ஆத்திரமூட்டி வீணாக சண்டைக்கு இழுத்துத் தாக்கியதோடு, வெற்றிவேல்செழியன் தன்னை தாக்கிவிட்டதாக சோழிங்கநல்லூர் காவல் நிலையத்தில் பொய்ப் புகாரை அளித்தான், மேலாளர் கரீம். இப்பொய்ப் புகாரின் அடைப்படையில் வெற்றிவேல் செழியனை கைது செய்ய முனைந்தனர், போலீசார். ஜேப்பியாரின் கையாளாகச் செயல்படும் போலீசின் அடாவடித்தனத்தைக் கண்டித்து பு.ஜ.தொ.மு.வின் முன்னணியாளர்கள் வாதிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, ஒரு தொழில்முறை கடத்தல் கும்பலை போலத் திட்டமிட்டு செயல்பட்ட போலீசார் திடீரென்று ஒரு கால் டாக்சியை கொண்டு வந்து நிறுத்தி வெற்றிவேல் செழியனைச் சட்டவிரோதமாகக் கடத்தி சென்று, தாம்பரம் மாஜிஸ்ட்ரேட்டிடம் ஆஜர்படுத்தி புழல் சிறையிலும் அடைத்தனர்.



தோழர் வெற்றிவேல் செழியன்.

பத்தாண்டுகாலம் சட்டப் போராட்டம் நடத்தி மீண்டும் வேலைக்கு சேர்ந்தாலும், நீதிமன்ற உத்திரவை கால்தூசுக்குக் கூட மதிக்காத ஜேப்பியார் போன்ற சாராய ரவுடிகள் தொழிலாளி வர்க்கத்துக்கு விடுக்கும் செய்தி இதுதான், ‘‘போலீசு.. கேசு.. சட்டம்.. நீதிமன்ற உத்தரவு இதெல்லாம் எனக்குப் புரியாது... அடிச்சா திருப்பி அடி..’’

– பு.ஜ.செய்தியாளர்.

ஆம் ஆத்மி:

2

# பிறப்பு இரகசியம்!

**அமெரிக்க ஏகாதிபத்தியம் ஊட்டி வளர்த்துள்ள அரசுசாரா நிறுவனங்களின், குடிமைச் சமூகங்களின் கூட்டணிதான் ஆம் ஆத்மி கட்சி, லோக் சத்தா கட்சி, இன்ன பிற அமைப்புகள்.**

வரலாறு நெடுக ஒன்றைக் கண்டு வந்திருக்கிறோம். மிகச்சிறுபான்மையினரான ஆளும் வர்க்கத்தினர் தமது அதிகாரம், ஆதாயம், செல்வாக்கைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அரசு நிறுவனங்களையும் சமூக அமைப்புகளையும் சார்ந்து நிற்கின்றனர். குறிப்பாக, கடந்த காலத்தில் காலனிய நாடுகளில் சுரண்டப்படும் மக்களைக் கட்டுப்படுத்தவும் ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் ஆத்திரத்தை மத, சமூக முரண்பாடுகள், மோதல்களின் பக்கம் திசைதிருப்பி விடுவதற்காக ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்தினர் உள்நாட்டு, வெளிநாட்டு மத நிறுவனங்களுக்கு நிதி மற்றும் ஆதரவளித்து வந்தனர்.

இந்நிறுவனங்கள் தம்மைப் பொதுவில் சேவை-தொண்டு அமைப்புகள் என்று சொல்லிக்கொண்டாலும், தமது மத அடையாளங்களையும் மத மாற்ற நோக்கங்களையும் ஏகாதிபத்திய எஜமானர்களுக்காக ஊழியம்-உளவு வேலை செய்வதையும் மறைத்துக் கொள்ளவில்லை. ஆன்மீக-மத போதனைகளோடு, உணவு, உடை, கல்வி, மருத்துவம் போன்றவைகளை இலவசமாக வழங்கி மக்களை ஈர்த்தார்கள். காலனிய நாடுகளில் நிலவிய முதலாளித்துவத்திற்கு முந்தைய அடக்குமுறை, சுரண்டல், சமனற்ற சமூக உறவுகள் காரணமாக இந்த வகை சேவை-தொண்டு அமைப்புகள் செல்வாக்குப் பெற்றன.

ஆனால், காலனிய விடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் இந்நாடுகளில் வலுப்பெற்ற பிறகு இந்த வகை சேவை-தொண்டு அமைப்புகள் மீது மக்களுக்குச் சந்தேகங்கள் தோன்றி, அவற்றின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. சீனா, கியூபா புரட்சிகளின் வெற்றி, ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளில் காலனிய எதிர்ப்பு இயக்கங்களின் எழுச்சிகள், குறிப்பாக, வியத்நாம்-லாவோஸ்-கம்போடியாவில் விடுதலைப் போர்களில் பாய்ச்சல் ஆகியவை காரணமாக தனது நேரடி ஆதிக்கத்தை இழக்கும் நாடுகளில் (முன்னாள் காலனிய நாடுகள், சோவியத் ஆதரவு நாடுகள்) ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து தலையீடு செய்வதற்கும், சமூக ஆதரவு-அடித்தளத்தைப் பெறுவதற்கும் ஏகாதிபத்திய எஜமானர்களுக்காக ஊழியம்-உளவு வேலை செய்வதற்கும் வசதியாக புதிய வகை சேவை-தொண்டு அமைப்புகளாக அரசுசாரா தொண்டு நிறுவனங்களைத் (NGOs) திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டனர்.

அவற்றுக்குப் புதிய சித்தாந்த விளக்கத்தையும் நடைமுறை வழிகாட்டுதல்களையும் ஏகாதிபத்தியக் கொள்கை வகுப்பாளர்கள் முன்வைத்தார்கள். ஆன்மீக-மத போதனைகளைவிட மக்கள் தமது உடனடி, அன்றாடப் பொருளாயதத் தேவைகளையே முக்கியமானவையாகக் கருதுகின்றனர். அதனாலேயே அவற்றுக்கான போராட்டங்களில் மக்களை இடதுசாரி இயக்கங்களால் திரட்ட முடிகிறது. ஆகவே, இடதுசாரி இயக்கங்களிடமிருந்து மக்களையும் அதன் முன்னணியாளர்களையும் ஈர்ப்பதற்காக அவர்களின் உடனடி, அன்றாடப் பொருளாயதத் தேவைகளுக்கான சீர்திருத்தங்களைக் கோரும் போராட்டங்களைக் கையிலெடுக்க வேண்டும். பழையவகை சேவை-தொண்டு அமைப்புகள் மக்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தன; அதாவது, இலவசமாக வழங்கின. அதற்கு மாறாக, மக்கள் தமது தேவைகளைத் தாமே போராடிப் பெறுவதற்கு அவர்களை அமைப்பாக்கி, வழிநடத்தும் புதிய வகை சேவை-தொண்டு அமைப்புகளாக அரசுசாரா தொண்டு நிறுவனங்களை (NGOs) உருவாக்கிக் கொண்டனர். அதேசமயம், அவை அரசியலற்றதாகவும் கம்யூனிஸ்டுகளையும், வன்முறைப் புரட்சிப் போராட்டங்களையும் விலக்கி வைப்பதாகவும் இருக்கவேண்டும் என்று வரையறுத்துக் கொண்டனர். (ஆதாரம்: Paulo Freire: Pedagogy of the Oppressed; Peruvian priest Gustavo Gutiérrez: Liberation Theology; WSF reports; பிற....)

இத்தகைய சித்தாந்தம், கொள்கைகள் அடிப்படையில் நிறுவப்பட்ட புதிய வகை சேவை-தொண்டு அமைப்புகள் கடந்த 50,60 ஆண்டுகளாக மக்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் அரசியல், சித்தாந்தபூர்வமான பிரமைகளைத் தோற்றுவிப்பதற்காகவும் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் (NGOs) என்று தம்மைத் தாமே அழைத்துக் கொள்ளுபவை புற்றீசல்களைப் போன்று பல்கிப் பெருகிப் போயுள்ளன.

கார்ப்பரேட் அறக்கட்டளைகளின் பண மூட்டைகளால் ஆயுதபாணியாக்கப்பட்ட இந்த என்.ஜி.ஓ-க்கள் உலகின் மூலை முடுக்கெல்லாம் சிரமப்பட்டு ஊடுருவியிருக்கின்றனர். புரட்சியாளர்களாக உருவாகும் ஆற்றல் கொண்டவர்களைச் சம்பளம் வாங்கும் களப்பணியாளர்களாக மாற்றினர். கலைஞர்கள், அறிவுஜீவிகள், பேராசிரியர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் திரைத்துறைக் கலைஞர்களை பெருநிதியால் வருடிக்கொடுத்து, முற்போக்கான கருத்துகள், விவாதங்களில் இருந்து திசைதிருப்பினர். அடையாள அரசியல், மனித உரிமைகள் எனும் மொழியில் முன்வைக்கப்படும் பன்மைப் பண்பாட்டுவாதம், பெண்ணியம், தலித்தியம், சுற்றுச்சூழல், சமூக முன்னேற்றம் போன்ற கருத்தாக்கங்களை நோக்கி அவர்களை அழைத்துச் சென்றனர்.



(இடமிருந்து) மோடி அரசில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள விவேகானந்தா இண்டர்நேஷனல் ஃபவுண்டேஷனின் இயக்குநர் அஜித் தோவால்; மோடியின் முதன்மைச் செயலராகியுள்ள அந்த ஃபவுண்டேசனின் உறுப்பினர் நிரிப்பேந்திர மிஸ்ரா; கூடுதல் முதன்மைச் செயலராக நியமிக்கப்பட்டுள்ள அதனின் நிர்வாகக் குழு உறுப்பினர் பி.கே.மிஸ்ரா.

பல்வேறு பிரிவு மக்களுடைய நியாயமான தேவைகளுக்காகவும் கோரிக்கைகளுக்காகவும், வாழ்வியல் உரிமைகளுக்காகவும் தேவைகளுக்காகவும் நீதிக்காகவும், சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் சமூக உரிமைகளுக்காகவும் பாடுபடப் போவதாகக் கூறிக் கொண்டு அரசுசாராத் தொண்டு நிறுவனங்கள் (NGOs) அமைக்கப்படுகின்றன. ஆனால், அந்நிறுவனங்கள் கையிலெடுக்கும் பல பிரச்சினைகளை அதிகரித்த அளவில் நிறைவேற்ற முடியாமல் தோற்றுப் போகின்றன. அப்படி அவற்றை முழுமையாக நிறைவேற்றித் தருவது அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் நோக்கமுமல்ல. அதற்காக இறுதிவரை போராடி வெற்றி பெறுவதற்கான வழிமுறையும் அவற்றிடம் இல்லை. அவற்றுக்காக இறுதிவரை போராடுவது அரசுசாராத் தொண்டு நிறுவனங்களின் எல்லாவகையிலான புரவலர்களான ஏகாதிபத்திய எஜமானர்களுக்குத் துரோகமிழைப்பதாகும். இதனால் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் கையிலெடுக்கும் பல பிரச்சனைகளைத் தொங்கலில் விடுவதும் இடையிலேயே கைகழுவி விடுவதும் அதிகமாகி வருகின்றன.

உலகம் முழுவதும் கோடிக்கணக்கான டாலர்கள் பணம் புரளும் பல லட்சம் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள், அவற்றில் நமது நாட்டில் மட்டும் பல பத்தாயிரம் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளன. அவை மிகப்பெரும்பாலும் ஐரோப்பிய-அமெரிக்க-ஜப்பானிய அரசு மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெருந்தொகையாக ஆண்டுதோறும் பெறுபவை. பெரிய அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் எல்லாம், கொள்ளை இலாபமடிக்கும் ஏகபோக கார்ப்பரேட் தொழில் கழகங்களின் தலைமை நிர்வாகிகளுக்குச் சமமான ஊதியம், சொகுசுக் கார், அடுக்குமாடி பங்களாக்கள் முதலான வசதிகளும் பெறுகிறார்கள். அவர்கள் பல்வேறு நாடுகளில் நடக்கும் சர்வதேச மாநாடுகளுக்கு விமானங்களில் பறக்கிறார்கள்; பன்னாட்டு கார்ப்பரேட், நிதி நிறுவனங்களின் உயர் அதிகாரிகளின் தோளோடு தோள் உரசிக் கொண்டு உலகின் பல நாட்டு அரசுகளின் கொள்கை முடிவுகளை விவாதிக்கிறார்கள், அவற்றுக்கு ஆலோசனைகள் வழங்குகிறார்கள். இந்தக் கொள்கை முடிவுகள் பெரும்பாலும் அந்நாடுகளின் ஏழை-எளிய உழைக்கும் மக்களுக்கு எதிரானவையாக இருக்கின்றன. இந்த நிலையில், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் (NGOs) ஒரு பரிணாமத்தை அடைந்தன. பல்வேறு பிரிவு மக்களுடைய அடையாள அரசியல் சார்ந்த பகுதிக் கோரிக்கைகள், வாழ்வியல் உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பிற சமூகச் சீர்திருத்தங்களுக்கான செயல்திட்டங்களை முதன்மையாகக் கொண்டிருந்தன. பொதுவில் அரசியல், அரசியல்வாதிகளுக்கு எதிராக மக்களிடையே நிலவும் அரசியலுக்கு அப்பாற்பட்ட பிழைப்புவாத நோக்கிலான கருத்தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மக்களைத் திரட்டி வந்தனர்.

ஆனால், இவை அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் ஏகாதிபத்திய எஜமானர்களுடைய பன்னாட்டு அரசியல் நலன்களுக்குப் போதுமானவையாக இல்லை. அரசுசாரா தொண்டு நிறுவனங்களையும் உள்ளடக்கிய குடிமைச் சமூகங்கள் (Civil societies) என்ற புதிய மேடைகளை உலகின் பல நாடுகளிலும் அவர்கள் கையிலெடுத்துக் கொண்டார்கள். அரசுசாராத் தொண்டு நிறுவனங்கள் கடந்த காலத்தில் தாம் அறிவித்துக் கொண்ட அரசியல் வரம்புகளைத் தாண்டி, தற்போது நிறுவப்பட்டுள்ள அரசுகளுக்கு அரசியல் அழுத்தம் கொடுக்கவும், அரசு அமைப்புக்குள்ளாகவே நுழைந்து அதன் கொள்கை வகுப்பு -அமலாக்க அமைப்புகளில் பங்கேற்கவும் குடிமைச் சமூகங்கள் என்ற அரசியல்-அமைப்புக் கருவியை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இந்த அடிப்படையில், இந்த நோக்கில், இந்தப் பின்னணியில் தோற்றமெடுத்ததுதான் ஆம் ஆத்மி கட்சி. அக்கட்சியின் ''கொள்கைப் பிரகடனங்களும்'' நடைமுறைகளும் இக்கருத்துக்கு ஆதாரமாக விளங்குகின்றன.




பிரதமர் அலுவலகத்திற்கு ஆள் சேர்ப்பு மையமாக மாறியுள்ள தில்லியிலுள்ள விவேகானந்தா இண்டர்நேஷனல் ஃபவுண்டேஷனின் தலைமை அலுவலகம்.

சொல்லப்போனால், குடிமைச் சமூகங்கள் (Civil societies) எனும் அரசியல்-அமைப்புக் கருவி முற்றிலும் புதியதான கண்டுபிடிப்பு அல்ல. சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலான முன்னாள் சோசலிச நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்துவதற்கான அரசியல்-அமைப்புக் கருவிகளாக மேலை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்தியவைதாம். முன்னாள் சோசலிச நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்ற கேள்வி உலகமெங்குமுள்ள முற்போக்காளர்கள் பலரிடம் இன்னும் நீங்காத கேள்வியாகவே நீடிக்கிறது. ஆனால், இக்கேள்விக்கான பதில்கள் இன்றைய இணையத் தளங்களில் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றில் ஒன்று ''போலந்தில் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் (NGOs) நிறுவிக் கொள்வதற்கான அனுமதி 1989-இன் மத்தியில் முழு நடைமுறைக்கு வந்தது. ஆனால், பழைய கட்டமைப்புக்குள்ளாகவே அதன் இறுதிக் கட்டத்தில் அங்கே குடிமைச் சமூகங்கள் மிக விரைவான வளர்ச்சி காணத் தொடங்கி விட்டன.''(www.cbos.plPLw ydarzenia/ 04.../Civil% 20society %20in% 20 Poland.pdf)

சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலான முன்னாள் சோசலிச நாடுகளில் மட்டுமல்ல, ''ஜனநாயமில்லாத நாடுகளில்'' ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்துவதற்கும் அல்லது இந்தியா போன்ற ''வளரும் ஜனநாயக நாடுகளில்'' (தனது முழுக்கட்டுப்பாட்டுக்குள் வராத நாடுகளை ஏகாதிபத்தியங்கள் இப்படித்தான் அழைக்கின்றன) ஆட்சி மாற்றங்களை அரங்கேற்றுவதற்கும் அரசுசாராத் தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கிய குடிமைச் சமூகங்களை அரசியல் - அமைப்புக் கருவிகளாக ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்துகின்றன.

குறை வளர்ச்சியுள்ள நாடுகளில் ஆட்சி மாற்றம் (Regime changes) என்ற அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகப் போர்த் தந்திரத்தில் குடிமைச்சமூகங்கள் முக்கிய அரசியல் -அமைப்புக் கருவிகளாக உள்ளன. குறிப்பாக, தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையும், அமெரிக்க மேல்நிலை வல்லரசின் உலக மேலாதிக்கம் நோக்கிலான மறுகாலனியாக்கம் என்கிற அரசியல் கொள்கையும் திணிக்கப்பட்ட பிறகு இந்நாடுகளில் அரசின் சமூக, அரசியல், பொருளாதாரப் பாத்திரம் குறித்து புதிய விளக்கங்களும் வரையறைகளும் அளிக்கப்படுகின்றன.

பொதுவில் நாட்டின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு முதலான சில விவகாரங்கள் தவிர சமூகம், மதம், கல்வி-மருத்துவம், பண்பாடு போன்றவற்றிலோ, குறிப்பாக மக்கள் நலன், திட்டமிடுதல், வளர்ச்சி என்ற பெயரில் நாட்டின் பொருளாதார விவகாரங்களிலோ அரசு தலையீடு செய்யக்கூடாது; இந்த விவகாரங்களைச் சந்தையும் சமூகமும் மூலதன நிர்வாகிகளும் (அதாவது கார்ப்பரேட் முதலாளிகளும்) கவனித்துக் கொள்வார்கள்; சாரமாகச் சொல்வதானால், கார்ப்பரேட் தரகு முதலாளிகள், ஏகாதிபத்தியப் பன்னாட்டு தொழிற் கழகங்களின் நலன்களுக்கேற்ப செயல்படும் எலும்புக் கூடு போன்ற அரசு அமைப்பு மட்டுமே இருக்க வேண்டும்; இந்த வரம்பைத் தாண்டி அவற்றின் செயல்பாடுகளில் தலையிடுவது குடிமைச் சமூகத்தின் பொருளாதார-தொழில் உரிமைகளை மறுப்பதும் எதேச்சதிகாரமும் ஆகும். - இவைதாம் அரசின் கடமைகள், பணிகள், வரம்புகள் குறித்த ஏகாதிபத்திய கைக்கூலிகளது பிரச்சாரம்.

அரசியல் கட்சிகளின், தலைவர்களின் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள், நம்பிக்கைத் துரோகங்கள், கிரிமினல் குற்றங்கள் முதலான சீரழிவுகள், அவர்களுக்கெதிரான மக்கள் வெறுப்பு ஆகியன மேற்படி பிரச்சாரத்துக்குச் சாதகமாக அமைகின்றன. இவ்வாறு அரசும், அரசியல் தலைவர்களும் இழிவுற்று, சிறுமைப்பட்டுப் போகும் நிலையில், நாட்டின் அரசியல், பொருளாதார வாழ்வில் சிந்தனை குழாம்கள்- குடிமைச் சமூகங்களின் பங்குபாத்திரம் முன்தள்ளப்படுவயையும் முக்கியத்துவம் பெறுவதையும் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த ஏப்ரல்(2014) புதிய ஜனநாயகம் இதழில் இடம் பெற்றிருந்த ''ஆம் ஆத்மி கட்சியின் பிறப்பு இரகசியம்'' என்ற கட்டுரையில் சிந்தனைக் குழாம்கள் மற்றும் குடிமைச் சமூகங்கள் ஆகிய இரு புதிய விசயங்களை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தோம். அதில் கீழ்க்கண்ட கருத்துக்களைக் குறிப்பிட்டிருந்தோம்.

மத்திய, மாநில அரசுகளின் அரசியல், பொருளாதாரம், சமூகம், மருத்துவம்-சுகாதாரம், கல்வி-பண்பாடு உட்பட அனைத்து அரசுத் துறைகளிலும் ''கொள்கை'' முடிவெடுக்கவும், ''திட்டங்கள்'' வகுக்கவும் பொறுப்பேற்கும் மந்திரிகளில் ஏறக்குறைய எவருக்குமே அந்தத் ''தகுதி'' கிடையாது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்த காலியிடத்தை நிரப்பவும் இந்த உண்மையை இப்போது அப்பட்டமாகவே ஒப்புக் கொள்ளவும் வேண்டிய நிலைமை உருவாகியிருக்கின்றது. சிந்தனைக் குழாம்கள் (''திங்க் டாங்க்ஸ்'') என்ற

பெயரில் தொழில்முறை கொள்கை ஆய்வாளர்கள்-ஆலோசகர்களைக் கொண்ட அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஒரு சிந்தனைக் குழாம் (அல்லது ஒரு கொள்கை வகுப்புக் கழகம், ஆய்வுக் கழகம் மற்றும் பிற) என்பது சமூகக் கொள்கைகள், அரசு நிர்வாகம், அரசியல் போர்த்தந்திரம், பொருளாதாரம், இராணுவம், தொழில்நுட்பம், பண்பாடு முதலானதுறைகளில் ஆய்வுகளையும் பரிந்துரைகளையும் செய்யும் ஒரு அமைப்பாகும். அரசுக்கும், தொழிலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் தேவையான ஆய்வுகளும், ஆலோசனைகளும் கட்டணம் பெற்றுக்கொண்டு வழங்கும் சேவை நிறுவனங்கள் ஆகும்.

**குடிமைச் சமூகங்கள் (Civil Societies) எனும் அரசியல் அமைப்புக் கருவி முற்றிலும் புதியதான கண்டுபிடிப்பு அல்ல. சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதலான முன்னாள் சோசலிச நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்துவதற்கான அரசியல் அமைப்புக் கருவிகளாக மேலை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்தியவைதாம்.**

''ரக்ஷாக் ஃபவுண்டேசன், விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசன், இந்தியன் கவுன்சில் ஆன் குளோபல் ரிலேஷன்ஸ் போன்றவை இந்தியாவிலுள்ள சிந்தனைக் குழாம்களில் சில. மொத்தம் 269 சிந்தனைக் குழாம்களைக் கொண்டுள்ள நமது நாடு, அவற்றின் எண்ணிக்கையில் உலகிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்திய அரசின் அயலுறவுத்துறை, போலீசு, இராணுவத்துறை, பல்கலைக்கழகக் கல்வி, உணவுப் பதனிடும் திட்டங்கள், வேலைவாய்ப்புத் திட்டங்கள், சட்டச்சீர்திருத்தங்கள், தொழிலுறவு, அரசு நிர்வாகச்சீர்திருத்தங்கள், அவற்றைக் கனினிமயமாக்கம்-நவீனமயமாக்கம் செய்தல் - இப்படிப் பன்முகப் பணிகளில் இந்தச் சிந்தனைக் குழாம்கள் ஈடுபடுகின்றன.

இந்தப் பன்முகப் பணிகளில் சிந்தனைக் குழாம்கள் எப்போதும் தனித்துச் செயல்படுவதில்லை. சிந்தனைக் குழாம்களும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கிய குடிமைச் சமூக அமைப்புகளும் சேர்ந்துதான் செயல்படுகின்றன. சிந்தனைக் குழாம்களுக்குத் தேவையான கள ஆய்வுகள் செய்வது, தகவல்களைத் திரட்டித் தருவது, அவை பரிந்துரைக்கும் கொள்கைளையும், திட்டங்களையும் அரசை ஏற்கச் செய்யும் அழுத்தம் கொடுக்கும் இயக்கங்களைக் கட்டமைப்பது, அவற்றின் அமலாக்கத்தில் பங்கேற்பது மற்றும் அந்த அடிப்படையிலான அரசின் சட்ட திட்டங்கள் மக்களுக்கு ஏற்புடையவைதானா, இல்லையென்றால் மாற்றுக்களைப் பரிந்துரைப்பது - என்று பலவாறு அரசுசாரா தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கிய குடிமைச் சமூக அமைப்புகளும் சேர்ந்துதான் இயங்குகின்றன.

விவேகானந்தா இண்டர்நேஷனல் ஃபவுண்டேஷனின் பொருளாதார ஆய்வு மைய துணைத்தலைவர் விவேக் தேப்ராவை இணை ஆசிரியராகக் கொண்ட ''இந்தியாவை மீண்டும் தடகளத்திற்குக் கொண்டு வந்து நிறுத்துவது'' என்ற நூலை வெளியிடும் பிரதமர் மோடி.



சிந்தனைக் குழாம்கள், குடிமைச் சமூகங்கள், அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் முதலான இவையெதுவும் பலரும் நம்புவதுபோல தனிநபர் முன்முயற்சியால் தன்னியல்பாக உருவானவை அல்ல. பன்னாட்டு தொழிற்கழங்கள், உலக வங்கி, சர்வதேச நிதியம் போன்ற நிறுவனங்கள், ஏகாதிபத்திய அரசுகளின் அரசியல், இராணுவ-உளவு, சமூக, கல்வி-பண்பாட்டு ஆய்வு நிறுவனங்களால் திட்டமிட்டு உருவாக்கி, நெறிப்படுத்தி, இயக்கப்படுபவை.

அமெரிக்காவின் ஃபிலடெல்பியாவில் உள்ள அயலுறவுக் கொள்கை ஆய்வகத்தில் 1989-ஆம் ஆண்டு ''சிந்தனைக் குழாம்கள்-குடிமைச் சமூகங்கள் நிறுவனங்களின் திட்டம்''(TTCSP) அமைக்கப்பட்டது; அது, 2008-ஆம் ஆண்டு பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் திட்டத்துக்கு மாற்றப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் கடந்த 20 ஆண்டுகளாகச் சிந்தனைக் குழாம்கள்-குடிமைச் சமூகங்கள் நிறுவனங்களை மதிப்பீடு செய்கிறது. சர்வதேச அளவிலான கொள்கை-ஆய்வு, கொள்கை-திட்டங்கள் வகுப்பு மற்றும் ஆலோசனை நிறுவனங்களையும் மற்றும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கிய சமூக அமைப்புகளையும் கொண்ட ஒரு வலைப்பின்னல் உலகம் முழுவதும் கட்டமைக்கப்படுகிறது. அவை உலகின் பற்பல நாடுகளின் அரசுகளோடு நெருக்கமாக இணைந்து செயல்படுகின்றன.

இந்தியாவிலுள்ள சிந்தனைக் குழாம்களில் ஒன்றாக பு.ஜ. இதழ் குறிப்பிட்டிருந்த ''விவேகானந்தா இன்டர் நேஷனல் ஃபவுண்டேசன்'' இப்போது ஆட்சியைப் பிடித்திருக்கும் மோடி நிர்வாகத்தில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. ''தில்லியிலுள்ள 'சிந்தனைக் குழாம்' புதுப்

பிரதமர் அலுவலகத்துக்கான ஆள்சேர்ப்பு மையமாகத் தற்செயலாக உருவாகியிருக்கிறது'' என்ற தலைப்பிட்டு கடந்த ஜூன் 17-ந் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு செய்தியொன்று வெளியிட்டிருக்கிறது. அதில்,

> **விவேகானந்தா இண்டர்நேஷனல் ஃபவுண்டேசன் தன்னைக் கட்சி சார்பற்ற அமைப்பென்று சொல்லிக்கொண்டாலும் அது காங்கிரசு கூட்டணிக்கு எதிரான இயக்கங்களை நடத்திய சக்திகளை அணிதிரட்டுவதற்கு மேடை அமைத்துத் தருவதில் ஒரு முக்கிய பங்காற்றிக் கொடுத்துள்ளது.**

தலைநகரின் இதயம் போன்ற பகுதியில் அமைந்துள்ளது, ''விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசன்''. தொடங்கி ஐந்தாண்டுகளான இந்த சிந்தனைக் குழாம் புதுப் பிரதமர் அலுவலகத்துக்கான ஆள்சேர்ப்பு மையமாகத் தற்செயலாக உருவாகியிருக்கிறது. விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசனுடைய இயக்குநரான அஜித் தோவால் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகியுள்ள அதேசமயம், பிரதமர் நரேந்திர மோடியின் முதன்மைச் செயலராக விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசனுடைய உறுப்பினர் நிரிப்பேந்திர மிஸ்ராவும், கூடுதல் முதன்மைச் செயலராக அதன் நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் மூத்த இணையர் பி.கே. மிஸ்ராவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

மோடி கடந்த வாரம் பிரதமரான பிறகு வெளியிட்ட முதல் நூல் ''இந்தியாவை மீண்டும் தடகளத்திற்குக் கொண்டு வந்து நிறுத்துவது''; இது விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசனுடைய பொருளாதார ஆய்வு மையத்தின் துறைத்தலைவர் (டீன்) விவேக் தேப்ராயை இணை ஆசிரியராகக் கொண்டது. ஃபவுண்டேசனுடைய அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் துறைத்தலைவர் (டீன்) வி.கே. சரஸ்வத் (இராணுவத்தின் ஆயுதத் தளவாட ஆய்வக முன்னாள் பொது இயக்குநர்) மோடி அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆர். சிதம்பரத்திற்குப் பதிலாக நியமனம் பெறுவார்.

சிந்தனைக் குழாம்கள்-குடிமை சமூகங்கள் நிறுவனங்களின் திட்டம் (TTCSP) என்ற அமைப்பும் ஆசிய வளர்ச்சி வங்கியும் இணைந்து ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் 2013 ஜூன் 12-14 தேதிகளில் நடத்திய ஆசிய வட்டார சிந்தனைக் குழாம் உச்சி மாநாடு.




விவேக் தேப்ராயினுடைய நூலை வெளியிட்ட மோடி, சிறந்த கொள்கை கட்டுமானங்களை உருவாக்குவதற்காக ''அறிவுஜீவிகளது சிந்தனைக் குழாம்களைக் கணிசமான அளவு செழுமைப்படுத்த வேண்டும்'' என்று கூறினார்.

(இந்த விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசன் என்ற சிந்தனைக் குழாம், விவேகானந்தா கேந்திரம் ஆகியன ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஒரு பிரிவு அமைப்பினால் தொடங்கி நடத்தப்படுவது. இந்த விவேகானந்தா கேந்திரத்தின் தோற்றம் குறித்த விவரங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு புதிய ஜனநாயகத்தில் எழுதி தனி வெளியீடாகவும் கொண்டு வந்திருக்கிறோம்.)

விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசன் தன்னைக் கட்சி சார்பற்ற அமைப்பென்று சொல்லிக் கொண்டாலும் அது காங்கிரசு கூட்டணிக்கு எதிரான இயக்கங்கள் நடத்திய சக்திகளை அணிதிரட்டுவதற்கு மேடை அமைத்துத் தருவதில் ஒரு முக்கிய பங்காற்றிக் கொடுத்துள்ளது. யோகாகுரு ராமதேவ் தலைமையில் ஒரு ஊழல் எதிர்ப்பு முன்னணியை உருவாக்குவது என்ற முடிவு விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசனில்தான் எடுக்கப்பட்டது என்று 2012 ஆகஸ்டில் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு எழுதியது. அதற்கு ஓராண்டுக்கு முன்பு ஆர்.எஸ்.எஸ். சித்தாந்த தலைவர் கோவிந்தாச்சார்யாவின் ராஷ்ட்ரீய சுவபிமான் அந்தோலன் என்ற அமைப்போடு விவேகானந்தா இன்டர்நேஷனல் ஃபவுண்டேசன் இணைந்து ஊழலுக்கும் கருப்புப் பணத்துக்கும் எதிரான ஒரு கருத்தரங்கம் நடத்தியது. ராமதேவ், அரவிந்த் கெஜரிவால், கிரண் பேடி ஆகியோர் அதில் பங்கேற்றனர். அக்கருத்தரங்கின் முடிவில் ராமதேவைப் புரவலராகவும் கோவிந்தாச்சார்யாவை ஒருங்கிணைப்பாளராகவும் கொண்ட ஒரு ''ஊழல் எதிப்பு முன்னணி'' அமைக்கப்பட்டது. அஜித் தோவாலும் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத் தலைவர் எஸ். குருமூர்த்தியும் அதன் உறுப்பினர்களாயிருந்தனர். (ஆதாரம்: ஜூன் 17-ந்தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ்)

சிந்தனைக் குழாம்கள் - குடிமைக் சமூகங்கள் நமது நாட்டில் எந்த அளவு, எவ்வாறு வேறூன்றியுள்ளன என்பது இதிலிருந்து தெளிவாகும் என்று நம்புகிறோம்.

- தொடரும்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

கட்டமைப்பு வசதிகள் குறித்து தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளில் ஆய்வு செய்து, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து போர்க்கால அடிப் படையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் மாநாட்டு அரங்கில் நிறைவேற்றப்பட்டன.

பின்னர், மக்கள் மன்றத்திலிருந்து வானொலித்திடல் வரை எழுச்சிமிகு முழக் கங்களுடன் நடந்த பேரணியைத் தொடர்ந்து மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தலைமையாசிரியர் பாக்கியராஜ், எழுத்தாளர் இமயம், கவிஞர் துரை.சண்முகம், வழக்குரைஞர் ராஜு ஆகியோர் உரையாற்றினர்.

பொதுக்கூட்டத்தில் பேசிய எழுத் தாளர் இமயம் ''படிப்பு என்பது, தனிமனித ஆளுமையை வளர்ப்பது, சுயசிந் தனையை வளர்ப்பது, முற்போக்குச் சிந் தனையை வளர்ப்பது, தன்னைத்தானே தயாரித்து கொள்வது, சமூகத்தைப் புரிந்து கொள்வது, அறிவியல் பூர்வமாக புரிந்து கொள்வது என்பதுதான்! ஆனால் கல்வி என்பது வேலை, பணம், பதவி என்பதற் காகதான் என்ற மூட நம்பிக்கையை விட் டொழிக்க வேண்டும்'' என்றார்.

விருத்தாசலத்தைச் சுற்றியுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் விவாத அரங்கத்திலும் பேச்சுப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் உற்சாகத்துடன் பங்கேற்றிருப்பதும்; இம்மாநாட்டைச் சிறப்பாக நடத்துவ தற்குப் பல்வேறு வகைகளிலும் பங்களிப்பைச் செய்ததோடு பெருமளவில் அரசுப்பள்ளி ஆசிரியர்கள் ஊக்கமுடன் இம்மாநாட்டு நிகழ்வில் பங்கேற்றி ருப்பதும்; தனியார் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமைக்காக்கான பெற்றோர் சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் கல்வி தனியார்மய ஒழிப்பு மாநாட்டு வேலைகளில் பங்கேற்றதன் ஊடாக தனியார் பள்ளி மீதான மோகத்தைத் தகர்த்து தங்களது பிள்ளைகளைத் தனியார் பள்ளியிலிருந்து விலக்கி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சேர்த் துள்ளனர் என்பதும் இம்மாநாட்டிற்கு கிடைத்த முதற்கட்ட வெற்றியாகக் குறிப் பிடலாம்.

– பு.ஜ.செய்தியாளர்.

## தனியார் பள்ளி முதலாளிகள்: தமிழ் இன விரோதிகள்!




**க**ல்விக் கட்டணக் கொள்ளையில் ஈடுபடுவது ஒருபுறமிருக்க, பொதுப் பாடத்திட்டத்தையும், தமிழ்வழிக் கல்வியையும் மூர்க்கத்தனமாக எதிர்ப்பது என சமூகத்தையே அச்சுறுத்தும் மாஃபியாக்களாக வளர்ந்து நிற்கின்றனர் தனியார் கல்விக் கொள்ளையர்கள்.

✸ தமிழகத்தில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த வந்த மெட்ரிகு லேசன், ஓரியண்டல், ஆங்கிலோ - இந்தியன், மாநிலக் கல்வி வாரியம் ஆகிய நான்கு வகைப் பாடத்திட்டங்கள் ரத்து செய்யப்பட்டு பொதுப் பாடத்திட்ட முறை அமல்படுத்தப்பட்டது. இதனையடுத்து, பொதுக்கல்வி வாரியம் ஏற் படுத்தப்பட்டு அதன் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்துப் பள்ளிகளையும் அரசு கொண்டு வந்திருக்க வேண்டும். இதனை செய்யத் தவறியது ஒருபுறமிருக்க, இன்று வரையில் தங்கள் பள்ளியின் பெயருக்குப் பின்னால் மெட்ரிகுலேசன், ஓரியண்டல், ஆங்கிலோ - இந்தியன் என்ற பெயரைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி கல்லாகட்டி வரும் தனியார் கல்விக் கொள்ளையர்களையும் கண்டுகொள்வதில்லை.

இந்நிலையில், சட்டவிரோதமான முறையில் தனியார் பள்ளிகள் தங்கள் பெயருக்கு பின்னால் மெட்ரிகுலேசன், ஓரியண்டல், ஆங்கிலோ- இந்தியன் பெயர்களை பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கக் கோரி மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கம் சார்பில், சென்னை உயர் நீதி மன்றத்தில் மே-29 அன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

✸ தமிழகத்தில் பத்தாம் வகுப்பு வரையில் தமிழை ஒரு மொழிப் பாடமாகவும், கணிதம், அறிவியல் உள்ளிட்டு கற்பிக்கப்படும் பிற பாடங் களில் ஏதேனும் ஒன்றையும் தமிழ் வழியில் கட்டாயம் கற்பித்தாக வேண்டும் என்ற 2005-ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்து தனியார் பள்ளி முதலாளிகள் வழக்கு தொடுத்திருக்கின்றனர். பலநாட்டு அனுபவங்களிலிருந்தும் அறிவியல் பூர்வமாகவும் தாய்மொழியில் மாணவர்களுக்குக் கற்பிப்பதன் மூலம்தான் விசயங்களைப் புரிந்துகொண்டு கற்றுக்கொள்ள முடியும் என்று கல்வியாளர்கள் தொடர்ந்து வலியுறுத்திவரும் நிலையில், மொழிப்பாடம் என்ற அளவில் மருந்துக்குக்கூட தமிழைக் கற்பிக்க தனியார் பள்ளிகள் தயாராக இல்லை. மூர்க்கத்தனமாக இவற்றை எதிர்த்து வருகின்றனர்.

தமிழ் மொழிக்கு எதிராகச் செயல்படும் தனியார்ப் பள்ளிகளைக் கண்டித்தும் தமிழ்வழிக் கல்வியை அமல்படுத்தக் கோரியும் ஜூன்-12 அன்று மாலை தஞ்சை இரயிலடியில் மக்கள் கலை இலக்கியக் கழகம் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. மேலும், அரசின் உத்தரவை எதிர்த்து தனியார் பள்ளி முதலாளிகள் தொடுத்திருக்கும் வழக்கில் எதிர்வாதியாக தன்னையும் இணைத்துக்கொண்டிருக்கிறது, ம.உ.பா.மையமும் மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும்.

– பு.ஜ. செய்தியாளர்.



# சென்னை கட்டிடச் சரிவுப் படுகொலை: குற்றவாளிகள் யார்?

ஜூன் 28 மாலை, ஒரு குடிசை வீடு கூடச் சரிந்திராத ஒரு மணிநேர மழையில், சென்னை மவுலிவாக்கத்தில் கட்டுமானப்பணி முடியும் நிலையில் இருந்த 11 மாடிக் கட்டிடம் பிளந்து வீழ்ந்திருக்கிறது. தரைத் தளத்தில் வார ஊதியம் வாங்குவதற்காகக் கூடியிருந்த தொழிலாளர்கள் 19 பேரின் உடல்கள் இதுவரை மீட்கப்பட்டிருக்கின்றன. இடிபாடுகளில் சிக்கியவர்கள் சுமார் நூறு பேராக இருக்கக்கூடும்.

உயிருக்குப் போராடுபவர்கள் உழைக்கும் வர்க்கத்தினர் என்பதால், மீட்புப் பணிகள் ஆமை வேகத்தில் நடக்கின்றன. தொழிலாளர்களில் பலர், ஆந்திர மாநிலத்தினர். பலர் சிறீகாகுளம் பகுதியில் அணைக்கட்டுக்கு நிலத்தைக் கொடுத்துவிட்டு, கூலிகளாகி சென்னை வந்தவர்கள். மொழி தெரியாத ஊரில், தமது சொந்தங்கள் உயிரோடு இருக்கிறார்களா எனத்தெரியாமல் தவிக்கின்ற அவர்களது குடும்பத்தினரின் கதறல் நெஞ்சைப் பிழிகிறது.

இது விபத்தல்ல, பச்சைப் படுகொலை. இந்தக் கொலைக் குற்றத்தின் முதல் குற்றவாளி அரசு. ஆனால் பார்வையிட வந்த முதல்வரோ, கட்டிடத்திற்கு அனுமதி அளித்த சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் (சி.எம்.டி.ஏ.) மீது எந்தத் தவறும் இல்லை என்று புலனாய்வு தொடங்குவதற்கு முன்னரே முந்திக்கொண்டு அறிவிக்கிறார். செத்துப்போன தெலுங்கு தொழிலாளிகளுக்கு ரூ.5 லட்சம் என்று சந்திரபாபு நாயுடு அறிவித்தவுடனே, செத்துப்போன தமிழனுக்கு ரூ.5 இலட்சம் அறிவித்து, மக்களின் வாயை அடைக்கிறார். கருணாநிதி, யாருக்கும் நோகாமல் மழுப்பலாக அறிக்கை விடுகிறார். இடி விழுந்த காரணத்தினால்தான் கட்டிடம் சரிந்து விட்டது என்று அலட்சியமாகப் புளுகும் கட்டுமானக் கம்பெனி முதலாளியின் மீது, குற்றமுறு அலட்சியம் என்ற சாதாரண குற்றப்பிரிவின் கீழ் வழக்கு போடப்பட்டிருக்கிறது.

யாரெல்லாம் குற்றவாளிகள் என்பது ஊரறிந்த விசயம். கால்வாய் இருந்த இடத்துக்கு பட்டா கொடுத்திருக்கிறது வருவாய்த்துறை; பதிவு செய்து கொடுத்தது பத்திரப்பதிவுத் துறை; நெகிழ்வான அந்த மண்ணின் மீது 11 மாடி கட்டலாம் என மண் பரிசோதனை அறிக்கையை அங்கீகரித்திருக்கிறது சி.எம்.டி.ஏ. 11 மாடிக் கட்டிடம் கட்டத் தேவையான அளவு அங்கே சாலையின் அகலம் இல்லை; கட்டிடத்தின் சுற்றுப்புறத்தில் போதிய காலியிடமும் விடப்படவில்லை; இந்த விதிமீறல்களை அங்கீகரித்து அவற்றை ‘‘வரன்முறை’’ செய்து கொடுத்து, கூடுதலாக நீச்சல் குளம் கட்டவும் அனுமதியளித்துள்ளது சி.எம்.டி.ஏ.வின் அடுக்கு மாடிக் கட்டிடங்களுக்கான உயர்நிலைக் குழு. இதற்கேற்ப விதிகளைத் தளர்த்தி நகர்ப்புற வளர்ச்சித்துறை ஒரு அரசாணையும் (எண்:239) பிறப்பித்துள்ளது. இவ்விவரத்தை தினமலர் வெளியிட்டிருக்கிறது.

இது புதிதாக நடந்துவிட்ட குற்றமல்ல. சென்னை தி.நகர் கடைவீதியில், மக்களின் உயிருக்கு பேராபத்து விளைவிக்கும் வண்ணம் கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்களை இடிப்பதற்கு 2007-இலேயே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னரும், நீதிமன்றத் தடைகள், தி.மு.க., அ.தி.மு.க. அரசுகளின் வரன்முறைப்படுத்தும் அரசாணைகள் - என இந்தக் ‘‘குற்றத்திலிருந்து’’ தான் அனைவருக்கும் பணமழை பொழிந்து கொண்டிருக்கிறது.

அமைச்சர்கள், கவுன்சிலர்கள், போலீசு-அரசு அதிகாரிகளின் லஞ்ச வருவாய், ஊடகங்களின் விளம்பர வருவாய், கூலிப்படைகளின் வருவாய், சிமெண்ட்-இரும்பு முதலாளிகளின் கொள்ளை லாபம், நகரத்துக்கு பிழைக்க வரும் விவசாயிகளுக்கான வேலைவாய்ப்பு - என மொத்தப் பொருளாதாரத்தின் இயக்கமும் இந்தக் ‘‘குற்றத்தின்’’ வளர்ச்சியைச் சார்ந்தே வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

ஆறுகள்-ஏரிகள்-காடுகள்-விளைநிலங்களின் அழிப்பு, வங்கிகளை அழிக்கும் வாராக்கடன்கள், தண்ணீர்ப் பஞ்சம் - என அழிவுகள் பன்முகமாகப் பெருகியபோதிலும், ரியல் எஸ்டேட் சூதாட்டம் என்றழைக்கப்படும் இந்தக் குற்றத்தைத்தான் முன்னேற்றம் என ஆளும் வர்க்கம் சித்தரிக்கிறது. இந்தக் கட்டிடச்சரிவு அடித்தளமில்லாத ‘‘வளர்ச்சி’’ தோற்றுவிக்கக் கூடிய திடீர்ப் பொருளாதார வீழ்ச்சியின் உருவகம்.

மவுலிவாக்கத்தில் நடந்ததைப் போலவே, அத்தகைய பொருளாதார வீழ்ச்சியில் முதலில் நசுங்கி மடிபவர்கள் அடித்தளத்தில் இருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர்தான். அதற்குப் பின்னர் - மேல்தளங்களில் முதலீடு செய்த நடுத்தர வர்க்கம். இரு பொருள்களிலும் இதுவே உண்மை.